

இராமலிங்க வள்ளலாரும் செய்குதம்பிப் பாவலரும்

செ. திவான்

இராமலிங்க வள்ளலாரும் செய்குதம்பிப் பாவலரும்

செ.திவான்

நூலாசிரியரின் 94வது நூல்

நூலின் தலைப்பு	:	இராமலிங்க வள்ளலாரும் செய்குதம்பிப் பாவலரும்
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான்,
பதிப்பு ஆண்டு	:	2015, நவம்பர்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	124
அச்சிட்டோர்	:	சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி
நூல் வடிவமைப்பு	:	ஜெஆர் கம்யூட்டர்ஸ், நெல்லை, 9489115236
விலை	:	ரூ.100/-

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேருறக்கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்

- வள்ளலார்
திருவருட்பா ஆறாம் திருமுறை
பிள்ளைப் பெரு விண்ணப்பம்
பாடல்-62

சுஹைனா பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை, நெல்லை,
பாளையங்கோட்டை - 627002 போன்: 0462-2572665

உள்ளே.....

எண்ண அலைகள்	04
சிதம்பரம்	07
இராமலிங்க வள்ளலார்	11
ஆறுமுகநாவலர்	27
முதற்கட்ட அருட்பா - மருட்பா போர்	33
நா.கதிரைவேல் பிள்ளை	57
செய்குதம்பிப் பாவலர்	77
நிறைவாக	110

எண்ண அலைகள்

பரமா நபியைப் படைத்திலையாகிற் படைப்பிலையென்
உரமாய் மொழிந்த என் உத்தமனே இவ்வுலகினில்யான்
மரமாகிலேன் மண்ணுங்கல்லாகிலேன் மனுவாக்கியெனைத்
தரமாய் வரமருள்தந்தாய் எவர்க்கென்றுந்தானவனே

(மெஞ்ஞான மேதை பீர்முகம்மது சாகிப் ஒலியுல்லாஹ் அவர்களின் ஞானப்புகழ்ச்சி பாடல் 30, 184)

அன்னைத் தமிழுக்கு அணி செய்திடும் பெரும்பணியில் மங்காச் சிறப்புடைய, மாறா இளமையுடைய தலைசிறந்த முஸ்லிம் புலவர் சதாவதானி செய்குதம்பிப்பாவலர் ஆவார். ஜனாப் பக்கீர் மீரான் சாகிப் – ஆமீனா தம்பதியருக்கு 1874 ஜூலை 31–இல் நாஞ்சில் நாட்டில் கோட்டாறு இளங்கடைப்பகுதியில் தோன்றிய பாட்டாறு பாவலர் ஆவார்; சங்கர நாராயண அண்ணாவியாரிடம் இளமையில் கல்வி கற்றார். 1898–இல் "யதார்த்தவாதி", "இஸ்லாமிய மித்திரன்" எனும் இதழ்களை நடத்தினார். 1906–இல் கோட்டாறு ஜூம்மா மஸ்ஜித்தில் (பள்ளிவாசல்) ஹஸ்ரத் செய்யிது முஹம்மது அபூபக்கருல் ஐதுரூஸ் தலைமையில் சோடச (16) அவதானங்களைச் செய்து காட்டினார். 1907 மார்ச் 10–இல் சென்னை விக்டோரியா நினைவு மண்டபத்தில் நூறு செயல்களைக் கொண்ட சதாவதானத்தைச் செய்து சரித்திரத்தில் அழியாப் புகழ்பெற்றார்.

1907இல் முஹம்மது பாத்திமா பீவியைத் திருமணம் செய்தார். ஆண்மக்கள் நால்வரும், பெண்மகள் ஒருவரும் அவர்களுக்குப் பிறந்தனர். இந்திய சுதந்திரப் போரில் பங்கேற்றார்; இறுதிவரை இலக்கியத்திற்காக தன்னை அர்ப்பணித்தார். 13–2–1950–இல் பாவலரின் இவ்வுலக வாழ்வு நிறைவு பெற்றது.

இலக்கியப்பணிகள்

தேவலோகக் கிரிமினல் கேஸ் (பழிக்குற்ற வழக்கு), வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ், சீறாப்புராண உரை, சீறா நாடகம் ஆகிய உரைநடை நூற்களை எழுதியவர் பாவலர். திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, கல்வத்து நாயகம் இன்னிசைப்பாமாலை, திருநாகூர்த்திரிபந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், சம்சுத்தாசீன் கோவை, நீதி வெண்பா ஆகிய செய்யுள் நூல்களைப் பாடிய பாவலர், இவைகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி' பாடியுள்ளார்கள். உத்தமபாளையம் முகமது இஸ்மாயில் கோவை, சசிவோத்தமக்கோவை, அழகப்பக்கோவை, தனிப்பாடல்கள் சில பாவலரின் நூல்களில் அச்சேறாதவை ஆகும். பாவலர் எழுதிய நாவலும் அச்சேறாமல்தான் இன்னமும் இருக்கிறது.

காஞ்சிபுரச் சான்றோர்களால் 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்றும், தொண்டிச் சான்றோர்களால் 'கலைக்கடல்' என்றும். திண்டுக்கல் சான்றோர்களால் 'அல்லாமா டாக்டர்' என்றும், நாஞ்சில் நாட்டவர்களால் 'தமிழ்ப்பெரும்புலவர்' என்றும், 'செய்கு' என்று தந்தையாராலும்,'தம்பி' என்றும், தாயாராலும் 'பாவலர்' என்றும் உலகத்தாராலும் பாராட்டப் பெற்றவர் செய்குதம்பிப் பாவலர்.

வடலூரில் வாழ்ந்த சமுதாய சீர்திருத்தவாதி இராமலிங்க சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் அவர் பாடிய பாடல்கள் திருவருட்பா என்று வெளியாயிற்று.

அப்போது இலங்கையைச் சேர்ந்த ஆறுமுகநாவலர் அப்பாடல்கள் அருட்பா இல்லை மருட்பா என்று வாதிட்டார்.

வள்ளலாரும் மறைந்தார். ஆறுமுக நாவலரும் மறைந்தார். ஆண்டுகள் பல கடந்தன. மீண்டும் தமிழகத்தில் ஆறுமுகவேலரின் மாணாக்கரின் மாணாக்கரான நா.கதிரைவேற்பிள்ளை வள்ளலாரின் பாடல்களை மருட்பா என்றார். அதற்கென ஒரு புலவர் கூட்டம்; வள்ளலாரின் பாடல்கள் அருட்பாதான் என்று ஆதரித்து இன்னொரு அணியின் புலவர் கூட்டம்; அருட்பா குழுவில் கண்ணியத்திற்குரிய சதாவதானி செய்குதம்பிப் பாவலர் வாதிடுகிறார்.

வள்ளலார் குறித்து நூற்றுக்கணக்கான நூல்கள்; ஆறுமுக நாவலர் குறித்தும் பல நூல்கள்; நா.கதிரைவேற் பிள்ளை குறித்தும் பல நூல்கள்; இந்த நிலையில் பாவலர் செய்குதம்பிப் பாவலர் குறித்து வித்வான் சி.குமரேச பிள்ளை எழுதிய நூல், அதனை அடியொற்றி

ஓரிருவர் எழுதிய ஓரிரு நூல்கள் மட்டும்; இந்த நிலையில் அருட்பா குழுவில் பாவலர் ஆற்றிய பங்கு என்ன? பாவலர் முஸ்லிமாக இருந்த நிலையில் எவ்வாறு இந்த இயக்கத்தில் இணைகிறார்? அதன் வரலாற்றுப் பின்னணி என்ன? அருட்பா மருட்பா விவாதம் குறித்த வரலாற்று உண்மைகள் என்ன? இதுகுறித்து ப.சரவணன் அருட்பா – மருட்பா என்ற மிக விரிவான நூல் எழுதியிருந்தாலும், அந்தப் பெரிய நூலில் பாவலரின் பெயரும், படமும் மட்டுமே உள்ளது. இந்த நிலையில் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அருட்பா அணிக்குச் சென்று வாதிட்டது ஏன்? வாதிட்ட வரலாறு, வென்றிட்ட வரலாறு, செய்குதம்பிப் பாவலரின் மறைக்கப்பட்ட பக்கங்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரும் சிறு முயற்சியே இந்நூல்.

எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா B.S.M.S. அவர்களுக்கும், எனது மகள் நஜாத், தி.சுஹைனா எனக்கு உதவிய பேரன் ரெகான் சுலைமான் அவர்களுக்கும், நூலை நல்லமுறையில் வடிவமைத்துத் தந்த ஜெஆர் கம்யூட்டர்ஸ் சகோதரர் அப்துல் நசீர் அவர்களுக்கும், சிவசக்தி ஆர்ட்ஸ் சகோதரர் கு.குமரேசன் அவர்களுக்கும், எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

எளியோன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

செ.திவான்

ரெகான் சுலைமான் இல்லம்,
106F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை–627002, போன்:0462–2572665
18.11.2015

சிதம்பரம்

கோயில் என்றாலே சிதம்பரம், மன்று, அமலம், அம்பலம், சத்து, உம்பர், இரண்மயஜோசம், மகத், தனி, புண்டரீகம், மெய்ப்பதம், சுழுனாவழி, ஞானசுகோதயம் முத்தி, பரம்பிரமம், சபை, சக்தி, சிவாலயம் பொது, சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப் புலியூர், பூலோக கயிலாயம் என்ற பெயர்கள் எல்லாம் சிதம்பரத்தையே குறிப்பனவாகும். (சிதம்பரம் மயில்வாகனன், வரலாற்றில் சிதம்பரம் நடராஜர் கோயில், தொகுதி –1, சென்னை 2004, பக் 42)

தேவாரம் பாடிய மூவரும் மற்றவர்களும் தில்லை அல்லது கோயில் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே சிதம்பரம் என்ற பெயர் பின்னால் வந்தது என்பதை உணர முடிகிறது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் சிதம்பரம் 65 இடங்களில் சிறப்பிக்கப் பெற்றது.

தேவார திருவாசகம் தவிர பன்னிரு திருமுறைகள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராம் திருமுறை, பெரியபுராணம் ஆகியவையும் சிதம்பரத்தைப் பேசுகின்றன.

திருநீலகண்ட நாயனார், திருநாளைப் போவார் நாயனார், கூற்றுவநாயனார், கோச் செங்கட்சோழ நாயனார், கணம்புல்ல நாயனார் ஆகிய நாயன்மார்களும், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சந்தான குரவரில் இருவரும் வீடுபேறு அடைந்த பெருமை பெற்ற தலம் தில்லை.

மாணிக்கவாசப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடி அருளியபதி, சேரமான் பெருமாள் நாயனார் பொன் வண்ணத்து அந்தாதி பாடிய புண்ணியபதி, சேக்கிழார் பெரியபுராணம் பாடி யானை மீது அமர்ந்து அநபாய சோழனால் சிறப்பிக்கப் பெற்று அரங்கேறிய அழகியபதி.

நம்பியாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பெற்ற தலம் தில்லை. (தமிழ் கடல் ராய,சொ)

சித் – ஞானம்; அம்பரம் – ஆகாயம் ஞான ஆகாயமாக விளங்குவது சிதம்பரம் என்பார் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். சிதம்பரம் என்பது சிற்றம்பலம் என்பதன் மரூஉ. சிதம்பரம் கோயிலையும், தில்லை ஊரையும் குறிக்கும் சொற்களாக உள்ளன. (சோமலெ. கோயில், சென்னை 1978, பக் 197)

ஆரூர் பிறக்க முத்தி, தில்லை காணமுத்தி, காசி இறக்க முத்தி எனச் சிதம்பரம் எளிதில் முத்தி தரும் தலம் எனப் பேசப்படும் (சைவ சித்தாந்தப் பேராசிரியர் க.வச்சிரவேல் முதலியார்)

சிதம்பரத்தில் தெற்குக் கோபுரத்துக்கு எதிரில் உள்ள அமீர் லாட்ஜ் கட்டிடப் பகுதி இஸ்லாமியர்கள் சிதம்பரத்தில் வந்து தங்கிய பகுதியாகும். எனவே சிதம்பரத்திற்கும் முஸ்லிம்களுக்கும் தொடர்பு இல்லாமல் இல்லை.

பல்லவ சிம்மவர்மன் (கிபி 550 – 575) காலத்தில் தில்லை கோயில் உருவாகிறது. சோழ அரசர்கள் விஜயபாலயன் முதல் மூன்றாவது இராஜராஜன் வரை இக்கோயில் ஓங்கி மிளிர்கின்றது. ஆதித்தன் (871–907) பராந்தகன் (907–955) ஆகியவர்கள் தில்லைச் சித்திர சபையை எழுப்பியும் அதன் மேற்கூரையைப் பொன்னால் வேயவும் செய்தார்கள்.

சிதம்பரம் கீழக்கோபுரம் குலோத்துங்கன்II, தெற்குக் கோபுரம் குலோத்துங்கன் III னின் மருமகனாகிய சொக்கசீயன் கோப்பெருஞ்சிங்கனாலும், மேற்குக் கோபுரம் சடாவர்மன் சுந்தரபாண்டியனாலும், வடக்குக் கோபுரம் 16ஆம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராலும் எடுக்கப்பெற்றது. (ஜே.எம்.சோமசுந்தரம்பிள்ளை தில்லைச் சிற்றம்பலவன் கோயில், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன்விழா மலர், சென்னை, 1970 பக். 136)

கொள்ளிடம் என்னும் காவிரியின் பிரிவுக்கு வடக்கிலும், மணிமுத்தா நதிக்குத் தெற்கிலும் தில்லை திருத்தம் உள்ளது. **ராஜாதி ராஜ வளநாட்டு தனியூர் பெரும்பற்றப் புலியூர்** எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றிருக்கிறது. பிற்காலக்கல் வெட்டுக்களில் சிதம்பரம் என்று இவ்வூர் குறிக்கக் காண்கிறோம் என்பார் மா.சந்திரமூர்த்தி (தமிழ்நாட்டுச் சிவாலயங்கள்,

தொகுதி 2, சென்னை 2004, பக் 20) (இறைவன் இங்கு ஆகாச உருவில் இருக்கிறான் என்பது தான் சிதம்பர ரகசியம்)

வியாஜ்ரபாதர் (புலிக்கால்முனிவர்) மிகுதியான பற்றினால் பூசித்த ஊராகிய பெரும் பற்றப்புலியூர் சித் – அறிவு அம்பரம் – வெட்ட வெளி. சிதம்பரம் ஞானாகாசம் என்றும் அழைக்கப்படுகிறது. (பு.மா.ஜெயசெந்தில்நாதன், திருமுறைத்தலங்கள், சென்னை 2001, பக். 232)

திருத்தலங்களில் முதன்மையானதும் தொன்மையானதுமாகும் கோயில் என்கிற சிதம்பரம். கோவிந்தராசர் சந்நிதியும் இங்கே அமைந்துள்ளது. ஒரே காலத்தில் நடராசரையும் கோவிந்தராசரையும் தரிசிக்கலாம் என்பர் உ.வே. சா.(திருத்தலங்கள் வரலாறு, பகுதி 1, உவேசா நூல்நிலையம், சென்னை, 2011, சு.பாலசாரநாதன், எஸ்.சாய்ராமன் பதிப்பு, பக் 237, 239)

உலகம் புருஷ வடிவம் என்றால் சிதம்பரம் இருதயம் என்பார் ச.தண்டபாணி தேசிகர் (சிதம்பரம் சென்னை, 2015 பக்.1)

சிதம்பரத்தைப் பற்றி 27 கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தில்லைக்கென்று சிதம்பர புராணம் (புராணத் திருமலைநாதர் எழுதியது) புலியூர்ப்புராணம் (தொல்லிப்பழை சிவா நந்தையார் எழுதியது) இரட்டையர்கள் பாடிய தில்லைக் கலம்பகம் ஆகிய பெயர் தெரியாத நிலையில் எழுதப்பட்ட சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால் எழுதப்பட்ட சிதம்பர நாதர் பதிகம் (சிதம்பர நடராஜன் திருவருட்பா) தரும்புர ஆதின சிதம்பர நாத முனிவர் இயற்றிய நடராஜ சதகம், தில்லை விடங்கன் மணிமுத்துப் பிள்ளை யாத்த புலியூர் வெண்பா, திருவண்ணாமலை குகை நமச்சிவாயரால் பாடப்பட்ட சிதம்பர வெண்பா, திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் பாடப்பெற்ற தில்லையமக அந்தாதி, ஆத்மநாத தேசிகரின் சோழ மண்டல சதகம், வைணவ புராணமான புதுவை இராமானுஜ நாவலர் எழுதிட்ட திருசித்ரகூட மான்மியம், பல தனிச் செய்யுள்கள் சிதம்பரத்திற்கு உள்ளது. கந்தபுராணம், திருவிளையாடல்புராணம், வில்லிபாரதம், பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி ஆகியவற்றிலும் பேசப்படுகிறது சிதம்பரம்.

ஐ.த.ரா.கணேச தீட்சிதர் எழுதிய இதயக்கோயில் (சிதம்பரம் கோயில்) தல வரலாறும் வழிகாட்டும் நூலும் சங்கரநயினார் கோயில் சைவ சித்தாந்த சபை வெளியிட்ட தி.சங்கரபாண்டிய முதலியார் எழுதிய தில்லைக்கூத்தனும் திருவாதிரையும், ச.மெய்யப்பனின் தில்லைத் திருக்கோயில் நூலும், காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளும், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் வெளியிட்ட (திருப்பனந்தான் மடம்) சிதம்பரம், சிகரம் ச.செந்தில்நாதன் தில்லைக் கோயிலும் தீர்ப்புகளும், சிதம்பரம் கோயில் சில உண்மைகள் என்ற இருநூல்களும், து.சோ.நடராசனின் சிதம்பரம் தில்லையம்மன் கோவில் வரலாறும், ஜே.எம். சோமசுந்தரம்பிள்ளையின் தில்லைச் சிற்றம்பலவன் கோயில் சிதம்பரம் நூலும், ஸோம சேகர தீட்சிதர் எழுதிய சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் சரித்திரம், *1891* இல் சிதம்பர ப்ரம்மவத்தியாயந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட சிதம்பரம் சு.அண்ணா சாமி ஐயர் எழுதிய ஸ்ரீ சிதம்பர மாகாத்மிய வசனம் எனும் *112* பக்கங்களைக் கொண்ட நூல்கள் உட்பட இன்னும் பல நூல்கள் சிதம்பரத்தின் பெருமை பேசும். சிதம்பரம் குறித்து இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.



இராமலிங்க வள்ளலார்



வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் வரலாற்றுக் குறிப்புகள்

காலம்	:	*1823- 1874*
பிறப்பு	:	*5-10-1823* சுபானு, புரட்டாசி *21*, ஞாயிறு
சித்தி	:	*30-01-1874*, ஸ்ரீமுக, தை *19*, வெள்ளி
பிறந்த ஊர்	:	மருதூர், (சிதம்பரம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம், வடலூரிலிருந்து சுமார் *7* மைல்)
பெற்றோர்	:	இராமையா பிள்ளை, சின்னம்மையார் (ஆறாவது மனைவி)
உடன் பிறந்தோர்	:	சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை, சுந்தரம் அம்மையார், உண்ணாமுலை அம்மையார் (அடிகள் ஐந்தாவது பிள்ளை)
இயற்பெயர்	:	இராமலிங்கம்
சிறப்புப் பெயர்	:	திருவருட்பிரகாச வள்ளலார்
உறைந்த இடங்கள்	:	சென்னை *1825-1858* கருங்குழி *1858-1867* வடலூர் *1867-1870* மேட்டுக்குப்பம் *1870-1874*
இயற்றிய நூல்கள்	:	*1.* மனுமுறை கண்ட வாசகம் *2.* ஜீவகாருண்ய ஒழுக்கம்

பதிப்பித்த நூல்கள் : 1. ஒழிவிலொடுக்கம்
2. தொண்டமண்டல சதகம் (1855)
3. சின்மய தீபிகை (1857)

அருளிய பாடல்கள் : திருவருட்பா (ஆறு திருமுறைகள்)
ஆறு திருமுறைகளிலும் சேராதவை

நிறுவிய நிலையங்கள் : 1. சன்மார்க்க சங்கம் (1865)
2. சத்தியதருமச்சாலை (1867)
3. சத்திய ஞானசபை (1872)
4. சித்திவளாகம் (1870)

நிறுவத் திட்டமிட்டவை :

1. வைத்தியசாலை
2. சாஸ்திரசாலை
3. உபகாரச்சாலை
4. விருத்திசாலை
5. உபாசனாசாலை
6. யோகசாலை
7. விவகாரசாலை
8. சன்மார்க்க போதினி (1867)
9. சமரச வேத பாடசாலை (1872) பாடசாலைகள்
10. சன்மார்க்க விவேக விருத்தி (1867) திங்களிதழ்

ஞான வாழ்க்கை : 9ஆம் அகவையில் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பெற்றார்

12 ஆம் அகவை முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்

வழிபடு கடவுள் : முருகன்

வழிபடு குரு : திருஞானசம்பந்தர்

வழிபடு நூல் : திருவாசகம்

(இஃது இளமையில் அமைத்துக்கொண்ட முறை)

முதலில் முருக உபாசகர் (கந்தகோட்டம்,

திருத்தணிகை)

பின் சிவபக்தர் (ஒற்றியூர்)

அதன் பின்னர் நடராச அன்பர் (தில்லை)

முடிவில் அருட்பெருஞ்சோதி அடியர் (வடலூர்)

அற்புதங்கள் : ஐந்து திங்கள் பருவத்திலேயே சிதம்பர ரகசியத்தை வெட்ட வெளியாகக் காட்டப் பெற்றது.

வடிவுடையம்மை அண்ணியார் வடிவில் தோன்றி உணவளித்தது

தண்ணீர் விளக்கெரிந்தது

கனவிலும் நனவிலும் பல சமயங்களில் பல இடங்களில் இறைவன் தோன்றி அருள் செய்தது.

பெற்ற பேறுகள் : இறைவனால் பிள்ளைப்பட்டம் சூட்டப்பெற்றது

அடிமுடி காட்டப்பெற்றது

அடிமுடி சூட்டப்பெற்றது (திருவடி தீக்கை)

நயன, வாசக, பரிச, அத்தமத்தகசையோக தீக்கைகள் பெற்றது.

சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் பெற்றது.

கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி பெற்றது.

பொன் செய்யும் ஆற்றல் பெற்றது.

ஐந்தொழில் ஆற்றல் பெற்றது.

இறைவனால் மணிமுடி சூட்டப்பெற்றது.

செங்கோல் அளிக்கப் பெற்றது.

கங்கணம் அணிவிக்கப் பெற்றது.

ஆழி அளிக்கப் பெற்றது.

அம்பலத் தரசாட்சி அளிக்கப் பெற்றது.

நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு அணுகாது மரண மிலாப் பெருவாழ்வு பெற்றது.

அடிகள் தம் உடம்மை மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாக்கவில்லை. உடம்மை ஒன்றுமில்லாமற் செய்து கொண்டு இறைவனோடு இரண்டறக் கலந்தார்கள். எவ்வாறு மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் சிற்சபையில் (நடராசர் சந்நிதியில்) புகுந்து மறைந்தாரோ அவ்வாறே அடிகள் சித்திவாளாகத் திருமாளிகையில் தமது திருவறைக்குட் புகுந்து மறைந்தார்கள்.

கொள்கைகள் : கடவுள் ஒருவரே

அவர் அருட்பெருஞ்ஜோதியர்

சிறு தெய்வ வழிபாடு கூடாது

அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது

புலால் உண்ணலாகாது

சாதி சமய முதலிய வேறுபாடுகள் கூடா

எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணும் ஆன்மதேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்

ஏழைகளின் பசி தவித்தலாகிய சீவகாருணிய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.

புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா. இறந்தவரைப் புதைக்க வேண்டும். எரிக்கக் கூடாது. கருமாதி, திதி முதலிய சடங்குகள் வேண்டா. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

அடிகளார் வரலாற்றுக் காலக்குறிப்புகள்

5-10-1823 (சுபானு, புரட்டாசி, 21, ஞாயிறு) பிறப்பு

1824 சிதம்ரப தரிசனம், தந்தையார் இராமைய பிள்ளை இறப்பு

1825 குடும்பம் சென்னைக்குச் சென்றது

1832 இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றது (அகவை 9)

1835 முறையான ஞானவாழ்க்கையைத் தொடங்கியது (அகவை 12)

1849	தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணவரானது
1850	திருமணம்
1851	*(விரோதிகிருது, ஐப்பசி)* ஒழிவிலொடுக்கம், பதிப்பித்தது
ஜூன் 1854	*(ஆனந்த, ஆனி)* மனுமுறைகண்டவாசகம் வெளிவந்தது
1855	*(இராஷூச, மார்கழி)* தொண்டமண்டல சதகம் பதிப்பித்தது)
1865	சன்மார்க்க சங்கம் நிறுவியது
16–1–1867	*(அஷய, தை, 5)* திருப்பாதிரிப்புலியூர்க்கு அடுத்த உண்ணாமலைச் செட்டிச் சாவடிக்கு அருகில் ஒரு திருவிழாக் கூட்டத்தில் பிரமசமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீ தரஸ்வாமி நாயக்கருடன் விக்கிர வழிபாடு பற்றி வாது)
2–2–1867	*(அஷய, தை, 22, சனி)* தருமச்சாலை கட்டுவதற்கு வடலூர்க் குடிகள் இனாமாக நிலம் விட்டது)
பிப்ரவரி *1867*	*(அஷய, தை)* திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பு வெளிவந்தது
23–5–1867	*(பிரபவ, வைகாசி, 11, வியாழன்)* சத்திய திருமச்சாலை தொடங்கியது. சாலை விளம்பரம் வெளியிட்டது
1867	*(பிரபவ)* சன்மார்க்க போதினி பாடசாலை பற்றிய அறிவிப்பு
1867	இதன் பின் வள்ளலார் சன்மார்க்க விவேக விருத்தி என்னும் பத்திரிகை தொடங்கத் திட்டமிட்டார். *15* ரூபாய், *9* அணா, *9* பைசா அதற்கு என வசூலானது. பரங்கிப்பேட்டை **காதர் சாகிபு** ஒரு அணா அப்போது வழங்கினார். அப்போது அந்த இதழ் வெளிவரவில்லை. பின்னால் *1.2.1969* முதல் வெளிவந்தது. *(சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள், இராமலிங்க அடிகள் வரலாறு, வடலூர் 1971, பக்கம் 348)*
1869	*(சுக்கில, வைகாசி)* ஆடூர் சபாபதி சிவாசாரியர் வடலூர் வந்து சேர்ந்தது.
1870	*(பிரமோதூத)* மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கியது

27–4–1870	(பிரமோதூத, சித்திரை, 16, புதன்) சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் என்னும் பத்திரிகை
26–10–1870	(பிரமோதூத, ஐப்பசி,11, புதன்) அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை
30–3–1871	(பிரமோதூத, பங்குனி, 18, வியாழன்) சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை.
12–4–1871	(பிரஜோற்பத்தி, சித்திரை, 1, புதன்) சன்மார்க்க பெரும்பதி வருகை என்னும் பத்திரிகை
1871	(பிரஜோற்பத்தி) சத்திய ஞானசபை கட்டத் தொடங்கியது
11–1–1872	(பிரஜோற்பத்தி, மார்கழி, 29, வியாழன்) சமரச வேத பாடசாலை பற்றிய அறிவிப்பு
25–1–1872	(பிரஜோற்பத்தி, தை, 13, வியாழன்) ஞானசபையில் முதற் பூச விழா. சபை விளம்பரம் வெளியிடப்பட்டது.
12–5–1872	(ஆங்கிரச, வைகாசி, 1, ஞாயிறு) சன்மார்க்கப் பிரார்த்தனை (கல்பட்டு, இராமலிங்க சுவாமிகள் விண்ணப்பம்)
18–7–1872	(ஆங்கிரச, ஆடி, 5, வியாழன்) சபை வழிபாட்டு விதி வகுத்தது. (நிலையங்களுக்குப் பெயர் மாற்றம்)
3–9–1872	(பிரஜோற்பத்தி, மாசி 28, சனி, சாலையிலுள்ளவர்களுக்கு இட்ட ஒழுக்கக்கட்டளை)
25–11–1872	(ஆங்கிரச, கார்த்திகை, 12, திங்கள்) சித்தி வளாகத்திலும் தருமச் சாலையிலும் வசிப்பவர்களின் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை
8–9–1873	(ஸ்ரீமுக, ஆவணி, 25, திங்கள்) சித்திவளாக விளம்பரம் (வதந்தி எச்சரிப்பு)
22–10–1873	(ஸ்ரீமுக, ஐப்பசி, 7, புதன், பகல் 8 மணி) முதன் முதலாகச் சன்மார்க்கக் கொடி கட்டியது. பேருபதேசம்
நவம்பர் *1873*	(ஸ்ரீமுக, கார்த்திகை) சித்தி வளாகத்தில் திருவிளக்கு வழிபாடு ஏற்படுத்தியது
30–1–1874	(ஸ்ரீமுக, தை, 19, வெள்ளி) சித்திபெற்றது.

அடிகளின் சமகாலப் பெரியோர்களும் புலவர்களும் (அடிகளோடு தொடர்புடையோர் மட்டும்)

பெரியோர்கள்:

தண்டபாணி சுவாமிகள் 28-11-1839 - 5-7-1998

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் 2-12-1831 - 1881

முத்துகிருஷ்ண பிரம்மம் 1815

திருச்சிற்றம்பல ஞானிகள்

ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள்

மதுரை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஆறுமுக சுவாமிகள்

மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள்

திருவாவடுதுறை ஆதீனம் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள்

தருமபுர ஆதீனம் வேளூர் கட்டளை விசாரனை உலகநாதத் தம்பிரான் சுவாமிகள்

புலவர்கள்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 6-4-1815 - 1-2-1876

ஆறுமுக நாவலர் 18-12-1822 - 5-12-1879

தொழுவூர் வேலாயுத முதலியார் 1832 ------22- 2-1889

பூவை அட்டாவதானம் கலியாணசுந்தர யதீந்திரர் 10-5-1854 --1918

மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் 1792- 1871

புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் 1886

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை 11-10-1826 ---21-7-1889

மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார் 1918

நரசிங்கபுரம் வீராசாமி முதலியார்

அடிகளின் அருளிச் செயல்கள் **(Complete Works)**

பாடல்கள் - திரு அருட்பா. ஆறு திருமுறைகளாக வகுக்கப்பெற்றவை

பாடல்கள்	–	ஆறு திருமுறைகளிலும் சேராதவை
விண்ணப்பங்கள்	–	அடிகள் இறைவனிடத்துச் செய்து கொண்டவை (உரைநடை)
கடிதங்கள்	–	அடிகள் தம் கைப்பட எழுதியவை
கட்டளைகள்	–	தாம் நிறுவிய நிலையங்களின் நடைமுறைகளைக் குறித்து எழுதியவை
பத்திரிகைகள்	–	சுற்றறிக்கைகளும் அழைப்பிதழ்களும்
உபதேசங்கள்	–	உடன் கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதி வைக்கப்பெற்றுள்ள குறிப்புகள்

உரைநடை நூல்கள் – 1. மனுமுறை கண்ட வாசகம்

2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

உரைகள் –

1. 'தமிழ்' என்ற சொல்லுக்கு வரைந்த உரை
2. பெரிய புராணம் முதற் பாடல் முதற் சொல்லாகிய 'உலகெலாம்' என்பதற்கு வரைந்த விளக்க உரை.
3. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி
4. தொண்ட மண்டல சதகத்தின் நூற் பெயரிலக்கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரையும்.
5. பொன்வண்ணத் தந்தாதியின் இருபத்திரண்டாம் பாடலுக்குச் செய்த உரை
6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை

பதிப்பித்த நூல்கள் –

1. ஒழிவிலொடுக்கம் (1851)
2. தொண்டமண்டல சதகம் (1855)
3. சின்மய தீபிகை (1857)

பிற – மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை முதலியன

திருஅருட்பா என்னும் பெயர்

திருவருட்பா என்பது திரு + அருள் + பா எனப்பிரிந்து, திரு – தெய்வத் தன்மை உடைய, அருள் – அருளால் பாடப்பெற்ற, பா – பாக்கள் எனப்பொருள் படும் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. பா என்பது பாக்களால் ஆன நூலுக்குப் பெயராயிற்று.

திரு என்பது அழகு, செல்வம், திருமகள், மேன்மை, சிறப்பு, நல்வினை, தெய்வத்தன்மை எனப்பொருள்படும். ஈண்டு தெய்வத்தன்மை என்பதே பொருந்தும். அருள் நூல்களைத் ‘திரு’ என்னும் அடைமொழி சார்த்தி வழங்குதல் தமிழ் மரபு திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருக்கோவையார், திருவாய்மொழி எனவருவன காண்க.

“திருவென்பது, பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி” என்பர் பேராசிரியர். எனவே இன்பம் வரினும் துன்பம் வரினும் இரண்டையும் ஒப்பக்கருதும் மனச் செம்மையே திரு என்னும் சொல்லுக்குரிய பொருள் என்பது பேராசிரியர் கருத்தாதல் பெறப்படும். செல்வக்களிப்பால் மையலுறுதும் துன்பமிகுதியால் சோர்வுறாதும் இன்ப துன்பம் இரண்டையும் ஒப்பக் கருதுவோரே திருத்தகவிற்றாகிய உள்ளமுடையவராவார். திருத்தகவிற்றாகிய உள்ளமே திருவுள்ளம். அத்தகைய திருவுள்ளமுடைய சான்றோர்களே ‘கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்’ ‘திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டோர்’ திருத்தகவிற்றாகிய உள்ளத்தையும் திருநின்ற செம்மையையும் தந்து சென்றடையாத திருவுடையனாகிய இறைவனது திருவருளின்பத்தைக் கொடுக்கும் நூல்களே திருவுடைய நூல்கள். அத்தகைய திருவுடைய நூல்களில் திருவருட்பாவும் ஒன்று.

அடிகளின் அருளிச் செயல்களுக்குத் திருவருட்பா எனப் பெயரிட்டவர் அவற்றைத் தொகுத்தவரும், திருமுறைகளாக வகுத்தவரும், முதன் முதலிற் பதிப்பித்தவரும், அடிகளின் மாணக்கரும் ஆகிய உபய கலாநிதிப் பெரும் புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாராவார். அடிகளது அருட்பாடல்கள் திருவருட்பா எனப்பெயர் பெற்றமையை வேலாயுதனார் தாம் பாடிய திருவருட்பா வரலாற்றில் அழகாகக் கூறுவார்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா.

முதற்புத்தகம்.

இஃது

சமரசவேதசன்மார்க்க சங்கத்தை யபிமானித்த

புதுவை - வேலுமுதலியார்

சிவாநந்தபுரம்-செல்வராயமுதலியார்

இறுக்கம்-இரத்தினமுதலியார்

வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர்மாணாக்கரும்

ஷை சமரசவேதசன்மார்க்கசங்க

வித்வான்களிலொருவருமாகிய

தொழுவூர்-வேலாயுதமுதலியாரால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி௫0௬௮ சகசுகஅ-ல்-நிகழும் - அக்ஷய௵-மகரரவி.

ASIATIC PRESS, 292, LINGEE CHETTY STREET, MADRAS.

February 1867.

Registered Copy-right.

அடிகள் தம் ஒன்பதாம் ஆண்டில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றவர்கள் பன்னிரண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்கள். சிறுகாலைப் பருவத்திலேயே அருட்பாடல்களைப் படாத்தொடங்கினார்கள்.

திருமுறை வகுப்பு

திருமுறை என்னும் பெயர்

'திரு' என்பதன் பொருளை முன்னர்க் கண்டோம். 'முறை' என்பது நூல். பழைமை, நீதி, கூட்டு, கட்டு முறைமை எனப் பொருள்படுமென பிங்கல நிகண்டு கூறும். இவையேயன்றி இடைச்சொல்லாகவும், உறவு, ஒழுக்கம், ஒழுங்கு, வரிசை, தரம் என்னும் பொருளிலும் வழங்கும். ஈண்டு முறை என்பது நூலின் பகுதிக்குப் பெயராயிற்று. மூவர் தேவாரத்திற்கும் அடங்கன்முறை எனப்பெயர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் திருமுறைள் எனப் பெயர் பெற்றன. பன்னிரு திருமுறைகள் என்பது பெருவழக்கு. திருவருட்பாவில் திருமுறை என்பது அதன் பகுதிக்குப் பெயராயிற்று.

திருமுறைகள் வகுக்கப்பெற்ற காலம்

திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பை வேலாயுதனார் 1867 ஆம் ஆண்டில் பதிப்பித்தார். இப்பதிப்பை அவர் செம்மை செய்து அமைதிப்படுத்திய காலத்தில்தான் திருமுறைகள் வகுக்கப்பெற்றன. ஐந்தாம் திருமுறையும் அவராலேயே முறைப்படுத்தப்பெற்று 1880 ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்றது. ஆறாம் திருமுறை வேலாயுதனாரால் முறைப்படுத்தப்பெறவில்லை. ஐந்து திருமுறைகளிலும் சேராத பாடல்களைத் தொகுத்து ஆறாம் திருமுறை 1885 ஆம் ஆண்டில் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் பார்வையில் வெளியிடப்பெற்றது.

முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பு 1867

திருவருட்பா அச்சிற் போந்த வரலாறு மிகச் சுவையானது. அதனை அறிவதற்கான ஆதாரங்கள் தொழுவூர் வேலாயுத

முதலியார் பாடிய திருவருட்பா வரலாறும் (66 பாடல்கள்), அடிகள் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் சிலவுமாம். 1858 ஆம் ஆண்டில் அடிகள் சென்னை வாழ்வை நீத்து வடலூர் பக்கம் சென்றபின் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகளின் பாடல்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. திருவருட்பா ஏடுகளைத் தொகுத்தல் அச்சிடுதல் சம்பந்தமாக இரத்தின முதலியார்க்கும் அடிகட்கும் 1860 ஆம் ஆண்டு முதலே கடிதத் தொடர்பு தொடங்கிற்று. 1867 ஆம் ஆண்டில் திருவருட்பா வெளியாயிற்று. திருவருட்பாவை வெளியிடுவதில் ஏழாண்டுகள் இரத்தின முதலியார் முயன்றார். அச்சிட அனுமதி வேண்டி அடிகளிடம் தவங்கிடந்தார். நாளும் ஒருவேளையே உண்பதென்று நோன்பு பூண்டார். இவ்வாறு வருந்தி வருந்தி அரிதின் முயன்றும் திருவருட்பாவை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த பெருமை இறுக்கம் இரத்தின முதலியாரையே சாரும்.

இறுக்கம் இரத்தின முதலியார்

1860ஆம் ஆண்டில் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகளின் பாடல் ஏடுகளைத் தொகுக்கும் முயற்சியை தொடங்கினார். இதற்கு இடையில் சென்னையிலிருந்த சிலர் அடிகளாரின் பாடல்களைச் சிறு சிறு நூல்களாக அச்சிடுவதில் முனைந்தனர். இரத்தின முதலியாரும் செல்வராய முதலியாரும் அவர்களை அணுகி முறையாகத் தாங்கள் அவற்றை அச்சிடவிருக்கையில் சிறு சிறு நூலாக அவர்கள் அச்சிடுவது தகாதெனத் தடுத்தனர். அவர்கள் அச்சிடத் தொடங்கி விட்டதால் அதனை நிறுத்துமாறு கூறிச் சிறிது பொருளும் அளித்தனர். அதன் பின்னரும் அவர்கள் அச்சிடுவதை நிறுத்தினார்களில்லை. இந்நிலையில் இறுக்கம் அடிகளிடத்து இசைவு பெறுவதிலும் தீவிரமாக முனைந்தார்.

ஐந்தாம் திருமுறை முதற் பதிப்பு 1880

1867 ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்தன. இதற்கு ஏழாண்டுகளுக்குப் பின் 1874 ஆம் ஆண்டில் அடிகள் சித்திபெற்றார்கள். அடிகள் சித்திப்பெற்ற ஆறு ஆண்டுகளுக்குப் பின் – முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்த

பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பின் – 1880 ஆம் ஆண்டில் ஐந்தாம் திருமுறை வெளிவந்தது. அடிகள் சென்னையிலிருந்து வடலூர் பக்கம் வந்தபின் கருங்குழியிலிருந்த காலத்தில் பாடிய மூத்தபிள்ளையார் திருப்பதிகங்கள் 4, சென்னையிலிருந்தபோது ஒற்றியூலர் வழிபாட்டுக் காலத்தில் பாடிய திருத்தணிகைப் பதிகங்கள் 47, இளம்போதில் ஏழு, எட்டாண்டுப் பருவத்தில் முதன் முதலில் பாடிய கந்தகோட்டப் பதிகங்கள் 2 ஆகியவற்றை ஐந்தாம் திருமுறையாகத் தொகுத்துத் தொழூவூர் வேலாயுத முதலியார் வெளியிட்டார். இவ் வைந்தாம் திருமுறை திருவருட்பா – திருத்தணிகைப் பதிகம் – இரண்டாம் புத்தகம் எனப் பெயரிடப் பெற்றது. முதற் புத்தகமாகிய முதல் நான்கு திருமுறை நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த மயிலை சிக்கிட்டி சோமசுந்தர செட்டியாரே இவ்விரண்டாம் புத்தகமாகிய திருத்தணிகைப் பதிகம் வெளிவரவும் உதவினார். இதனை வெளியிடுங் காலத்தில் வேலாயுதம் சென்னை மாநிலக் கல்லூரியில் (பிரசிடென்சி காலேஜில்) தமிழாசிரியராக இருந்தார். இவர் பாடிய வாயுறை வாழ்த்தும் இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது.

ஆறாம் திருமுறை முதற் பதிப்பு – 1885

ஆறாம் திருமுறை என்பது, 1867 ஆம் ஆண்டில் முதன் நான்கு திருமுறைகளை அச்சிட்டபோது அடிகளின் கட்டளைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பெற்றவையும், அதன்பின் அடிகள் சித்திபெற்ற 1874 ஆம் ஆண்டு வரை பாடப்பெற்றவையுமாம். ஐந்தாம் திருமுறையை 1880 ஆம் ஆண்டிலும், அதன் இரண்டாம் பதிப்பை 1882 ஆம் ஆண்டிலும் அச்சிட்டு வெளியிட்ட வேலாயுதனார் ஆறாம் திருமுறையை அச்சிடும் முயற்சியில் ஈடுபடவில்லை. இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், மயிலை சிக்கிட்டி சோமசுந்தர செட்டியார் ஆகியோரும் ஆறாம் திருமுறையை அச்சிட்டு வெளியிடப்படுத்தத் தலைப்படவில்லை. இவர்கள் அனைவரும் அடிகளாரின் பாடல்களில் பேரன்பு கொண்டவர்களேனும், ஆறாம் திருமுறையை வெளியிடுவதற்குரிய காலம் வரவில்லை எனக்கருதி வாளாவிருந்தனர் போலும். இந்நிலையில் அடிகள் சித்திபெற்றுப் பதினோராண்டுகள் கழிந்தன. இனியும் காலந்தாழ்த்தாது ஆறாம் திருமுறையை

அச்சிட வேண்டும் என்ற எண்ணமுடையவராய் வேலூர் பத்மநாப முதலியார் அதனை அச்சிட முன்வந்தார். பெங்களூர் இராகவநாயகர் அவர்களும் துணை நின்றார். இவ்விருவர் வேண்டுகோளின்படி, சென்னை மாநகர் அரசாங்க நார்மல் பாடசாலை தமிழ்ப்புலவர் சோடசாவதானம் தி.க.சுப்பராய செட்டியாரால் பார்வையிடப்பெற்றுத் திரிசிரபுரம் ம.லோகநாத செட்டியாரின் பொருளுதவியால் 1885ஆம் ஆண்டில் ஆறாம் திருமுறை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

ஆதாரப் பதிப்புகள்

ஆதாரப் பதிப்புகளாகவும் சிறந்த பதிப்புகளாகவும் ஏழு பதிப்புகளை ஆ.பாலகிருஷ்ண பிள்ளை கொண்டுள்ளார். அவை வருமாறு

முதல் நான்கு திருமுறை முதற்பதிப்பு – 1867

– தொழூவூர் வேலாயுத முதலியார்

ஐந்தாம் திருமுறை முதற்பதிப்பு – 1880

– தொழூவூர் வேலாயுத முதலியார்

ஆறாம் திருமுறை முதற்பதிப்பு – 1885

– சோடசாவதானம் சுப்பராய செட்டியார்

குடும்ப கோஷம், பல்வகை தனிப்பாடல்கள் – 1891

– ஆடூர் சபாபதி சிவாசாரியார்

ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு – 1892

– பொன்னேரி சுந்தரம் பிள்ளை

பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு – 1896

சமரச பஜனை ச.மு.கந்தசாமி பிள்ளை பதிப்பு – 1924

இன்று கிடைத்தற்கரிய இப்பழம் பதிப்புகள் ஏழும் வள்ளற்பெருமாள் புகழைப் பறைசாற்றுகின்றன.

ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு – 1892

பொன்னேரி சுந்தரம் பிள்ளை பதிப்பு என்றும் இதை குறிக்கலாம். ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு இதுவே. முன் பதிப்புகளில் சேராத பாடல்கள் சில இதில் சேர்ந்துள்ளன. இது பொன்னேரி சுந்தரம் பிள்ளையார் திரட்டப்பெற்று, அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரால் பார்வையிடப் பெற்று, பிருங்கமாநகரம் இராமசாமி முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றது. பொன்னேரி சுந்தரம் பிள்ளை அடிகளாரின் தமையனார் சபாபதி பிள்ளையின் இளையமகள் வடிவுடை மாணிக்கம் அம்மையாரை மணந்தவர்; அடிகளிடம் கல்வி கற்றவர்; சிந்தாதிரிப் பேட்டையில் ஆசிரியராகப் பணியாற்றியவர்; புராணச் சொற்பொழிவாற்றியதால் புராணிகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை என்று வழங்கப் பெற்றவர்.

அடிகளின் பேரில் இவர் ஒரு பிள்ளைத் தமிழ் (இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ்) பாடியிருக்கிறார். அது 1893 ஆம் ஆண்டில் பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியாரால் அச்சிடப் பெற்றது. ஆறு திருமுறைகளும் சேர்ந்த அம்முதற்பதிப்பில்தான் அடிகளின் திருவுருவப் படமும், வரலாறும் (இராமலிங்க பிள்ளையவர்கள் சரித்திரச் சுருக்கம்) முதன் முதலாக அச்சிடப் பெற்றன. சரித்திரச் சுருக்கத்தைப் பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரே எழுதியுள்ளார்.

பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு 1896

திருவருட்பாவை பொன்னேரி சுந்தரம் பிள்ளை 1892இல் பதிப்பித்தார். அப்போது அதனை பதிப்பித்த பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் 1896 இல் தானே ஒரு பதிப்பை வெளியிட்டார்.

ச.மு.கந்தசாமி பிள்ளை பதிப்பு 1924

சமரசபஜனை ச.மு.கந்தசாமி பிள்ளையைக் கொண்டு 1924 இல் வெளிவந்த திருவருட்பா பதிப்பினை இலவசமாகவே வழங்கியவர் புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் தீ.நா. முத்தையா செட்டியார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார் முன்னுரையுடன் அந்த பதிப்பு வெளியாயிற்று.

சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

14.3.1930இல் வள்ளலாரின் தமையனார் பரசுராம பிள்ளையின் வழி வந்த இராச மாணிக்கம் பிள்ளை சென்னையில் சமரச சுத்த சன்மார்க்கச் சங்கத்தைத் துவங்கி, 1.10.1932லும் 11.10.1942லும் திருவருட்பாவை வெளியிட்டார்.

பாலகிருஷ்ண பிள்ளை

பி.ஏ.எம்.எல் பட்டம் பெற்ற வழக்கறிஞரும், சென்னை பச்சையப்பன் கல்லூரி தத்துவ நூல் ஆசிரியருமான பாலகிருஷ்ண பிள்ளை திருவருட்பாவை 1931 முதல் 1958 வரை பன்னிரண்டு புத்தகங்களாக அருமையான பதிப்பாக வெளியிட்டார்.

அடிகளார் அருளிய முதற்பாடல்

இராமலிங்க அடிகள் முதன் முதலில் பாடிய தலம் கந்தகோட்டமே. பாடிய பதிகம் தெய்வ மணி மாலையே. முதன் பாடல்:

திரு ஓங்கு புண்ணியச் செயல்
ஓங்கி அன்பருள் திறலோங்கு
செல்வம் ஓங்கச் செறிவோங்க
அறிவோங்கி நிறைவான இன்பம் திகழ்ந் தோங்க

என்ற பாடல்தான் திரு அருட்பா திரு என்னும் மங்கல மொழியோடு தொடங்குகிறது.

(திருஅருட்பிரகாச வள்ளலார், திரு அருட்பா முதல் ஐந்து திருமுறைகள், முதல் பதிப்பு வரலாற்று முறைப்படி ஊரன் அடிகள் பதிப்பித்தது. இராமலிங்கர் பணிமன்றம் இரண்டாம் பதிப்பு, சென்னை 1981, பக்கம் 32-78)

ஆறுமுக நாவலர்

நாவலர் வாழ்வில் முக்கியத் திகதிகள்

1822 மார்கழி 18 புதன்கிழமை இரவு அவிட்ட நட்சத்திரத்தில் ஆறுமுக நாவலர் பிறந்தார். தந்தையார் ப.கந்தப்பிள்ளை, தாயார் சிவகாமியார்

1827 வித்தியாரம்பம்; நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியார் மற்றும் நல்லூர் வேலாயுத முதலியார் ஆகியோரிடம்

1834 ஆவணி: யாழ், வெஸ்லியன் மிசன் கல்லூரியில் (யாழ் - மத்திய கல்லூரி) ஆங்கிலம் கற்கச் செல்லல். இருபாலை நா.சேனாதிராய முதலியார். நல்லூர் ம.சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடம் தமிழ் கற்றல்

1841: யாழ், வெஸ்லியன் மிசன் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம் ஆசிரியர், பேர்சிவலின் வேதாகமத் திருப்புதலுக்குத் (பைபிளை மொழி பெயர்த்தல்) தமிழ்ப் பண்டிதராக இருத்தல்

1842 தந்தை மரணம்

1847 மார்கழி 31, வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்திலே சைவப் பிரசங்கம் தொடங்குதல்

1848 **முதல் இந்தியப் பிரயாணம், வேதாகம (பைபிள்) மொழி பெயர்ப்பை ஒப்புவித்து பேர்சிவலுடன் அச்சிடுவிக்கக் செல்லல்.**

1848 ஆவணி: வண்ணை சைவச் பிரகாச வித்தியாசாலை தாபித்தல்

1849 ஆடி: இரண்டாம் இந்தியப் பிரயாணம்; அச்சுயந்திரம் வாங்கச் செல்லல்; வேதாரணியத்தில் மேள தாளத்துடன் வரவேற்பு

1851 ஐப்பசி: நன்னூல் விருத்தியுரை வெளியிடல்

1852 பெரியபுராண வசனம் வெளியாதல்

1853 வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச சபை தாபிதம்; சுப்பிரபோதம் வெளியாதல்

1854 சைவதூசண பரிகாரம் வெளியாதல்

1854 ஐப்பசி: மூன்றாவது இந்தியப் பிரயாணம்

1856 வால்டன் பாதிரியுடன் கடிதங்கள் மூலம் வாதம்

1857 மார்கழி: தாய் மரணம்

1858 ஆனி: நான்காவது இந்தியப் பிரயாணம்; சென்னையில் வித்தியநுபாலன அச்சுயந்திரசாலை தாபித்தல்; பொன்னுச்சாமித் தேவர் நட்பு

1860 திருக்கோவையார் பழைய உரை வெளியாதல்

1861 திருக்குறள் பரிமேலழகர் உரை வெளியாதல்

1862 பங்குனி: யாழ்ப்பாணம் வருதல்

1864 ஐப்பசி: சிதம்பரம் சைவ வைத்தியசாலை தாபித்தல்

1869 போலியருட்பா மறுப்பு மற்றும் அருட்பா வழக்கு

1870 மாசி: ஆறு வருட இந்திய வாழ்க்கைக்குப் பின்பு யாழ்ப்பாணம் திரும்புதல், பெரிய வரவேற்பு ஊர்வலம்

1872 வண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை தாபித்தல்

1872 ஐப்பசி: யாழ்ப்பாணச் சமயநிலை வெளியாதல்

1872 – 1873 கோப்பாய் புலோலி ஆகிய இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தல்

1877 யாழ்ப்பாணத்தில் பஞ்சம்; நாவலர் ஏசண்டு துவைணன் அவர்களைக் கண்டித்தல்

1878 தேசாதிபதி லோங்டனுக்கு அரசாங்க ஊழல்கள் பற்றி விண்ணப்பம் அளித்தல்

1879 ஆடி: இறுதிப் பிரசங்கம்

1879 மார்கழி 2: சுகவீனமேற்படல்

1879 மார்கழி 5ஆம் நாள் மக நட்சத்திரத்தில் காலமானார்.

ஆறுமுக நாவலரின் நூல்கள்

நாவலரவர்கள் வெளியிட்ட நூல்கள்

கோயிற்புராணம் மூலம் (1860?)

கந்தபுராணம் (1886)

சேது புராணம் (1866)

பெரியபுராணம்

பாரதம் (1883)

கந்தரலங்காரம்

சுந்தரனுபூதி

அருணகிரிநாதர் திருவகுப்பு (1867)

திருச்செந்தூரகவல்

சிதம்பர மும்மணிக் கோவை (1867)

நால்வர் நான்மணி மாலை (1867)

குலத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

பட்டணத்துப் பிள்ளையார் பாடல்

மறைசையந்தாதி (1860?)

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி

விநாயகர் கவசம் (1851)

சிவகவசம் (1851)

சத்தி கவசம் (1851)

பதினோராம் திருமுறை (1869)

ஏரெழுபது (1886)

திருக்கை வழக்கம் *(1887)*

கோயிற் புராணவுரை *(1868)*

சைவசமயநெறியுரை *(1868)*

திருமுருகாற்றுப்படையுரை *(1853)*

திருச்செந்திநிரோட்டக யமகவந்தாதியுரை *(1851)*

சிவதருமோத்தரவுரை

மருதுரந்தாதியுரை *(1868)*

உபநிடத உரை *(1874)*

திருக்கோவையார் மூலமும் நச்சினார்க்கினியாருரையும் (பின்னர் இவ்வுரை பேராசிரியர் உரையென மாற்றப்பட்டது)

திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் *(1861)*

சௌந்தரியலகரியுரை *(1849)*

பெரியபுராண வசனம் *(1852)*

சிதம்பரமான்மியம்

சைவவினாவிடை: முதற் புத்தகம் *(1873)*

சைவ வினாவிடை: இரண்டாம் புத்தகம் *(1875)*

சிவாலய தரிசனவிதி *(1861)*

புட்ப விதி *(1851)*

அநுட்டானவிதி, முதற் புத்தகம் *(1870)*

அநுட்டானவிதி, இரண்டாம் புத்தகம்

குருவாக்கியம்

சுப்பிரபேதம் *(1853)*

கொலை மறுத்தல் மூலமும் சிதம்பரம் சுவாமிகளுரையும் *(1851)*

சைவதூஷண பரிகாரம் *(1854)*

யாழ்ப்பாணச் சமயநிலை *(1872)*

முதற் பாலபாடம் *(1850)*

இரண்டாம் பாலபாடம் *(1854)*

மூன்றாம் பாலபாடம் *(1864)* (நான்காம் பாலபாடம்)

இலங்கைப் பூமிசாத்திரம் *(1873)*

இலக்கண வினாவிடை: இரண்டாம் புத்தகம் *(1875)*

இலக்கணச் சுருக்கம் (1874)

நன்னூற் கண்டிகையுரை (1880)

நன்னூல் விருத்தியுரை (1851)

இலக்கணக் கொத்து (1866)

இலக்கண விளக்கச் சூறாவளி (1866)

தொல்காப்பிய சூத்திர விருத்தி (1866)

பிரயோக விவேகவுரை (1882)

உபமான சங்கிரகம் (1866)

இரத்தினச் சுருக்கம் (1865)

சூடாமணி நிகண்டுரை (1849)

தருக்க சங்கிரகம் (1861)

தொல்காப்பியம் சேனாவரையம் (பரிசோதித்தது) (1868)

நாவலரவர்கள் பதிப்பிக்கத் தொடங்கி முடிவுறாதவை

பெரியபுராணம் சூசனம் (1884)

கந்தபுராணம் வசனம் (1861)

திருவிளையாடற்புராண வசனம் (1910)

நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகள்

சிவராத்திரி புராணம்

திருவிளையாடற் புராணம்

நைடதவுரை

சிவஞானபோதச் சிற்றுரை (1885)

நன்னூல் விருத்தியுரை, 2ஆம் பதிப்பு

அநுட்டான விதி, மூன்றாம் புத்தகம்

சிவபூசா விதி

சிராத்த விதி

போசன விதி

குரு சிஷ்யர் கிரமம்

பூசைக்கிடம்பண்ணும் விதி

தருப்பண விதி

நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதத் தொடங்கியவைகள்

தேவாரம் (1859)

இரகுவம்சம்

உபதேச காண்டம்

இலக்கண வினாவிடை, முதற்புத்தகம்

அகராதி (தமிழ்)

அகராதி (சமஸ்கிருதம், தமிழ்)

அகராதி (இங்கிலிஷ், தமிழ்)

தருக்க பரிபாஷை

சமஸ்கிருத வியாகரண சாரம்

ஆகிய 85 நூல்கள் ஆகும்.

(ஆறுமுக நாவலர் பேராசிரியர் இரா. வை.கனகரத்தினம், கொழும்பு, 2007, பக்.55–59)

திருஅருட்பிரகாச வள்ளலாருக்கும், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலருக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் எழுந்தது எதனால்? அது அருட்பா – மருட்பா முதற்கட்ட போராக மாறியது எப்படி.......

முதற்கட்ட அருட்பா - மருட்பா போர்

நாவலரும் தமிழகமும்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்திலிருந்து 1848, 1849, 1854, 1858, 1864 ஆகிய ஆண்டுகளில் ஐந்து முறை தமிழகம் வந்துள்ளார். (நாவலர் மாநாட்டு விழா மலர், ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு, நல்லூர், யாழ்ப்பாணம், 1969 பக் 4) இந்தத் தருணங்களில் பரவலாகச் சென்னையிலும் சிதம்பரத்திலும் வாழ்ந்தவர் அவர். என்றாலும், சிதம்பரத்தோடு அவருக்கிருந்த உறவே அதிகம் எனலாம். சிதம்பரத்தோடு அவர் கொண்ட தொடர்பு 1858 இல் மேற்கண்ட இந்தியப் பிரயாணத்தோடே தொடங்கியது எனலாம்.

சென்னையில் 'வித்தியானுபாலன அச்சியந்திரசாலை'யை நிறுவி புத்தக வெளியீட்டில் கவனம் செலுத்திய நாவலருக்குச் சென்னையை விடச் சிதம்பரமே மேலானதாகத் தோன்றியது. இதற்குக் காரணம் சைவத்தில் அவருக்கிருந்த பற்றே எனலாம்.

சிதம்பரத்திலே நாவலருக்கு இருந்த ஈடுபாடு ஈழத்துச் சைவர்களிடையே பரம்பரை பரம்பரையாக இருந்த ஈடுபாட்டின் அடிப்படையிலே தோன்றியதாதல் வேண்டும். தில்லைக் கூத்தன்மீது தளராத பேரன்புபூண்ட ஈழத்துச் சைவர் தருமசாசனமாக வழங்கிய நிலபுலன்கள் பெருந்தொகையாக ஈழத்திலுள்ள ஆரியச்சக்கரவர்த்திகளில் 'பரராச சேகரம்' என்னும் பட்டப் பெயர் தரித்த மன்னனொருவன் 'சிதம்பர தரிசனம் செய்து, அங்கொரு அறநிலையத்தை ஏற்படுத்தியதாகச் செப்பேடு ஒன்று கூறுகின்றது. சிதம்பரத்திலுள்ள பரராசசேகரன் மடம் அதன் கூற்றை ஆதரிக்கிறது போலும். இம்மடத்திற்கு வன்னிய நாட்டைச் சேர்ந்த கயிலாய வன்னியன் தானமளித்த செய்தியை வேறொரு செப்பேடும் உரைக்கிறது. (பொ. பூலோகசிங்கம், ஈழம் தந்த நாவலர், காந்தகளகம், சென்னை, 1993, பக் 153) இது தவிரச் சிதம்பரத்தில் ஈழத்தவரால் நிறுவப்பட்ட வேறு சில மடங்கள், ஈழத்துப் புலவர்கள் சிதம்பரம் குறித்துச் செய்த இலக்கியங்கள் முதலியன ஈழத்திற்கும் – சிதம்பரத்திற்கும் உள்ள நெருக்கமான உறவை விளக்குகிறது.

சைவப் பாரம்பரியத்தோடு நெருக்கமான உறவுடைய சிதம்பரத்தை, இந்தப் பின்புலத்தில்தான் நாவலர் மிகவும் நேசித்தார். அதனால்தான் அங்கே இரத்தாஷி வருடம் (1864) ஜனவரி மாதம் 28ம் தேதி 'சைவப்பிரகாச வித்தியாசாலை' என்னும் பாடசாலையை நாவலர் நிறுவினார். இதற்கு முன்பே சிதம்பரத்தில் பெரிய சைவ வித்தியாசாலையையும் மடம் ஒன்றையும் நிறுவ விரும்பி நாவலர் வித்தியாபனம் ஒன்றை வெளியிட்டார். ஆனால், சிதம்பரத்தில் அவர் நிலை கொள்ள முடியாமல் போனதால் அத்திட்டம் வெற்றி அடையாமல் போனது; சிறிய பாடசாலையை மட்டுமே நிறுவ முடிந்தது.

நாவலர் சிதம்பரத்தில் ஆழமாக வேரூன்ற இயலாமல் போனதற்குப் பின்வருவனவே காரணங்கள்;

வள்ளலாரின் பாடல்களை மருட்பா என்று கண்டனம் செய்தமை என்பர் ஆய்வாளர் ப. சரவணன்

ஈழத்திலிருந்த இதே நிலை அக்காலகட்டத்தில் சிதம்பரத்திலும் நிலவியது. சிதம்பரத்திலே 1864இல் 'சைவப் பிரகாச வித்தியாசாலை'யை நிறுவிய நாவலர் அங்கே சிவதரிசனம் செய்து வரும் நாட்களில் அக்கோயிலிலுள்ள தீட்சிகர்களின் பூசா விதிகளையும் அநுட்டான ஆசாரங்களையும் கவனிக்க நேர்ந்தது. அதுபோது அவர்கள் செய்த குறைகள், அவர்கள் சிவதீட்சைப் பெறாதவர்கள் என்பதை வெளிப்படுத்தியது. அதைக் கண்ட நாவலர் தாம் நிறுவிய வித்தியா சாலையில் கூட்டமொன்றினைக் கூட்டி தீட்சிதர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி கண்டித்தார்.

நாவலரின் அருட்பா மறுப்பு

சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவச் சென்ற நாவலர் சிதம்பரத்திலே தீட்சிதர்களின் பகையைத் தேடிக்கொண்டார். ஆத்திரமடைந்த தீட்சிதர்கள் நல்ல தருணம் நோக்கியிருந்தனர்; அத்தருணமும் வந்தது.

ஆறுமுக நாவலர் ஐந்தாவது முறையாக தமிழகம் வந்தபோதே 'அருட்பா மருட்பா' விவாதம் நிகழ்ந்தது. இராமலிங்கரின் பாடல்களுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கின் காரணமாக அவை சென்னையிலுள்ள சில கோயில்களில்

பஞ்சபுராணங்களுக்குப் பதிலாக ஓதப்பட்டு வந்தன. இதனைக் கண்ட நாவலர் அருட்பா என்பது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் ஐந்து புராணங்களேயொழிய மற்றவை அல்ல என்று தாம் நிகழ்த்தி வந்த சுக்கிரவாரப் பிரசங்கங்களிலே விளக்கி வந்தார். அருட்பாவிற்கு விளக்கம் தருவதாக மட்டும் அக்கூட்டம் அமையாமல் வள்ளலாரையும் அவரது பாடல்களையும் நேரடியாகக் கண்டனம் செய்ததாகவும் இருந்தது.

அருட்பா என்பது அருளைப் பெற்றுப் பாடிய பா அல்லது அருளைப் பெறப் பாடிய பா என்று பொருள்படும். அருளைப் பெற்றுப் பாடிய பாக்களுக்குச் சான்று தேவாரம் முதலிய ஐந்து புராணங்கள்; அருளைப் பெறப் பாடிய பாக்களுக்குச் சான்று துண்டி விநாயகர் திருவருட்பா, கதிர்காமவேலர் திருவருட்பா முதலியன என்பது நாவலர் கருத்து. அப்படியானால் திருமந்திரம் அருளைப் பெற்றுப் பாடிய பாவல்லவா எனில், ‘ அருள் கொண்டு பாடப்பட்டனவேனும் சாத்திரரூபமாகவும் – விக்கினேசுரர் சுப்பிரமணியர் நாயன்மார் முதலியோரது துதிகளமைவுடனும் விளங்குகின்றன. வாதலின் அவைகளும் அடைமொழி அமைதியுடன் உரைக்கலாமெனவே துணிந்துரைக்கப்படும்‘ என்பார் நாவலர். எனவே, திருமந்திரத்தையே அருட்பாப் பட்டியலில் சேர்க்க விரும்பாத நாவலர் வள்ளலாரது பாடல்களை அருட்பா என்று சொல்லுவதை விரும்பவில்லை. பட்டினத்தார் பாடல் திரட்டு, குமர குருபரர் பாடல் திரட்டு, தாயுமானவர் பாடல் திரட்டு என்று அழைப்பதைப் போல வள்ளலாரது பாடல்களையும் அவரது பெயராலேயே இராமலிங்கர் பாடல் திரட்டு என்று அழைக்க வேண்டும் என்பதே நாவலரது வாதமாக இருந்தது.

திருவருட்பா தூஷண பரிகாரம் (1868)

இராமநாதபுரம் சுப்பிரமணிய ஐயர் அவர்களால் பரப்பிரமமுத்திராக்கர சாலையிற் பதிப்பிக்கப்பட்டதும், திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டதுமான திருவருட்பா தூஷண பரிகாரம் நூல் அருட்பா மருட்பா பிரச்சினையில் 1868இல் வெளியான

முதலாவது கண்டன நூல். ஆறுமுகநாவலருக்குப் பதில் எழுத்து மூலம் சொல்லும் வகையில் அமைந்தது. இந்த நூல் 16 பக்கங்களில் வெளிவந்தது.

திருமயிலை சண்முகம் பிள்ளை

சென்னை குயப்பேட்டையில் பிறந்து மயிலாப்பூரில் வாழ்ந்தவர் சண்முகம் பிள்ளை. மதுரை தமிழ்ச் சங்கத்தின் மகா வித்வான் பட்டம் பெற்றவர். அஷ்டாவதானம் சபாபதி முதலியார், கோமளபுரம் ராசகோபாலப்பிள்ளையிடம் கல்வி பயன்றவர். தொண்டை மண்டலம் துளுவேளாளர் பாடசாலையிலும், திரு மயிலை சாந்தோம் கல்லூரியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். தமிழ்த் தாத்தா உவேசாவுக்கு முன்பே 1894இல் மணிமேகலையை அச்சிட்டவர்.

கம்பராமாயணம் அயோத்தியா காண்டவுரை 1891இல் பொன்வண்ணத்தந்தாதி, திருக்கோயிலாய ஞான உலா, தஞ்சை வாணன் கோவை முதலிய நூல்களுக்கு உரை எழுதினார். மாயப்பிரபாவம், சிவவாக்கியர் பாடல்கள் முதலியவற்றைப் பதிப்பித்தவர் திருமயிலை சண்முகம் பிள்ளை ஆவார்.

சி.வை.தாமோதரம் பிள்ளை

அருட்பா மருட்பா கண்டங்கள் நடைபெற்று வந்த இக்கால கட்டத்தில் நாவலரின் சீடர் சி.வை.தாமோதரம் பிள்ளை (1832–1901) 'தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையோடு, நாவலரைக் கொண்டு பரிசோதித்து, அச்சிற் பதிப்பித்தார். 1868ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி முதல் சென்னை தினவர்த்தமானியில் தொடர்ந்து சேனாவரையரைப் பதிப்பைப் பற்றி விளம்பரமும் வந்தது.' (சி.கணபதி பிள்ளை, ஈழகேசரி, 7.9.1950) அவ்விளம்பரத்திலே தாமோதரம் பிள்ளை நாவலரை **'இலக்கண இலக்கியங்களில் மகாவல்லவரும், சென்னை முதல் ஈழமீறாகவுள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கு இணையில்லா வருமாகிய...'** என்று புகழ்ந்திருந்தார். இது தமிழக அறிஞர்களை அவமதிப்பதாக உள்ளதென அருட்பா குழுவினர் எண்ணினர்.

முதற்கட்ட அருட்பா – மருட்பா போர்

யாழ்ப்பாணத்து நல்லூர் த.கைலாசபிள்ளையால் முதன் முதலில் எழுதப்பட்டது ஆறுமுகநாவலர் சரித்திரம். சென்னை பட்டணம் வித்தியாநு பாலயைந்திர விலையில் அச்சிடப்பட்டது. (1916) அந்த நூலில் பத்தாவது அதிகாரம் அருட்பா வழக்கு ஆகும். அதில் பக்கம் 71இல் 'இராமலிங்கம் பிள்ளைக்கும் நாவலருக்கும் முன்னே வேறு யாதொரு விரோதமும் இல்லை' என்கிறார்.

வள்ளலார் – நாவலர் வாதம்

'இராமலிங்கருக்கும் – நாவலருக்கும் இடையே முன்னே யாதொரு விரோதமும் இல்லை' என்று கைலாச பிள்ளை குறிப்பிட்டிருந்தாலும் குல ஏற்றத்தாழ்வும், புலமைக் காழ்ப்புணர்ச்சியுமே அருட்பா எதிர்ப்புக்குக் காரணம். பிள்ளை சாதியில் கார்காத்தப் பிள்ளை, சோழியப் பிள்ளை, கருணீகர் (சைவர் /அசைவர்) பிள்ளை என்னும் முப்பிரிவு உண்டு. இதில் முதலிடம் வகிப்பது கார்காத்தப்பிள்ளை. அதனையடுத்து இடம் பெறுவன சோழியப்பிள்ளையும் கருணீகரும். இந்தச் சாதிப்பிரிவில் நாவலர் முதலிடத்தையும் இராமலிங்கர் கடைசி இடத்தையும் வகிப்பர். சாதியப் பிரிவில் நாவலருக்கு அடுத்த நிலையில் கூட இல்லாத இராமலிங்கர் தமது புலமையாலும் – வாதத்தாலும் அவரை மிஞ்சியதே அருட்பா மருட்பா நிகழ்ச்சிக்கும் மான நட்ட வழக்குக்கும் வித்திட்டது. 1867இல் திருவருட்பா வெளியாவதற்கு முன்னே நாவலரை இராமலிங்கர் சிறுவாதம் ஒன்றில் மிஞ்சினார் என்பர். அது வருமாறு;

'பனிக்காலம் மிகக் கொடியது' – 'பனிக்காலம் மிக நன்று'

சிதம்பரத்தில் இராமலிங்கரும் – நாவலரும் மார்கழி மாதத்தில் தில்லை தரிசனத்தன்று ஒருவரையொருவர் சந்தித்து அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது குளிரின் தன்மையைக் கொண்டு நாவலர், வள்ளலாரைப் பார்த்து சாதாரணமாகப் 'பனிக்காலம் மிகக் கொடியது' என்றார். உடனே வள்ளலார் 'பனிக்காலம் மிக நன்று' என்றார். பனியின் கொடுமை இன்று அதிகமாக இருக்கும் போது பனிக்காலம் கொடியதுதானே என்றார் நாவலர். இல்லை நன்று என்று

மீண்டும் அதையே கூறினார் இராமலிங்கர். எப்படி என்று கேட்டார் நாவலர். பனிக்கு + ஆலம் + மிக நன்று என்று அச்சொற்றொடரைப் பிரித்து 'பனியை விட ஆலம் (விஷம்) நல்லது என்றால் பனி ஆலத்தினும் கொடியது தானே', நீங்கள் கூறிய அதே பொருளைத்தான் நானும் கூறினேன் என்று விவரித்தார் இராமலிங்கர் என்பர் ஆய்வாளர் பா.சரவணன் (அருட்பா X மருட்பா சென்னை 2001 பக்கம் 69 –70) சாதாரண உரையாடலில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியே வள்ளலார் மீது நாவலரைப் பொறாமைப்பட வைத்தது.

மாவண்டூர் தியாகேச முதலியார்

சென்னை தத்துவபோதினி அச்சகக்கூடத்தில் 1869 இல் 16 பக்கங்களில் போலியருட்பா மறுப்பு என்றும் நூலினை மாவண்டூர் தியாகேச முதலியார் பெயரில் நாவலர் வெளிப்படுத்தினார். வள்ளலாரின் மாணவர்களுள் ஒருவராய் இருந்த மாவண்டூர் தியாசேக முதலியார் வள்ளலாரை விட்டு நீங்கி நாவலர் அணியில் சேர்ந்து கொண்டு வள்ளலாரைக் கண்டிக்க முற்பட்டார். அப்போது அவரது பெயரால் ஆறுமுகநாவலரே எழுதி வெளியிட்ட நூல் போலியருட்பா மறுப்பு ஆகும்.

தீட்சிகர்களும் – வள்ளலாரும்

1869 ஆனியில் உத்தரதரிசன தினத்தில் தீட்சிதர்கள் வள்ளலாரை அழைத்துக் கொண்டு சிதம்பரம் பேரம்பலத்திலே கூடினார்கள். சி.கணபதிப் பிள்ளை 1968இல் எழுதிய நாவலர் என்னும் நூலில் 19வது பக்கத்தில் இராமலிங்க அடிகளாரை பேச வைத்தார்கள் என்றே குறிப்பிடுகிறார்.

நாவலர்

இராமலிங்க அடிகளார் நாவலரவர்களைப் பற்றிப் பேசும்பேது நாவலர் என்னும் சொல்லே நா – அலர் எனப்பிரித்துப்

பொய்யன், வித்தையில்லாதவன்,
நாவிற் பழிச் சொல்லை உடையவன்

ஏனப் பலவாறு அதற்குப் பொருள்
தரும் விதத்தில் பேசினார்.

வள்ளலார் நாவலர் என்ற சொல்லுக்கு பத்துப் பொருள் கூறியதாகவும் சொல்லப்படுகிறது.

16.12.1869 வெளிவந்த பீறிமன் (Freeman) இதழ் இதுகுறித்து தெரிவித்துள்ளது.

மஞ்சக்குப்பம் வழக்கு

சிதம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாவலர் கடலூர் - மஞ்சக்குப்பம் கோர்ட்டில் தீட்சிதர்கள், இராமலிங்கர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். (வழக்குத் தொடுத்த தேதியை அறியமுடியவில்லை) கூட்டத்தில் நடந்தவற்றை நேரடியாகக் கவனித்தே நாவலர் வழக்குத் தொடர்ந்தார் என்பர். தில்லையில் தரிசன தினத்தில் இப்பேரம்பல பிரசங்கம் நடந்ததால் நாவலருக்கு இச்செயல்களை நேரடியாக அறிந்து கொள்ள வாய்ப்பிருந்தது போலும். 'அத்தரிசன தினத்தில் நாவலரும் சிதம்பரத்திற்றானேயிருந்தார். நடந்தவைகளையெல்லாம் நன்கு அறிந்து கொண்டார். அடுத்த நாளே மஞ்சக்குப்பம் கோர்ட்டில் சுவாமி மீது மானநட்ட வழக்குத் தொடுத்தார்' (சி.கணபதிப் பிள்ளை, நாவலர், இலங்கை 1968 பக்கம் 20) என்ற கூற்றும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஆனால் இக்கூற்றுக்கு ஆதாரம் உண்டோ என்பது தெரியவில்லை என்பார் பொ.பூலோகசிங்கம்.

வழக்கு நடந்து முடிந்து இன்றிலிருந்து (2015) சரியாக 146 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அது குறித்த சான்றுகள் எதுவும் சரியாகக் கிடைக்க வில்லை. மஞ்சக்குப்பம் கோர்ட்டிலும் இது குறித்த தடயங்கள் எதுவும் அகப்படவில்லை. எனவே, வழக்கு குறித்து எழுதும் வரலாற்று ஆசிரியர்களிடையே முரண்பாடான கருத்துக்கள் காணப்படுகின்றன. சில கருத்துக்கள் வரலாற்று நியதிகளுக்கு முற்றிலும் முரண்பட்டவனவாகவும் உள்ளன. வழக்கு குறித்து கருத்து தெரிவிப்பதில் ஈழத்தவரும் - தமிழகத்தவரும் பல நிலைகளில் முரண்படுகின்றனர்.

வழக்கு பற்றி அறிந்து கொள்ளச் சரியான சான்றுகள் எதுவும் கிடைக்காததால் அந்தக் காலகட்டத்தில் வெளியான

பத்திரிகைகள், நாவலரோடு தொடர்புடைய வே.கனகரத்தின உபாத்தியாயர், த.கைலாச பிள்ளை போன்றோர் எழுதிய நாவலர் வாழ்க்கை வரலாற்று நூல்கள் முதலியவற்றை ஈழத்தவர்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டுள்ளனர். பத்திரிகைகள் என்று பார்க்கும்பொழுது அதில் முதன்மை வகிப்பது பிறீமன். 'வழக்குக் குறித்த செய்தியை இப்பத்திரிகை *16-12-1869, 20-01-1870, 03-02-1870* ஆகிய மூன்று தினங்களில் வெளியிட்டுள்ளது.' (K.Arumainayagam, Arumuga Navalar, Karanguli and the Dikshadars, TRIBUNE, Vol.22, No.36, pp, 18-21), (25-2-1978) மேற்கோள்: பொ.பூலோகசிங்கம், *1993:202)* வழக்குக் குறித்து பிறீமன் பத்திரிகை கூறுவது வருமாறு;

ஆறுமுக நாவலர் அறுவர் மீது வழக்குத் தொடுத்தார். முதலாம் எதிரி சபாநடேச தீட்சிதர். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மானநட்டமும் பயமுறுத்தலும்; அடுத்த நான்கு எதிரிகளால் தீட்சிதர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பயமுறுத்தல்; ஆறாம் எதிரியாகிய இராமலிங்கர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மானநட்டமாகும். (அறுவரில் தீட்சிதர்கள் நால்வரை விடுவித்து இருவர் மட்டுமே குற்றவாளிகள் என்பர்) *1869*ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் தேதி தீட்சிதர்கள் கூட்டிய கூட்டத்திலே, நாவலரவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆவேதனங்களில் சிவதீட்சை பெறாமலே தீட்சிதர்கள் பூசை செய்வதைக் கண்டித்தமையை விவாதிக்கும்போது தீட்சிதர்கள், நாவலரவர்களைக் கண்டபடி வைததோடு அமையாது அவரை மூடன் என்று நிந்தித்தனர். பிரதம தீட்சிதர் சபாநடேசன் ஆத்திரமிகுதியாலே தமது ஆசனத்தை விட்டெழுந்து, நாவலரவர்கள் தங்கியிருக்கும் இடம் சென்று, அவரை இழுத்து வந்து, நன்றாக அடிக்கப் பெருவிருப்பினை உணர்த்திய போதும், அவருடன் துணைபோக யாரும் முன்வரவில்லை. இராமலிங்கர் அக்கூட்டத்திலே 'நாவலர்' என்ற சொல்லுக்கு விகற்பமான பத்து அர்த்தங்கள் அவதூறு செய்ததை உள்ளடக்கியது.

நாவலரவர்கள் பேரம்பலப் பிரசங்கம் சம்பந்தமாக வைத்த வழக்கு கடலூர் நீதிமன்றத்தில் இணை நீதிபதி திரு.'றொபேர்ட்ஸ்' (Mr.Robarts) முன்னிலையில் *1869* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *18*ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்

கொள்ளப்பட்டது. உள்ளூர் வழக்குரைஞர் ஒருவர் துணையுடன் நாவலரவர்கள் அன்று வழக்கினை நடத்தினார்கள். (நாவலர் ஒன்பது சாட்சிகளுடன் வந்தாரேயன்றி, வக்கீல் ஏற்படுத்த வில்லை என்பர்) ஆனால் வழக்கின் இயல்பாலும் எதிரிகள் பல வழக்குரைஞர்களைப் பயன்படுத்தியதாலும் திறமையான வக்கீலின் இன்றியமையாமையை உணர்ந்து நாவலரவர்கள் ஜி.பி.சவுந்தரநாயகம் பிள்ளையை வக்கீலாக வைத்துக் கொண்டார். அடுத்த தவணை நவம்பர் மாதம் 22ஆம் தேதி வந்தபோது சவுந்தரநாயகம் பிள்ளை நாவலரவர்களுக்காகச் சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்டார். (தவணை நாள் 22ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டதற்கு காரணம், தலைமைத் தீட்சிதரும் இராமலிங்கரும் குறிப்பிட்ட அக்கூட்டத்தில் பங்கு பெறவில்லையென்றும், அதே நேரத்தில் வேறு வேறு இடங்களில் வேறு வேறு கருமம் ஆற்றிக் கொண்டிருந்தவர்கள் என்றும் நான்கு தீட்சிதர்கள் ஏகமனதாகச் சாட்சியளித்ததால்) அவர் 22, 23, 24 ஆம் தேதிகளில் நான்கு பேரை நீதிமன்றத்திலே விசாரித்தார். (சாட்சி சொல்ல வந்த ஒன்பது பேர் எவர் என்பது தெரியவில்லை) தம் கட்சிக்காரரின் வழக்கை நிரூபிக்க அச்சாட்சியங்கள் போதுமானவை என்று கருதியதாற் சவுந்தர நாயகம் பிள்ளை 25ஆம் தேதி வியாழக்கிழமை நீதிமன்றம் கூடியபோது தம் தரப்பு வாதத்தை முடித்துக்கொண்டதாக அறிவித்தார். அச்சந்தர்ப்பத்தில் அவர் நீதிமன்றத்தினை விளித்து, ஆற்றலும் சொல்வன்மையும் மிக்கதோர் உரையினை ஆற்றினார். இவ்வுரையிலே மானநட்டத்தினாற் பாதிக்கப்பெற்ற நாவலரவர்களின் நிலைமை, தரம், மதிநுட்பம், கல்வி, சமயவார்வம், நாட்டுப்பற்று ஆகியவற்றை விரிவாக எடுத்துரைத்து, மானநட்டத்தினால் அவரது புகழுக்கு ஏற்பட்ட பங்கத்தினை அழுத்திக் கூறினார். சாட்சியங்கள் மூலம் முதலாம் எதிரி சபாநடேசருக்கும் ஆறாம் எதிரி இராமலிங்கருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் தெளிவாகவும் முற்றாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதைச் சவுந்திரநாயகம் பிள்ளை எடுத்துக்காட்டினார். அடுத்துப் பேச எழும்பிய எதிர்த்தரப்பு வக்கீல் மிஸ்டர் ஸோ (Mr.Show) பல குறிப்புகளுடன் அமர்ந்துவிட்டார். நீதிபதி முதலாம், ஆறாம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடுக்கத் தொடங்கினார். அப்போது எதிர்தரப்பு வக்கீல் தம் கட்சிகாரருக்குச்

சாட்சியட்டவணை ஒன்றினை அளிக்க அவகாசம் கேட்டபோது, சவுந்தரநாயகம் பிள்ளையின் ஆட்சேபத்தினையொட்டி உடனடியாக அட்டவணை சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென நீதிபதி பணித்தார்.

இராமலிங்கர் விடுவிக்கப்பட்டார்.

அட்டவணையிலே இடம் பெற்ற பேர்வழிகளைச் சோடிப்புக்கு இடமளியாமல் இருப்பதற்கு உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று சவுந்தரநாயம் பிள்ளை வேண்டியதை அடுத்து, நீதிபதியின் பணிப்புரையின்படி, சாட்சிகள் அழைக்கப் பெற்றபோது ஒருவரும் முன்வரவில்லை. சவுந்தரநாயகம் பிள்ளை அட்டவணை தயாரித்தபோது அவர்கள் அங்கே இருந்ததையும் பின்பு உடனடியாக அவ்விடம் நீங்கியதையும் நம்மால் நிரூபிக்க முடியும் என்று கூறி, அச்சூழ்நிலை அவர்கள் தம் சாட்சியங்களை நம்ப முடியாமற் செய்வதோடு, அவற்றிற்கு அளிக்க வேண்டிய மதிப்பினையும் குன்றச் செய்து விட்டதையும் எடுத்துக் கூறினார். மறுநாள் (26ம் தேதி) எதிரிகளின் சாட்சியங்களை விசாரிக்கத் தீர்மானித்தபோதும் அவர்களுடைய வழக்குரைஞர் அன்றுதாம் அவர்களின் தேவையைத் தவிர்த்துக் கொள்வதாகக் கூறினார். (டிசம்பர் 20 ஆம் தேதி தீர்ப்பு கூறுவதற்குத் தவணை இடப்பட்டது. நவம்பர் 26 தொடங்கி டிசம்பர் 20 ஆம் தேதி வரை தீஷிதரும் இராமலிங்கரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்). அடுத்த தவணை டிசம்பர் 18ஆம் 20ஆம் தேதிகளிலே நடைபெற்றபோது எதிரிகளின் சாட்சிகள் நால்வர் விசாரிக்கப்பட்டனர். சவுந்தரநாயகம் பிள்ளை அவர்களைக் குறுக்கு விசாரணை செய்து சாட்சியத்தினைக் குலைத்துவிட்டார். எதிர்தரப்புச் சாட்சியங்களை ஒதுக்கி விடுவதற்கான சான்றுகள் போதுமான அளவு நீதிமன்றத்திலே வெளிப்படுத்தப் பட்டுள்ளதையும் அவர் தெளிவாக்கினார். எதிர்தரப்பினர் பயன்படுத்திய பிறதிடமிருப்பு வாதத்தினை மறுக்கத் தாம் புதிய சாட்சிகளை அழைக்க அனுமதி கேட்கப் போவதாகச் சவுந்தர நாயகம் பிள்ளை கூறினார். அவர் கூறியவைகளைக் கேட்ட நீதிபதி றொபேர்ட்ஸ் எவ்விதமான தாமதமுமின்றித் தமது தீர்ப்பினை எழுதிவிட்டார். அதன் சாரம், முதல் எதிரிக்கு ரூபாய் 50/

– அபராதம் அல்லது தவறினால் ஒரு மாதம் சாதாரண மறியல்; இராமலிங்கர் விடுவிக்கப்பட்டார். தீர்ப்பினை விரிவாக வெளியிடக் கருதியிருப்பதாகப் பிறீமன் பத்திரிகை 1870ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதி இதழிலே கூறியுள்ளது. பிறீமன் குறிப்பிடும் தீர்ப்பு விரிவு பற்றிய வெளியீடு கிடைக்கவில்லை என்பர் ஆய்வாளர் ப. சரவணன்.

எஸ்.வையாபுரிபிள்ளை

நாவலரின் வழக்கு பற்றிய விடயத்தில் ஈழத்தவரின் கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையே தமிழகத்தில் நிலவுகிறது. நாவலரால் தொடரப்பட்ட வழக்கு 'மானநட்ட வழக்கு' என்று ஈழத்தவர் கூறியிருக்க, 'வள்ளலாரின் பாடல்களை அருட்பா என்று கூறுதல் கூடாது' என்பதற்காகவே வழக்கு தொடரப்பட்டது என்பது தமிழகத்தோர் கருத்து. வழக்குக்குரிய ஆதாரங்களாக ஈழத்தவர் பயன்படுத்திய பத்திரிகைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் போன்ற எவற்றையும் தமிழகத்தோர் பயன்படுத்தவில்லை. வெறும் வாய்மொழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே இவ்வழக்கு முடிவை சித்தரித்துள்ளனர். வழக்கு பற்றிய விடயத்தை வாய்மொழிக் கதையின் அடிப்படையில் முதன் முதலில் எழுதியவர் எஸ்.வையாபுரிபிள்ளை என்றே தோன்றுகிறது. அவர், '.....வழக்கு எதைப் பற்றியதென்றால், சுவாமிகள் தமது பாடலுக்கு அருட்பா என்று பெயரிட்டது பற்றியேயாகும். அதனை அருட்பா மருட்பா விவகாரம் என்று கூறி வந்தனர். நாவலர் அருட்பா என்ற தொடரை தேவாரம் முதலிய அருள் நூல்களுக்கே சொல்லுதல் வேண்டும் என்றும், இராமலிங்க சுவாமிகள் பாடல்களுக்கு வழங்குதல் கூடாது என்றும் அவர்கள் தமது பாடல் புத்தகத்தை அருட்பா என்ற மகுடஞ் சூட்டி அச்சிட்டது தவறு என்றும் வாதித்துக் கோர்ட் மூலம் அவ்வாறு செய்தலை நிறுத்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று வழக்கிட்டனர்.' (தமிழ்ச்சுடர் மணிகள், சென்னை 1995 பக்கம் 113)

துமிலன்' 31-8-1961 - குமுதம்

வையாபுரிப் பிள்ளைக்கு அடுத்து வழக்கைப் பற்றித் தமிழகத்தில் பேசியவர் 'துமிலன்' 31-8-1961 இல் 'புகழ்

பெற்ற விவாதங்கள்' என்னும் தலைப்பில் அவர் இது குறித்து குமுதத்தில் எழுதினார். அதன் முக்கிய பகுதி பின்வருமாறு;

'வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளன்று நீதிமன்றத்தில் இரண்டு கட்சிக்காரர்களும் திரளாகக் கூடியிருந்தனர். சுவாமிகள் வரப்போவதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். திடீரென்று ஜனங்கிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இடுப்பில் முழங்காலுக்கு மேலே வெள்ளாடை தரித்து, மேலேயும் அதே ஆடை போர்த்துக் கொண்டிருந்த உருவம் நீதிமன்றத்தை நோக்கி வந்தது. நடுத்தர உயரம், மெலிந்த சரீரம், நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற மேனி, நீண்ட மெல்லிய நாசி, பொறி பறக்கும் கண்கள், விசனக்குறி தோன்றிய முகம் இத்தகைய தோற்றத்தோடு இராமலிங்க சுவாமிகள் நீதின்றத்துக்குள் பிரவேசித்தார். அவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றார்கள். ஆறுமுக நாவலரும் எழுந்து நின்றார்! இதை கவனித்த நீதிபதி ஆச்சிரியமடைந்தார். 'வழக்கு தொடுத்த நீங்களே எழுந்தீர்களே' என்று கேட்டார். அவர் ஒரு பெரியவர் என்ற முறையில் எழுந்து நின்றேன் என்று நாவலர் பதிலளித்தார். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.'

'துமிலன் எழுதிய இந்தக் கட்டுரையையே ம.பொ.சி. தமது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலில் எடுத்தாண்டுள்ளார்.' (ம.பொ.சிவஞானம், சென்னை *1963*, பக்கம் *246–47*) இதனைத் தொடர்ந்து வெளிவந்த 'இராமலிங்க அடிகள் திருவரலாறு' என்னும் நூலும் இதையே குறிப்பிட்டுள்ளது; ஆனால் வழக்கு மானநட்ட வழக்கை அடிப்படையாகக் கொண்டது என்பதை அந்நூல் ஏற்கிறது. அருட்பா மருட்பா வாதங்கள் தீவிரமாக நடைபெற்று, மருட்பா வாதம் தோற்ற பின்பு அதற்குப் பழி வாங்கும் பொருட்டே நாவலரால் வழக்கு தொடுக்கப்பட்டது என்னும் தொனியில் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

'வாதத்தாற் பயனில்லை என்றுணர்ந்த நாவலர் வழக்கு தொடுக்கலானார்.' வள்ளற் பெருமான் சிதம்பத்திற் செய்த சொற்பொழிவொன்றில் தம்மைத் தூற்றியதாகவும், அவரும் அவரோடு சேர்ந்தவர்களும் தம்மை அடிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில்



*1869*ஆம் ஆண்டில் வள்ளற் பெருமான் மீது நாவலர் ஒரு குற்ற வழக்குத் தொடுத்தார். வள்ளலார் கோர்ட்டில் நுழைந்த போது நாவலரும் மற்றவர்களும் எழுந்து நின்றார்கள் என்று துமிலன் கூறியிருக்க, ஊரனடிகள் அதையும் தாண்டி'...... நீதிபதியும் தன் இருக்கையினின்று பாதி எழுந்து விட்டார். நீதிமன்றத்திற்கு எவ்வளவு பெரியவர் வரினும் நீதிபதி எழுந்திருத்தல் வழக்கமன்று. வள்ளற் பெருமானைக் கண்டவுடன் தன்னையறியமாலே நீதிபதியும் எழலானார்' என்று நீதிபதியும் எழுந்து நின்றதாக, எழுதியுள்ளார். இதனை தொடர்ந்து விசாரணை நிகழ்ச்சியையும் தீர்ப்பு முடிவையும் விவரிக்கிறார். அது வருமாறு;

நீதிபதி: வாதியாகிய நீர் பிரதிவாதி நுழைந்தபோது எழுந்து நின்றது ஏன்?

வாதி: எல்லோரும் எழுந்து நின்றார்கள். நானும் எழுந்து நின்றேன்.

நீதிபதி: எல்லோரும் ஏன் எழுந்து நின்றார்கள்?

வாதி: பெரியவர் வருகிறாரே என்று எழுந்து நின்றார்கள்.

நீதிபதி: நீர் எதற்காக எழுந்து நின்றீர்?

வாதி: நானும் அதற்காகத்தான் எழுந்து நின்றேன்.

நீதிபதி: பெரியவர் வருகிறார் என்பதற்காகத்தானே.

வாதி: ஆம்

நீதிபதி: பிரதிவாதியைப் பெரியவர் என்று நீரே ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அமர்ந்திருந்த நீர் பிரதிவாதி கோர்ட்டில் நுழைந்த போது எழுந்து நின்றீர். அதனோடன்றிக் கையையும் கூப்பினீர். பிரதிவாதியைப் பெரியவர் என்று ஒப்புக்கொள்ளும் நீர் வழக்கு தொடுத்திருக்க வேண்டாம். வழக்குத் தொடுத்த நீர் உமது கட்சி உண்மையாயிருக்கும் பக்கத்தில் பிரதிவாதியைக் கண்டு எழுந்து நிற்க வேண்டாம். உமது கட்சியில் உண்மையில்லை என்று நம்முன் நிகழ்ந்தது உமது செய்கையாலேயே தெளிவாகி விட்டது. ஆகவே வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம். கோர்ட் கலையலாம்.

நீதிபதி இருக்கையினின்றெழுந்து தனியறைக்குச் சென்றுவிட்டார். கோர்ட் கலைந்தது; உண்மை வென்றது. (ஊரன் அடிகள் என்றும் சன்மார்க்க தேசிகன், இராமலிங்க அடிகள் வரலாறு, வடலூர், 1971, பக்கம் 425– 427)

இந்த நூல்களையெல்லாம் தொடர்ந்து வெளிவந்த நூல்களுள் குறிப்பிடத்தக்கது 'திருவருட்பா ஆராய்ச்சி' இராமலிங்க அடிகள் திருவரலாறு வெளிவந்து 14 ஆண்டுகள் கழித்து இது வெளிவந்தது. இதனுள்ளும், வள்ளலாரது பாடல்களை அருட்பா என்று கூறக்கூடாது என்பதற்காகவே வழக்கு தொடுக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது. அத்துடன் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு கூறியவர் 'முத்துசாமி அய்யர்' என்று எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்ட இச்செய்தி மறைமலையடிகள் நூலகத்திலுள்ள 'பழைய ஏடு' ஒன்றில் உள்ளதாக மாணிக்கவாசகம் குறிப்பிடுகிறார். வழக்கு நடைபெற்றது 1869. இவர் 1870 என்று குறிப்பிட்டுள்ளார். தீர்ப்பு வழங்கியவர் நீதிபதி ராபர்ட் இவரோ முத்துசாமி ஐயர் என்கிறார். இதனை எடுத்து வருவன பழைய ஏட்டிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டதாக அடிக்குறிப்பிட்டுள்ளார். இவரது கருத்துக்கள் முன்னுக்குப்

பின்முரணாக அமைந்துள்ளன. *(இரா.மாணிக்கவாசகம் திருஅருட்பா ஆராய்ச்சி, சென்னை 1985 பக்கம் 26)*

வழக்கின் உண்மை நிலை

வழக்கு தொடர்பாக ஈழத்தவர் கருத்தையும் தமிழகத்தவர் கருத்தினையும் ஒப்பிட்டு ஆராயும் போது வழக்கு மானநட்ட வழக்குதான் என்பது உறுதியாகிறது. தமிழகத்தவர் கூறுவதுபோல இராமலிங்க அடிகளது பாடல்களை மருட்பா என்று சொல்ல வேண்டும்; அருட்பா என்று கூறக்கூடாது என்பதற்காக வழக்கு தொடரப்பட்டது என்று கூறுவது பொருத்தமன்று, அத்துடன் அடிகள் நீதிமன்றத்தில் நுழையும்போது நீதிபதி உட்பட அனைவரும் எழுந்து நின்று அவரை வணங்கினர்; நாவலரும் வணங்கினார் என்றெல்லாம் தமிழகக்தில் பேசியும் எழுதியும் வருவது புனைவேயன்றி உண்மையன்று.

இதேபோல வள்ளலார் நீதிமன்றத்தில் பொய் சத்தியம் கூறி தப்பித்துக் கொண்டார் என்று ஈழத்தவர் எழுதுவதும் பொருந்தாது. வழக்கறிஞர் ஜி.பி.சவுந்திரநாயகம் அடிகளை நோக்கி நீர் குற்றவாளியா? சுற்றவாளியா? என்று கேட்டபோது தாம் சுற்றவாளி என்று அவர் கூறியதாகவும், இவ்வாறு தமது வாக்கைப் பேணாததனால் மேற்கொண்டு குற்றத்தை நிரூபிப்பது செத்த பாம்பை அடிப்பது போலாகும் என்று கருதி நாவலர் வழக்கை தொடராது விட்டார்; வள்ளலார் விடுதலை செய்யப்பட்டார் என்றும் ஈழத்தவர் எழுதுவர். நாவலரை உயர்த்திப் பிடிக்க வேண்டியே ஈழத்தவர் இவ்வாறு எழுதுவதை அவதானிக்கலாம். ஒட்டுமொத்தமாக வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கலாம். அதை விடுத்து தீட்சிதர்களுக்கு மட்டும் ஏன் தண்டனை வாங்கித் தந்தார்? அவர்களையும் மன்னித்திருக்கலாமே! வள்ளலார் தம் மீது சுமத்திய குற்றத்தை மறுத்தார் என்பதற்காக, அவர் பொய் கூறித் தப்பித்துக் கொண்டார் என்று எழுதும் ஈழத்தவரை நோக்கி, அதனை மீண்டும் நிரூபிக்க நாவலர் ஏன் முனையவில்லை என்று தமிழகத்தோர் கேட்டால் அதற்கு என்ன பதில் கூறுவர்? 'செத்த பாம்பை அடிப்பது போலாகும்' என்பதால் நாவலர் விட்டுவிட்டார் என்றெல்லாம் எழுதி ஈழத்தவர் தப்பித்துக் கொள்ள முடியாது. அவ்வாறு அவர்கள் எழுதுவது

நாவலரது பெருந்தன்மையைக் காட்டவில்லை; மாறாக அவரது இயலாமையையே காட்டுகிறது.

ஒரு வழக்கில், குற்றம் சுமத்துபவர் அச்சங்கதி உண்மை என்பதை நிரூபிக்க வேண்டுமெனில் அதனை மெய்ப்பிக்கும் சுமை அவரையே சாரும் என்பதனை 'இந்தியச் சாட்சியச் சட்டம்' பிரிவு 101, 103, 105 ஆகியன விவரிக்கிறது. இந்தப் பிரிவுகளின்படி நாவலர் தொடர்ந்த வழக்கை அடிகள் மறுத்தபோது அதனை அவர் நிரூபித்திருக்க வேண்டும். நாவலர் அவ்வாறு செய்யாததை எண்ணிப் பார்க்கும்போது இது அடிகள் மீது திட்டமிட்டுச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்றே தோன்றுகிறது. மேலும், 'நாவலர்' என்னும் சொல்லுக்கு வேறு சில அர்த்தங்கள் அடிகள் கற்பித்ததாலேயே அவர் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டது என்பது உண்மையாயினும் அவர் எந்தச் சூழலில் இவ்வாறு பொருள் கூறினார் என்பதும் ஆராயப்பட வேண்டியதாகும். தீட்சிதர்களது வேண்டுகோளை ஏற்று வள்ளலார் நாவலர் என்னும் சொல்லுக்குப் பொருள் விரிக்கத் தொடங்கினாரேயன்றி பிரசங்கத்தில் 'நாவலர்' என்பது குறித்து அடிகள் தாமாகப் பேசவில்லை, தீட்சிதர்கள் அவரைப் பேசுவித்தார்கள் என்பதே பொருத்தம் என்று சி.கணபதிபிள்ளையும் 'நாவலர்' என்னும் சொல்லுக்குப் பொருள் விரிக்கும்போது ஈசான சிவாசாரியார் எழுந்து அடிகளை நோக்கி உந்தன் கருத்திலேதானா திருவாவடுதுறை ஆதினம் ஆறுமுக நாவலருக்கு அப்பட்டத்தை வழங்கியது என்று கேட்டபோது அடிகள் கண்மூடி மௌனமாயிருந்தார் எனத் தனஞ்சயராசசிங்கமும் எழுதியிருப்பது இங்கு சிந்தித்துப் பார்க்கத்தக்கது.

ஆய்வாளர் ப.சரவணன்

தீட்சிதர்கள் நாவலர் மீது கொண்ட பகைமையின் காரணமாக அவரைப் பழிவாங்கும் பொருட்டு அடிகளைத் தங்களுக்குச் சாதகமாப் பயன்படுத்திக் கொண்டனர். இதனை அறியாத அடிகள் பேரம்பலத்தில் 'நாவலர்' என்பது குறித்து பேசுமாறு தீட்சிதர்கள் அழைப்பதாக கருதி அவர் பொருள் விரித்தார் எனக் கருத இடமுண்டு. ஈசான சிவாச்சாரியாரின் கேள்விக்குப் பின்பே அவர் தம்மை சுதாரித்துக்கொண்டு

உண்மையறிந்து கண்மூடி அமைதியாக இருந்திருக்கிறார். வாடிய பயிரைக் கண்டே மனம் வாடிய வள்ளல் இவ்வாறு ஆறுமுக நாவலரைத் தகாதன கூறியிருக்க வாய்ப்பில்லை. எனவே தான் அவர் தாம் ஆறுமுக நாவலரை துஷிக்கவில்லை என்று கோர்ட்டில் கூறினார். அவதூறு வழக்குகளில் குற்றம் சாட்டப்படும்போது எதிரி அதை மறுத்த உடனேயே அவ்வழக்கு தள்ளுபடியாகிவிடும் என்ற அடிப்படையிலேயே வள்ளலார் விடுதலை செய்யப்பட்டாரேயன்றி அவர் பொய் சத்தியம் கூறித் தம்மைக் காப்பாற்றிக் கொண்டார் என்பது பொருந்தாது என்று ஆய்வாளர் ப.சரவணன் தெள்ளத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்.

சிவபாத நேசப்பிள்ளை

வள்ளலாரின் அருட்பா மருட்பா என்று நல்லறிவுச் சுடர் கொளுத்தல் எனும் நூல் 1867இல் சிவபாத நேசப்பிள்ளையால் எழுதப்பட்டு 16 பக்கங்களில் வெளிவந்தது.

சபாபதி நாவலர்

திருவாவடுதுறை மாதவச்சிவஞானயோகி சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அருள் உபதேசம் பெற்று, அவ்ஆதீன வித்வசிகாமணியாய் விளங்கா நின்ற சபாபதி நாவலர் அவர்களால் 1899இல் கும்பகோணம் சித்தாந்த வித்தியாநு பாலன யந்திரசாலையிற் அச்சிற்பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த நூல் திராவிடப்பிரகாசிகை. இது வள்ளலாருக்கு எதிராகவே எழுதப்பட்டது.

வீராசாமி முதலியார்

முகவை இயற்றமிழசிரியராகிய இராமநுச கவிராயரவர்கள் மாணிக்கருள் ஒருவராகிய நரசிங்கபுரம் இயற்றமிழ்ப் போதாகாசிரியர் வீரசாமி முதலியாரால் எழுதப்பட்டு, ஆ.ம.து.வே.ஆரியர் முத்தமிழ் வாணிபீடம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த நூல் விஞ்ஞானப் பத்திரிக்கை. திருவருட் பிரகாச வள்ளலாரென்றும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களின் பாடல்கள் அருட்பா என்பதனை

வலியுறுத்தி எழுதப்பட்ட இந்த நூல் சி.வை.தாமோதரம் பிள்ளையவர்களுக்கு விஞ்ஞாபனம் ஆக வெளிவந்தது.

விசுவலிங்க முதலியார்

கூடலூர் இயற்றமிழ் புலவரால் எழுதப்பட்ட பிரார்த்தனைப் பத்திரிகை எனும் நூல் 1868 இல் வள்ளலாருக்கு ஆதரவாக, புதுவை ப.கோவிந்தசாமி நாயக்கரால் கல்வி வளரெந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.



தொழுவூர் வேலாயுத முதலியார் (1832–1889)

சென்னை செவ்வாய் பேட்டை தொழுவூரில் செங்கல்வராய முதலியார் ஏலவார் குழலி தம்பதியருக்குப் பிறந்தவர் தொழுவூர் வேலாயுத முதலியார். இவரது தந்தையின் நண்பர் குப்பண்ண முதலியார். இவர் வேலாயுத முதலியாரை அருட்பிரகாச வள்ளலாரிடம் கொண்டுப் போய்ச் சேர்த்தார். இவர் இராமலிங்க வள்ளலாரின் தலைசிறந்த மாணக்கர் ஆவார். உபய கலாநிதிப் பெரும்புலவர் எனும் பட்டத்தை இராமலிங்க அடிகளாரே இவருக்கு வழங்கினார்.

வயலெல்லா நெல்லூர் ரத்னகுருக்களிடம் சமயதீக்கை, விசேட தீக்கை, நிருவாணதீக்கை முதலிய சைவ தீக்கைகளைப்

பெற்றவர். அருட்பா மருட்பா போராட்டத்தில் ஆறுமுகநாவலர் எழுதிய போலியருட்பா மறுப்பு நூலைக் கண்டித்து போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாசமஹா பரசு எனும் நூலினை 1869இல் எழுதினார். இது 150 பக்கங்களுக்கும் மேலானது; இந்த நூல் சமரச வேத சன்மார்க்கத்தை அபிமானித்த சென்னை – சாதுசங்க பக்த சன சபையாரால் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

வள்ளலார் மறைவிற்குப் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். வடமொழி, ஆங்கிலம் நன்கு அறிந்தவர் சங்கர விஜயம், பராசரங்மிருதி, மார்க்கண்டேய புராணவசனம், பெரியபுராணவசனம், வேளாண் மரபியல், திருவெண்காட்டின் வரலாறு, யோக வித்தை, விநாய சதுர்த்தி விரதம், போசராஜன் சரிதம், மகாவீர சரிதம், திருப்பாத புகழ்ச்சிமாலை, சித்திரயமக அந்தாதி, திருத்தணிகை சித்திரமாலை, திருப்போரூர் கலி விண்ணப்பம், வடிவுடையம்மன் சவுந்தரி அட்டகம், தாத குருநாதர் கவிமாலை, திருவருட்பிரகாசர் சந்நிதி முறை ஆகிய நூல்களின் ஆசிரியர் தொழுவூர் வேலாயுத முதலியார்.

ஆறுமுக நாவலருக்கு பலத்த பதிலடியாக தொழுவூர் வேலாயுத முதலியாரின் விரிவான நூல் அமைந்தது.

இராமலிங்க அடிகள் காலம் 1823 – 1874 ஆறுமுக நாவலர் காலம் 1822– 1879 இவர்கள் ஜீவித்திருந்த காலத்தில் ஆறுமுக நாவலர் தொடர்ந்த வழக்கு விவரத்தை பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார். காலநிதி ச.தனஞ்சயராச சிங்கம் சென்னையிலும் கொழும்பிலும் அக்காலத்தில் நடந்த பிரபல பத்திரிகை இரண்டின் மூலம் வழக்கு விவரத்தை நூல் உருவாக்க முயற்சித்தார். அவர் தமக்குக் கிடைத்த ஆதார பூர்வமான தகவல்களை இலங்கை தினகரனில் 29.6.1975 ஞாயிறு அன்றும் 11.7.1975 வெள்ளி அன்றும் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திர சாலையில் அதனை 10.10.1975இல் இந்து சாதனம் என்ற தலைப்பில் வெளியிட்டது. அதில் வரும் தகவலை ஆய்வாளர் ப.சரவணன் தந்துள்ளபடியே;

நாவலர் தொடர்ந்த வழக்கு விளக்கம்

(பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள்)

எதிரிகள் இருவர்

ஒருவர்: தில்லைத் தலைமைத் தீஷிதர் சபாநடேசர்

மற்றையவர்: இராமலிங்கர்

குற்றம் இரண்டு

ஒன்று: அச்சுறுத்தியமை

மற்றது: நிந்தித்தமை

அ. தீஷிதர் நாவலரை அடித்து முரித்து முத்தி கொடுக்க எத்தனித்தவர்

ஆ. இராமலிங்கர் நாவலர் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள் கூறி நிந்தித்தவர்

குரோத காரணம்

அ. தீஷிதர்கள் சிவதீஷையின்றிப் பழைய நிலையிலிருந்து தவறிவிட்டார்கள். சிதம்பராலய பூசைக் கிரமம் பற்றிப் பதஞ்சலி முனிவர் செய்த பத்ததி ஒன்றுண்டு. அதையும் புறக்கணித்து விட்டார்கள். இக்குறைகளை எடுத்துக்காட்டிச் சீர்த்திருத்தப் புகுந்தார் நாவலர். இச்செயல் ஆத்திரத்தைப் பெருக்கி விட்டது.

ஆ. இராமலிங்கர் பாடல்களைத் தேவரா திருவாசக வரிசையில் வைத்து மதிக்க நாவலர் உடன்படவில்லை. இது இராமலிங்கர் வர்க்கத்தினர்பால் கொதிப்பை உண்டாக்கி விட்டது.

ஒருமைப்பாடு

அ. தீஷிதரும் இராமலிங்கரும் கொள்கையில் பெரிதும் வேறுபாடுடையர்; அப்படியிருந்தும் நாவலரை எதிர்ப்பதன் பொருட்டு ஒன்றுகூட வேண்டியவர் ஆயினர். இராமலிங்கர், சீடவர்க்கத்தினர் வழி நின்று தீஷிதரைத் திருப்தி செய்ய நாவலரை நிந்திக்க வேண்டியவராயினர். பாவம்!

ஆ. இராமலிங்கர் பேச்சு 'பேரம்பலப் பிரசங்கம்' என்று பெயரிட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டது.

வழக்கு

அ. 1. 1869 நவம்பர் 18ஆந் தேதி மஞ்சக்குப்பம் கோர்ட்டில் வழக்கு ஆரம்பமானது. நீதிபதி வெள்ளையர். எதிர்ப்பக்கம் பிரபல வக்கீல்கள் இருவரை ஏற்படுத்தியிருந்தார்கள். ஒருவர் வெள்ளையர்.

2. நாவலர் ஒன்பதின்மர் சாட்சிகளுடன் வந்திருந்தார். வக்கீல் ஏற்படுத்தவில்லை.

3. தலைமைத் தீஷிதரும் இராமலிங்கரும் குறிப்பிட்ட கூட்டத்தில் பங்கு பற்றவில்லையென்றும், அதே நேரத்தில் வேறு வேறு இடங்களில் வேறு வேறு கருமம் ஆற்றிக் கொண்டிருந்தவர்களென்றும் நான்கு தீஷிதர்கள் ஏகமனதாகச் சாட்சியமளித்தார்கள். இவ்வளவில் 22ந் தேதிக்குத் தவணையிடப்பட்டது.

ஆ. 1. நவம்பர் 22ம் தேதி பிரபல வக்கீல் சௌந்தரநாயகம் பிள்ளை நாவலருக்கு ஏற்பட்டார். இவர் யாழ்ப்பாணத்தவர்; கத்தோலிக்கர்.

2. 22, 23, 24, 26ந் தேதி ஆகிய நான்கு நாட்களிலும் நால்வர் தீஷிதர்களையும் குறுக்கு விசாரணை செய்தார் சௌந்தரநாயகம் பிள்ளை.

இ. அலிபி (Alibi) என்கிற தந்திரோபாயம்

1. பிரதான எதிரிகள் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் இல்லை என்று சாதிப்பதாகிய 'அலிபி' என்கின்ற நோயின் தந்திரப் போக்கை விளக்கஞ் செய்து, அதன் பெலவீனம் பற்றிப் பெந்தாம் நெல்சன் என்கின்ற மேலைத் தேச நியாயவாதிகளின் வாதங்களும் எடுத்துக் காட்டப்பட்டது.

2. நாவலரின் ஒழுக்கம், நீதி, துணிவு ஆகியவற்றைத் திறம்படப் புலப்படுத்துவதாகிய பேர்சிவலின் நற்சான்றிதழும் படித்துக் காட்டப்பட்டது. இவ்வளவில்

25ஆம் தேதி தமது வாதத்தைப் பூர்த்தி செய்துகொண்டார் சௌந்தரநாயகம் பிள்ளை.

ஈ.

1. பிள்ளையின் வாதத்தால் 'அலிபி' என்ற உபாய உத்தியில் ஆட்டம் உண்டானது.
2. வழக்கில் அபஜயம் உண்டாகுமென்ற அச்சத்தால் எதிர்ப் பக்கத்தார் சார்பில் வேறு பல சாட்சிகள் விடுவதற்கு உத்தரவு கேட்கப்பட்டது. உத்தரவு கேட்டது நவம்பர் 25ம் தேதி (1869)
3. அன்று தானே சாட்சிகளைக் கொண்டுவரும்படி உத்திரவிட்டார் நீதிபதி.
4. சாட்சிகள் போய்விட்டார்கள் என்றும் அதனால் ஒரு நாள் தவணை தர வேண்டும் என்றும் உத்தரவு கேட்கப்பட்டது. அடுத்த நாள் 26ந் தேதி சாட்சிகள் வரும் பொருட்டு உத்தரவு கொடுக்கப்பட்டது.
5. 26ந் தேதி சாட்சிகள் எவரும் வரவில்லை. எதிர்ப்பக்க வக்கீல் சாட்சிகள் விட விரும்பவில்லை என்று கூறினார்.
6. இந்தப் பிரபல மாறாட்டத்தை நீதிபதி குறித்துக் கொண்டார்.

உ.

1. அடுத்த மாதம் 1869 டிசம்பர் மாதம் 20ந் தேதி தீர்ப்புக் கூறுவதற்கு தவணை இடப்பட்டது.
2. நவம்பர் 26 தொடங்கி டிசம்பர் 20ந் தேதி வரை தீக்ஷிதரும் இராமலிங்கரும் பிணையில் விடப்பட்டார்கள். மூன்று வாரகாலம் பிணையிலிருந்தமை சிந்திக்கற்பாலது.

ஊ. தீர்ப்பு

1. தலைமைத் தீக்ஷிதருக்கு 50/ருபா தண்டம் அல்லது ஒரு மாச மறியல்

2. இராமலிங்கர் தாம் பகிரங்கமாகப் பேசவில்லை என்று அழித்துரை வழங்கி விடுதலை பெற்றுக்கொண்டார்.

எ. நாவலர்

1. இராமலிங்கர் நிலைபற்றி நாவலர் நாணுவாரா? இரங்குவாரா? அவர் கருத்து எவ்வாறிருக்கும் என்று ஊகிப்பார் ஊகிக்க.

2. அப்பால் இராமலிங்கர் பற்றி ஒரு வார்த்தைதானும் நாவலர் நாவில் வந்ததில்லை. பல வருடங்கள் பறந்தன.

3. 1876ஆம் ஆண்டில் தவிர்க்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தில், சுக்கில வருஷம் (1869) ஆனி உத்திர தரிசன தினத்திலே சிதம்ரபத்துப் பேரம்பலத்திலே வெகுசனக் கூட்டத்திலே சுவாமி சந்நிதானத்திலே சைவப் பிரசாரகரை அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத் தினத்திலே மஞ்சக்குப்பக் கோர்ட்டில் வெகுசனக் கூட்டத்திலே நியாயாதிபதி யெதிரே தாம் சைவப் பிரசாரகரை அவதூறாக ஒரு சிறிதும் பேசவில்லை என்று மறுத்து எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ்வழக்குப் புத்தகம் பேசும் என்று கூற வேண்டியவராயினார் நாவலர்.

ஏ.

1. வழக்குப் புத்தகம் என்ன பேசியது? பேசிக் கொண்டிருக்கிறது? என்பது பெரிய கேள்வி.

2. **சம்பந்தப்பட்டவர்கள் மறைய வழக்குப் புத்தகமும் கோர்ட்டிலிருந்து மாயமாய் மறைந்துவிட்டது.**

3. **வழக்குப் புத்தக மறைவு சரித்திர மெழுதுபவர்களுக்குப் பெரிய வாய்ப்பாய் விட்டது. தம் மனது போனவாறு வழக்குப் பற்றி எழுதிக் குவித்து விட்டார்கள்.**

ஐ.

1. **வழக்கு நடந்து நூறு வருடத்துக்கு மேலாய்விட்டது. வழக்குச் சம்பவம் மர்மமாகவே இருந்து வந்தது. வழக்கு புத்தகம் என்ன பேசியதென்பது தெரியவில்லை.**

2. கலாநிதி ச.தனஞ்சயராச சிங்கம் அவர்கள்

சென்னையிலும் கொழும்பிலும் அக்காலத்தில் நடந்த பிரபல பத்திரிகை இரண்டின் மூலம் வழக்குப் புத்தகம் பேசியதை அட்சரந் தவறாமல் கண்டுபிடித்து, புத்த வடிவில் வெளியிடுவதற்கு ஒழுங்கு செய்து வைத்திருக்கின்றார்கள் கலாநிதி அவர்கள். புத்தகம் விரைவில் வெளிவருவதற்குப் பிரார்த்திபோமாக. குறித்த புத்தகத்தின் சாரமே மேலே சுருக்கமாகக் காட்டப்பட்டது. சற்றே பெருக்கம் (29-6-75) ஞாயிறு தினகரனிலும் (11-7-75) வெள்ளி தினகரனிலும் வெளிவந்தது.

சுருக்க பெருக்கங்கள் புத்தக வரவை எதிர்பார்த்தெழுந்தவை.

'இந்துசாதனம்' (10-10-1975) மறுபிரசுரம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை யாழ்ப்பாணம்.

அருட்பா மருட்பா வழக்குப் பின்பு சிதம்பரத்தைவிட்டு, நாவலர் மாயூரத்துக்குச் சென்றார். அதனருகேயிருக்கும் தருமபுர ஆதினத்துக்குச் சென்று அதன் மடாதிபதி சச்சிதானந்த தேசிகரின் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கு இருபது நாட்கள் தங்கிச் சைவச் சொற்பொழிவாற்றினார். அதன் பின்பு திருவிடை மருதூர், காரைக்கால் வழியாக சுவாமி தரிசனங்களை முடித்துக் கொண்டு வேதாரண்யம் வந்த நாவலர் அங்கும் பிரசங்கஞ் செய்தார். இறுதியில் கோடிக்கரை வந்து தோணியேறி சுக்கில் வருடம் (1870) மாசி மாதம் 27ஆம் தேதி யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார். இதன் பின்பு அருட்பா மருட்பா போராட்டம் தமிழகத்தில் சில காலம் ஓய்ந்தது.

இது வரை நாம் பார்த்தது அருட்பா மருட்பா குறித்து நடந்த முதற் கட்ட போராட்டமாகும். இதனை அடுத்துத் தமிழகத்தில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கழித்து நாவலரின் மாணவரது மாணவரான நா.கதிரைவேற்பிள்ளை என்பவர் மீண்டும் இந்த அருட்பா மருட்பா போராட்டத்தைக் கையிலெடுத்தார்.



நா.கதிரைவேற் பிள்ளை

பேராசிரியர் டாக்டர் பொ.பூலோகசிங்கம், எழுதிய 'ஈழம் தந்த நாவலர்' எனும் 262 பக்கங்களைக் கொண்ட நூலினை காந்தளகம் 1993இல் ஐம்பது ரூபாய் விலையில் வெளியிட்டது. அந்த நூலினை அடியேனுக்கு பார்வைக்கு அனுப்பியவர் சென்னைப் பேராசிரியர் மா.சு.அண்ணாமலை.

யாழ்ப்பாணம் மேலைப்புலோலியில் நாகப்பிள்ளை சிவகாமி தம்பதியிருக்கு 1874இல் பிறந்தவர் வேலுப்பிள்ளை என்கிற கதிரைவேற் பிள்ளை. இவர் 1871இல் பிறந்ததாகவும் கூறுவர். (இவர் 1907 இல் மறைந்தார்) இவர் குறித்து பூலோக சிங்கம் தனது நூலில் 219வது பக்கத்தில் குறிப்பிடும் செய்தி இதோ;

ஆறுமுக நாவலர் மறைந்தபோது நா.கதிரைவேற் பிள்ளைக்கு வயது எட்டு. நல்லூர் கா.தியாகரச பிள்ளை ஆறுமுக நாவலரின் மாணவர். ஆறுமுக நாவலரின் மாணவரான நல்லூர் **தியாகராச பிள்ளை,** நா.கதிரைவேற் பிள்ளைக்கு இளமையில் ஆசிரியராக விளங்கினார். யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்வ சிரோமணி ஸ்ரீலஸ்ரீ **க.சதாசிவப்பிள்ளையிடமும்** பாடம் பயின்றவர் நா.கதிரைவேற் பிள்ளை.

காசிவாசி **சி.செந்திநாத ஐயரிடமும்** பாடம் பயின்றவர் (நா.கதிரைவேற் பிள்ளை, சைவ பூஷணசந்திரிகை, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் வெளியீடு சென்னை 2015 சிறப்புப்பாயிரம் பகுதியில்) சபாபதி நாவலரிடம் சிவஞான மாபாடியம் வாசித்தார். வண்ணை சுவாமிநாத பண்டிதருடனும் நட்பு கொண்டிருந்தார்.ஆறுமுகநாவலரின் மாணக்கர்களின் மாணாக்கர் நா.கதிரைவேற்பிள்ளை என்று கூறலாம்.

மூன்று கதிரைவேற் பிள்ளைகள்

யாழ்ப்பாணத்தில் மூன்று கதிரைவேற் பிள்ளைகள் வாழ்ந்துள்ளனர்.

தம்பலகாமம் கதிரைவேற்பிள்ளை

திருக்கோணமலையிலுள்ள தம்பலகாமம் என்னும் ஊரைச் சேர்ந்தவரும் கோணேசர் பதிகம் எனும் நூலை பாடியவருமான தம்பலகாமம் கதிரைவேற் பிள்ளை.

கு.கதிரைவேற் பிள்ளை

யாழ்ப்பாணத்து வல்வையம்பதியைச் சேர்ந்தவர் தந்தை குமாரசாமி முதலியார். ஊர் காவற்துறை நியாய மன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றியவர். இவர் தொகுத்த தமிழ்ச் சொல்லகராதி முதற்பகாம் 1910இல் மதுரைத் தமிழ்சங்கத்துப் பிரசுரம் 8 ஆக வெளிவந்தது. இதோ அதன் முகப்புக் பக்கமும், அவர் 1904லில் அதனை வெளியிட்டதற்கான சான்றும் இதோ,

கு. கதிரைவேற் பிள்ளையின் தமிழச் சொல்லகராதி முதல் பாகம் 706 பக்கங்களைக் கொண்டது. இதனை 1904 ஜனவரி 1இல் எழுதி முடித்தவர் கு.கதிரைவேற் பிள்ளை.

இங்ஙனம்,

1904ம்-ஸ்ரீ ஜனவரிமீ 1உ }

கு. கதிரைவேற்பிள்

KATIRAVEL PILLAI'S

TAMIL DICTIONARY

தமிழ்ச் சொல்லகராதி

(முதற்பாகம்.)

இது,

யாழ்ப்பாணத்து வல்வையம்பதி

ஸ்ரீ. க. குமாரசாமி முதலியார் குமாரரும்,

இலங்கைச் சுப்ரீம்கோட்டென்னும் அதிசிரேட்ட நீதாசனர்சபையின் அத்துவக்காத்தும்,

இலங்கை அரசினரால் நியோகிக்கப்பட்ட மூலகிரந்த வித்தியா பரிபாலன

சங்கத்தாருளொருவரும், இலங்கை அரசின் சிவில் சேவை[illegible]

நீதிபதியாயிருந்தவருமாகிய

ஸ்ரீ. கதிரைவேற்பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று,

மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர்களாற்

பரிசோதிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசுரம்- அ.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்பதிப்பு.

1910.

விலை ரூ. 6—0—0.

Copyright Reserved.

1904இல் இவர் மறைந்ததற்குப் பின் கதிரைவேற் பிள்ளையின் தமிழச் சொல்லகராதி இரண்டாம் பாகம் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர்களால் பரிசோதிக்கப் பெற்று சே.ரா.சுப்பிரமணியக் கவிராயராற் பதிப்பிக்கப் பெற்று 1912இல் வெளிவந்தது. அது 707 வது பக்கம் முதல் 1240 வது பக்கம் வரை உள்ளது. திருவாவடுதுறையாதீன வித்துவானும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகருமான சே.ரா.சுப்பிரமணியக் கவிராயராற் பரிசோதிக்கப்பற்று 1923இல் கு.கதிர்வேலுப் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி மூன்றாம் பாகம் 1923இல் 1241 பக்கம் முதல் 1768 பக்கங்களுடன் வெளிவந்தது. இவ்அகராதியில் அநுபந்தம் 71 பக்கங்கள் பிழையும் திருத்தமும் 8 பக்கங்கள் கு.கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி 1847 பக்கங்கள் ஆகும்.

நா.கதிரைவேற் பிள்ளை

யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியூரிற் பிறந்த நா.கதிரைவேற் பிள்ளையின் தமிழ் மொழியகராதி 1336 பக்கங்களிலும் பொருளகராதி 162 பக்கங்கள் தொகையகராதி 163 பக்கம் முதல் 254 வரை தொடையகராதி 255 பக்கம் முதல் 370 வரை மொத்தம் 1706 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இது 1928 வரை ஆறு பதிப்புக்களைக் கொண்டுள்ளது. அதன் முகப்புப் பக்கம் இதோ;

அடியேன் சொல்லவருகிற விஷயம்

கு.கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி என்ற அகராதி 1847 பக்கங்களில் வெளிவந்துள்ளது. நா.கதிரைவேற்பிள்ளையும் அகராதி தந்துள்ளார். மொத்தத்தில் அந்த காலத்தில் ஈழத்தில் மூன்று கதிரைவேற் பிள்ளைகள் இருந்தனர் என்பதுதான் இனி மருட்பா என வாதிட்ட நா.கதிரைவேற் பிள்ளை சரித்திரத்திற்கு வருவோம்;

ஆறுமுக நாவலருக்குப் பின் வந்தவர்கள் தமது ஞான குருவிடமிருந்து பெற்றுக் கொண்ட திருமுறைகளில் ஒன்று கண்டன நோக்கம் என்பார் க.கைலாசபதி.

ஆறுமுக நாவலரின் மாணக்காரின் மாணக்கரான நா.கதிரைவேற் பிள்ளையும் அவ்வாறே செயல்பட்டார்.

பரமபதிதுணை.

தமிழ்மொழியகராதி.

யாழ்ப்பாணம்

ஆறுமுகநாவலரவர்கள் மாணாக்கரின்மாணாக்கராகிய

மேலைப்புலோலி வித்துவான்

நா - கதிரைவேற்பிள்ளையவர்கள்

பதிப்பித்த பெயரகராதியோடு

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணவகரும்

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவருளொருவருமாகிய

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்கள்

ஆயிரக்கணக்கான சொற்களைச் சேர்த்துக்கொடுக்க

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களால்

தமது

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு.

அவதானம் பாப்பையர் வீதி, நெ. அ௫, சூளை, சென்னை.

1911.

1908 இல் நா.கதிரைவேற் பிள்ளை குறித்து திரு.வி.க. தனது வாழ்வில் முதன் முதலில் நூல் எழுதினார். அந்த நூலில் நா.கதிரைவேலரின் பின்புலம் குறித்து விரிவாக எழுதிடவில்லை. பு.பாலசுந்தர நாயக்கரும் நா.கதிரைவேற் பிள்ளை சரித்திரத்தை எழுதியுள்ளார்.

தஞ்சை சண்முகம் பிள்ளை

இரண்டாம் கட்ட அருட்பா – மருட்போரில் மறைமலையடிகளுக்கு அடுத்த நிலையில் இருந்து தீவிரமாகச் செயல்பட்டவர்; வள்ளலார் மீது பல பாமாலைகள் இயற்றியவர் முத்தமிழ்க்கவியரசு, சிவானந்தயோகி டாக்டர் என்ற பட்டங்களை பெற்றவர். புதுவை சைகோன் சின்னையா அச்சியந்திசாலையில் பிரசுரஞ் செய்து 1909இல் ஈழநாட்டு மேலைப்புலோலி நா.கதிரைவேல்பிள்ளை உணமைச்சரித்திரம் என்ற நூலை வெளியிட்டவர் தஞ்சை சண்முகம் பிள்ளை. நூறு பக்கங்களுக்குள்ளான அந்த நூலில் நா.கதிரைவேற் பிள்ளையின் பின்புலத்தை தெள்ளத்தெளிவாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் தஞ்சை சண்முகம் பிள்ளை.

வடலூர் வள்ளலாரின் திருஅருட்பாவை மருட்பா என வாதிட்ட நா.கதிரைவேற் பிள்ளையின் உண்மைச் சரித்திரத்தில் சில பகுதிகள் இதோ;

சதாவதானி செய்கு தம்பிப் பாவலருக்கும் இவருக்கும் இடையே தான் அருட்பா மருட்பா போர் நடைபெற்றது என்பதால், கதிரைவேற் பிள்ளைக்கு எதிர்வேல் பிள்ளை என்று செய்குதம்பி பாவலர் போற்றப்படுவதால் நா.கதிரைவேற் பிள்ளையின் உண்மை வரலாற்றின் பக்கங்களைப் பார்க்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது.

நா.கதிரைவேற் பிள்ளை பெரியோர்களுக்குத் தீங்கிழைப்பதிலும், அவர்களை நிந்திப்பதிலும் அஞ்சாத நெஞ்சு பெற்றவர். ஸ்லோன் கனகரத்தினம் எனும் கிறிஸ்தவர் வீட்டில் உண்டு வளர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார்.

சதாசிவம் பிள்ளை என்ற நோட்டரி பப்ளிக்கிடம் குமாஸ்தாவாக இருந்தார். அப்போது சில கள்ள ஆவணங்கள் தயாரித்ததால் வழக்கு ஆகி, வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

இலங்கையில் பெரிய மகன் வேலுப்பிள்ளை என்ற ஆ.வேலுப்பிள்ளை என்ற முதலாளியிடம் ஒரு தொகை கடன் பெற்றார்; பிராமிசரி நோட்டும் தந்தார். செம்புக் காசுகளை ஓர் பையிற் கட்டிக்கொண்டு போய் விடுத்து விட்டு, பிராமிசரி நோட்டை திரும்பப் பெற்று வந்தார். பையிலுள்ளது வெள்ளி நாணயங்கள் என்று நம்பிய ஆ.வேலுப்பிள்ளை ஏமாந்தார். பருத்தித்துறை போலீசு மூலம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நா.வேலுப்பிள்ளை என்ற நா.கதிரைவேற் பிள்ளை. இனி இலங்கையிலிருந்தால் தண்டிக்கப்படுவோமென்று அஞ்சி அங்கிருந்து 1895இல் சென்னை வந்தார். இலங்கையில் நா.வேலுப்பிள்ளை; அவரே சென்னை வந்தவுடன் நா.கதிரைவேற் பிள்ளை எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

சென்னை கிறிஸ்டியன் கல்லூரியில் தமிழ் உபாத்தியாயர்களுக்குப் பதிலாக வேலைபார்த்து வந்த நா.கதிரைவேற் பிள்ளை குசப்பேட்டையில் தண்ணீர் எடுக்க வந்த ஒரு பெண்ணை சைகை செய்து அழைத்தார். அவர் கணவர் இதைக் கண்டு நா.கதிரைறே் பிள்ளையை நன்கு உதைத்தார். அங்கிருந்தவர்கள் விலக்குத்தீர்த்து அனுப்பினர்.

1897இல் குசப்பேட்டையில் ஒரு பெண்ணை கை பிடித்து இழுக்கவும் அவள் நா.கதிரைவேற் பிள்ளையை விளக்குமாற்றால் அடிக்கவும், அதைக் கண்டவர்கள் இவரை நையப்புடைத்ததும், பின்னர் வழக்கு நடைபெற்றதும் இவர் ஏழு ரூபாய் அக்காலத்திலேயே அபராதம் செலுத்தியதும் சரித்திர உண்மைகள் ஆகும்.

1904 ஆம் வருடத்திய வழக்கு எண் 14575இல் நா.கதிரைவேற்பிள்ளை சென்னை பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் கொடுத்த வாக்குமூலம் I was fined 6 or 7 years ago for an assault on a woman என்று உள்ளது.

12.8.1897இல் மாயவாதத் சண்டையில் இறங்கினார்.

1901, 1902களில் வைணவ மதத்திற்கு விரோதமாக மாறினார். 1903 சூன் மாதத்தில் புத்த மதத்திற்கு விரோதமாகச் சண்டையில் ஈடுபட்டார்.

ஆறுமுக நாவலர் காலத்திற்குப் பின் மீண்டும் 1903 களில் வள்ளலாரின் திருஅருட்பா மருட்பா என்று நா.கதிரைவேற் பிள்ளை பேச ஆரம்பித்தார்.

'போலி அருட்பா மறுப்பு' 'மேற்படி வழூத்திரட்டு' எனும் இரு நூல்களை நா.கதிரைவேற் பிள்ளை வெளியிட்டார். 1869இல் ஆறுமுக நாவலரால் வெளியிடப்பட்ட போலியருட்பா மறுப்பு எனும் நூலை பதிப்பித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள புதுச்சந்நிதிக் கந்தநாதன் துணை என்ற நூலின் அட்டையில் உள்ளது.

அருட்பாச் சிறப்பு, போலியருட்பா மறுப்பு இராமலிங்கப் பிள்ளை படிற்றொழுக்கம் அங்கதப்பாட்டு *இவை நான்கும் சிவஞானப் பிரகாச சபையின் அங்கத்தவரும் சைவப்பிரசாரணரும் ஆகிய தூத்துக்குடி இரா.ம.நயினார் செட்டியார் அவர்களால் சென்னை பிரசிடென்சி அச்சியந்திரத்தில் பதிப்பிக்கப்பட்டு, சென்னை சைவசித்தாந்த சங்கத்தாரால் வெளியிடப்பட்டன என்று குறிப்பிட்டு 1904 இல் நா.கதிரைவேற் பிள்ளையே இந்த நூலை தூத்துக்குடி இரா.ம.நயினார் செட்டியார் பெயரால் வெளியிட்டார்.*

நா.கதிரைவேற் பிள்ளை வெளியிட்ட நூல்களின் மிகச்சுருக்கமான உள்ளடக்கம் இதோ;

1869ஆம் ஆண்டு நாவலர் எழுதிய 'போலியருட்பா மறுப்பு' என்னும் நூலில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் ஐந்துமே அருட்பா என்று கூறியிருக்க, இவர் பன்னிரு திருமுறைகளே அருட்பா என்று 1904இல் மாற்றிப் பதிப்பித்துள்ளார். அத்துடன் கொட்டையூர் மகாவித்துவான்சுவாமி நாததேசிகர், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய இருவரும் இராமலிங்க அடிகளைக் கண்டு அவர் பாடலிலுள்ள சித்தாந்தத்திற்கும் இலக்கணத்திற்கும் மாறாக உள்ள பாடல்களை எடுத்துக்காட்டி கேள்விகேட்டபோது விடை கூற இயலாது அவர் ஓட்டம் பிடித்தார் என்று இல்லாத விஷயத்தை இவராகவே எழுதியுள்ளார். அது மட்டுமா?

அருட்பிரகாச வள்ளலார் மீது அபாண்டப் பழிகளைச் சுமத்தியுள்ளார். அதனை சொக்கபுரம் ஆதினம் இராமலிங்கத்

தம்பிரான் சுவாமிகள் மாணக்கரான நெ.சிவக்கொழுந்து முதலியார் பெயரில் வெளியிட்டுள்ளார். (ப.சரவணன் அருட்பா – மருட்பா பக்கம் 84)

(நாகரிகம் கருதி இது குறித்து அதனை இங்கு குறிப்பிடவில்லை. நா.கதிரைவேற் பிள்ளையின் அபாண்டமான கட்டுக்கதைகளை புறந்தள்ளிடுவோம்)

திரிகோணமலை ப.இலங்கணிப்பிள்ளையைக் கொண்டு, பாசுபதாஸ்திரப்பிரயோகப் பிரசண்டமாருதக் கோடையிடி எனும் நூலையும் 1904 இல் வெளியிடச் செய்தார்.

சென்னை வேதாக மோக்த சைவசித்தாந்த சபையார் பெயரால் சென்னை The Sun of India Pressஇல் 1904இல் அச்சிட்டு, நூற்றிற்கும் அதிகமான பக்கங்களில் அத்துவித சித்தாந்த மகோத்தாரணரும், மதுரைச் சங்கப்புலவரும் மாயவாத தும்ச கோளரியும், உவெஸ்லியன் மிஷன் கலாசாலைத்தமிழ்ப் பண்டிதரும் ஆகிய நா.கதிரைவேற் பிள்ளை அவர்களின் மாணக்கரான, சென்னை பு.பாலசுந்தர நாயக்கர் இயற்றியது என்று, இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்ற நூலை வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பாகம் வெளிவரும் என்ற அறிவிப்பு வந்தது. ஆனால் நூலின் இரண்டாம் பாகம் எதுவும் வெளிவரவில்லை.

வள்ளலார் பாடல்கள் மருட்பா என்று 1905 சூன் மாதம் தேவகோட்டை நகரத்தாரால் மீனலோசனி யந்திரசாலையில் அச்சிடப்பட்ட முக்குணவயத்தின் முறைமறந்தறைதல் எனும் நூலினை உதயமூர்த்தி தேசிக சுவாமிகள் வெளியிட்டார். அதே அச்சகத்தில் அதே ஆண்டில் அச்சிடப்பட்டு பொய்யுரை விளக்கம் எனும் நூலும் வெளிவந்தது.

பா.சி.முருகேச முதலியார்

22.1.1905 ல் ஸ்ரீ காஞ்சி பூஷண அச்சு இயந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டதும், வித்துவான் பா.சி.முருகேச முதலியார் அவர்கள் இயற்றிய இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு விஜய மகாசரபம் எனும் நூல் வெளிவந்தது.

இந்த காலகட்டத்தில் மருட்பா குழுவிற்கு மறுப்பாகவும் வள்ளலாரின் திருஅருட்பாவிற்கு ஆதரவாகவும் நூல்கள் வெளிவந்தன.

ப.முருகேச முதலியார் – மா.பழனி முதலியார்

1.11.1903இல் சிற்றம்பல விலாசம் பிரெஸ் சென்னையில் அச்சிடப்பட்ட திருவருட்பா விவாதிகளுக்கொரு விளக்கம் எனும் நூலினை ப.முருகேச முதலியாரும் மா.பழனி முதலியாரும் வெளியிட்டார்கள்.

வடலூர் சிவநேசம்பிள்ளை

பார்வதிபுரம் – வடலூர் சிவநேசம் பிளளை 15.2.1904இல் வள்ளலார் திருஅருட்பாவிற்கு ஆதரவாக அவுட் பீரங்கி எனும் சிறு பிரசுரம் தந்தார். 7.3.1904இல் வள்ளலார் திரு அருட்பாவிற்கு ஆதரவாக திரிகோணமலை இலங்கணிப்பிள்ளைக்குச் சஞ்சீவிராயன் விடுத்த வெரிநகர்தகனம் எனும் சிறு நூலினைத் தந்தார்.

ச.த.கங்காதரப்பாவலன்

முத்தமிழ்ப் புலவன் பூ.முத்து வீரப் பிள்ளையின் மாணக்கரில் ஒருவரான ச.த.கங்காதரப்பாவலன் திரிகோணமலை இலங்கணிப் பிள்ளைக் கெரிகோண மலை இராம பாணம் எனும் அறிக்கையை 15.3.1904லில் தந்தார்.

காஞ்சிபுரம் நிச்சல இராமநந்தஸ்வாமிகள்

காஞ்சிபுரம் கன்னியப்ப பிள்ளையும், காஞ்சிபுரத்தில ஜவுளி வியாபாரம் செய்த கொ.தானப்ப முதலியார் இருவரும் 1904 சூன் மாதம் சென்னை சிற்றம்பல விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்து திருவருட்பா தூஷண நிக்கிரகம் எனம் நூலினை வெளியிட்டார்.

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு ஸ்வகீயாந்த சொரூபராகிய ப.அருணாசல ஸ்வாமிகள் மாணக்கருள் ஒருவராகிய காஞ்சிபுரம் நிச்சல இராமந்தஸ்வாமிகளால் இந்த நூல் இயற்றப்பட்டது.

வடலூர் ஆறுமுகம் பிள்ளை

*27.3.1904*இல் நா.கதிரைவேற் கடைச்சிரார்த்தமும் மருட்பா புத்தகம் அரங்கேற்றின. மூடசிகா மணிகளுக்கறிகையும் எனும் அறிக்கையை வடலூர் ஆறுமுகம் பிள்ளை வெளியிட்டார்.

க.நாகப்பிள்ளை

புதுச்சந்நிதி கந்தசுவாமி கோயில் தரும கர்த்தர் க.நாகப்ப பிள்ளை *6.4.1905*இல் வருடாப்த விண்ணப்பம் எனும் அறிக்கையைத் தந்தார்.

திருத்தணிகைநேசி

கமலநாயகி அச்சியத்திர சாலை வேப்பேரி சென்னை *1905* இல் திருத்தணிகை நேசி, ஸ்ரீமத்இராமலிங்க சுவாமிகளைத் தூஷிப்போரது பன்னிரு பொய் அகற்றல் அல்லது உண்மை தெரித்தல் எனும் நூலினை வெளியிட்டார்.

ம.தி.பானுகவி 1866/67–1926

முத்தமிழ் ரத்நாகரம் பானுகவி மலையாள நாட்டில் பிறந்தவர். பிரபஞ்சமித்திரன் பத்திரிகை ஆசிரியர். கந்தபுராணத்திற்கு உரை எழுதியவர். முதலில் மருட்பா குழுவில் இணைந்து

செயலாற்றியவர். முதலில் வள்ளலாரைத் தூற்றியவர். பின்னர் தணிகைப் புராண வாத சபை சொல்லைப் பற்றி நா.கதிரைவேற் பிள்ளைக்கும் இடையே நடந்த விவாதத்தால் இவரும் அவரை விட்டு நீங்கினார். நா.கதிரைவேற் பிள்ளை எழுதிய இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் எனும் நூலை மறுத்து இவர் நூல் வெளியிட்டார்.

சைவத்தின் சிறப்பினை உணர்த்தும் தொண்ணூறு சரித்திரங்களைக் கொண்ட சிவபரக்கரமம் வசன ரூபம் எனும் நூலை 1899இல் எழுதியவரும், இருபதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியருமான ம.தி.பானுகவி, 1905இல் சென்னை, புரசை கணேச அச்சியந்திர சாலையிற் பதிப்பித்து, வெளியிட்ட நூல் இராமலிங்கப் பிள்ளை பாடல், ஆபாச – தர்ப்பண – கண்டன – நியாய வச்சிர – குடாரம் (குடாரம் – கோடாலி) இருநூறு பக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய நூல் இது.

திருவருட்பா விளக்கம்

கோல்டன் பிரஸ் சூலை மதிராஸ் 1905 என்று அச்சிடப்பட்ட திருவருட்பா விளக்கம் எனும் சிறு நூல் வெளிவந்தது.

ஈழ நாட்டார் பகட்டுரை மறுப்பு

K.R.S. கணேசன் அண்டு கோ பிரிண்டர்ஸ் மின்ட் ஸ்டீரிட், மெட்ராஸ் 1.5.1905இல் அச்சிடப்பட்டு ஈழ நாட்டார் பகட்டுரை மறுப்பு எனும் சிறு நூல் வள்ளலாருக்கு ஆதரவாக வெளிவந்தது.

1904 வழக்கு எண் 24533

திருஅருட்பிரகாச வள்ளலாரென்றும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் விஷயமாகச் சென்னை மாஜிஸ்திரேட்டு கோர்டு 1904 ஆம் வருஷத்திய 24533 வது காலண்டர் நவம்பரில் ஈழநாட்டு நா.கதிரைவேற் பிள்ளை தாக்கல் செய்த முக்கல வயத்தின் முறை மறைந்தறைதல் என்றும் ஓர் அசம்பவப் பத்திரிக்கையின் விளக்கமும், அதன் மேற்கண்டனமும் கோர்ட்டு நடவடிக்கைகளும் குறித்து 1906 இல் சென்னை ஸ்ரீவேணுகான முத்ராட்சர சாலையிற் பதிப்பிக்கப்பட்ட நூல் வெளிவந்தது.

அது, திருவருட்பிரகாச வள்ளராரென்றும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் விஷயமாக ஈழநாட்டு நா.கதிரைவேற் பிள்ளையைப் பற்றிக் கோர்ட்டில் நடந்த விவகாரமும் முக்குனவயத்தின் முறை மறைந்தறைதல் என்னும் பத்திரிக்கையின் பேரில் கண்டனமும் எனும் பெயரில் வெளிவந்தது.

வித்வான் முத்துசாமிப் பிள்ளை

கிலாட்ஸ்டன் அச்சுக்கூடத்தில் 1906 இல் டைடில் பேஜில் பதிப்பிக்கப்பட்ட நூல் திருஅருட்பா வசன விளக்கம். தில்லை வாழ் அந்தணர் சந்நிதானத்திற்கு யாழ்ப்பாணத்தான்றன் வஞ்சகப் பிரகடன விஞ்ஞாபன சதகம், கோயம்புத்தூர் வித்வான் முத்துசாமிப் பிள்ளையால் இயற்றப்பெற்றது.

முத்தமிழ்க்கவியரசு சண்முகம் பிள்ளை

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா மகிகை விளக்கத் தோத்திர சோடசப் பாமாலையை முத்தமிழ்க் கவியரசு சண்முகம் பிள்ளை இயற்றினார்.

நரசிங்கபுரம் வீரசாமி முதலியார்

ஆ.ம.து.வே.முத்தமிழ் வாணிபீடம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்ற 'தீவாந்தர சைவ விநோதம்' எனும் தலைப்பில் நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் பாடல்களும் அருட்பா குழுவினரால் அச்சிடப்பட்டது (1906)

திருக்குடந்தை சிதம்பர அய்யர்

அழுக்காறவா வஞ்ச மிகுந்த சில வீழப்பாணச் சேரியார்கள் செய்யும் பிரசங்க வளப்பத்தின் அங்கதப்பாட்டு திருக்குடந்தை சிதம்பர அய்யரால் வள்ளலாருக்கு ஆதரவாக எழுதப்பட்டது.

பதிகப் பாமாலைத் தோத்திரம்

மருட்பா எனக்கூறி மயங்கிடும் மருளர்கள், பிரஸிடென்சி மாஜிஸ்ட்ரேட் முன்னர் முத்தமிழ்க் கவியரசு தஞ்சை

மாநகரம் சண்முகம் பிள்ளையவர்களை வீண் வழக்கில் மாட்டிவிட்ட காலத்தில் தன் மனங்கலங்கித் திருவருட்பிரகாச வள்ளலாரென்னுந் தமது சற்குரு இராமலிங்க சுவாமிகளுக்கு விண்ணப்பித்த பதிகப்பாமாலைத் தோத்திரம் 1906இல் வெளிவந்தது.

உண்மை விளங்கும் விளம்பரம்

உண்மை விளங்கும் விளம்பரம் சென்னை சிவனடியார் திருக்கூட்டத் தலைவர்கள் செய்த 'உண்மை விளங்கும் விளம்பரமும்' 1906இல் வள்ளலாருக்கு ஆதரவாக வெளியாயிற்று. இவைகள் குறித்து வெறும் நூற் பெயர்களையும் எழுதிய ஆசிரியர்களையும் மாத்திரம் சொல்லிச் சென்றது விரிவஞ்சியே.

நாம் காண இருப்பது செய்குத் தம்பிப் பாவலரின் அருட்பா குறித்த விஷயங்களையே; எனவே முற்கூறிய செய்திகள் அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு எனும் ப.சரவணன் தந்த பெரு நூலின் துணை கொண்டு குறிப்பிட்டுள்ளேன்.

அருட்பாக் குழுவில் 35 பேர் மருட்பாக் குழுவில் 31 பேர் கிடைத்துள்ள பட்டியல் இது தான்.

அருட்பா – மருட்பா விவாதத்தில் பங்கேற்றோர் பட்டியலும் விவாதத்தில் பங்கேற்றோர் பட்டியலும் அருட்பா – மருட்பா கருத்துக்களை ஆதரித்து வெளியிட்ட நூல்கள் – அறிக்கைகள் பட்டியல் இதோ;

அருட்பா ஆதரவாளர்கள்

இராமலிங்க அடிகளார்,

அட்டாவதானம் வீராசாமி செட்டியார்,

இறுக்கம் இரத்தின முதலியார்,

பூவை. கலியாண சுந்தர முதலியார்,

திருமயிலை சண்முகம் பிள்ளை,

நரசிங்கபுரம் வீராசாமி முதலியார்,

கூடலூர் விசுவலிங்க முதலியார்,

தொழுவூர் வேலாயுத முதலியார்,

ஆனந்தநாத சண்முக சரணாலயர்,

காஞ்சி ஜவுளி மாளிகை வரதராஜ முதலியார்,

ப.முருகேச முதலியார்,

மா.பழனி முதலியார்,

வடலூர் சிவநேசம் பிள்ளை,

வடலூர் சோமசுந்தரம் பிள்ளை,

ச.த.கங்காதரப் பாவலன்,

காஞ்சிபுரம் நிச்சல் இராமாநந்த ஸ்வாமிகள்,

வடலூர் ஆறுமுகம் பிள்ளை,

திருத்தணிகை நேசி,

‘முத்தமிழ் ரத்நாகரம்‘ ம.தி.பானுகவி,

முத்தமிழ் கவியரசு டாக்டர் தஞ்சை சண்முகம் பிள்ளை,

தங்கவேலுப் பிள்ளை,

திருக்குடந்தை சிதம்பர ஐயர்,

நாகப்பட்டினம் வேதாசலம் பிள்ளை (மறைமலையடிகள்),

செய்குதம்பிப் பாவலர்,

தேவாரம் முத்துசாமி முதலியார்,

பரமஹம்ச ஆத்மராம் சுவாமிகள்,

அரன்வாயல் வெங்கடசுப்புப் பிள்ளை,

ஜே.எம்.நல்லசாமி பிள்ளை,

ஈக்காடு ரத்தின முதலியார்,

சூளை சோமசுந்தர நாயகர்,

தண்டலம் பாலசுந்தர முதலியார்,

புராணிகர் வடிவேல் பிள்ளை,

கோ.வடிவேல் செட்டியார்,

வேலு கிராமணி, துறவி கந்தசாமி

மருட்பாக் குழுவினர்

ஆறுமுக நாவலர்,

திருவாவடுதுறை ஆதீனகர்த்தா சுப்பிரமணிய தேசிக சுவாமி,

வேதாரண்யம் ஆதீனகர்த்தா உதயமூர்த்தி சுவாமி,

திருவண்ணாமலை ஆதீனகர்த்தா ஆறுமுகத் தம்பிரான் சுவாமி,

தருமபுரம் ஆதீனகர்த்தா சண்முகத் தம்பிரான்,

சிவபாதநேசப் பிள்ளை,

மாவண்டூர் தியாகேச முதலியார்,

மகாவித்துவான் மதுரை இராமசாமிப் பிள்ளை,

தத்துவ விவேசினி பத்திராதிபர் முனிசுவாமி நாயகர்,

சபாபதி நாவலர்,

காசிவாசி செந்திநாதையர்,

மேலைப்புலோலி நா.கதிரைவேல் பிள்ளை,

தூத்துக்குடி இரா.ம.நயினார் செட்டியார்,

திருமயிலை கொ. முருகேச முதலியார்,

ஸ்ரீலஸ்ரீ உ.தியாகராச குருக்கள்,

நெ.சிவக்கொழுந்து முதலியார்,

பு.பாலசுந்தர நாயகர்,

தி.நாராயணசுவாமி நாயகர்,

திரிகோணமலை ப.இலங்கணிப் பிள்ளை,

வேதாரணியம் உதயமூர்த்தி தேசிக சுவாமிகள்,

பா.சி.முருகேச முதலியார்,

காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை,

உ.வே.சாமிநாதையர்,

திரு.வி.கல்யாணசுந்தர முதலியார்,

கல்குளம் குப்புசாமி முதலியார்,

நாராயணசாமி நாயுடு,

பாலூர் முருகேச முதலியார்,

சபாபதி முதலியார், சிதம்பர முதலியார்,

'ஜட்ஜ்' பலராமய்யா,

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ.ஈசுவரமூர்த்தி பிள்ளை

அருட்பாக் குழுவினர் வெளியிட்ட நூல்கள் அறிக்கைகள் 33

திருவருட்பா தூஷண பரிகாரம்

விஞ்ஞாபனப் பத்திரிகை

அகங்கார திமிரபானு

ஆறுமுக நாவலர் பரிசோதனா தோஷப் பிரகாசிகை

பிரார்த்தனைப் பத்திரிகை

நடந்தவண்ணம் அறிவித்தல்

போலியருட்பா மறுப்பின கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாசமஹா பரசு

தீவாந்திர சைவ விநோதம்

புரளிப் பிரசங்க விநோத சரிதம்

பேரம்பல பிரசங்கம்

திருவருட்பா விவாதிகளுக்கொரு விளக்கம்

புரளிப் பெட்டக சூறை

அவுட் பீரங்கி

திரிகோணமலை இலங்கணிப் பிள்ளைக்குச் சஞ்சீவிராயன் விடுத்த வெரிநகர் தகனம்

திரிகோணமலை இலங்கணிப் பிள்ளைக் கொரிகோணமலை இராமபாணம்

திருவருட்பா தூஷண நிக்கிரகம்

நா.கதிரைவேலன் கடைச்சிரார்த்தமும் மருட்பா புத்தகம் அரங்கேற்றின மூடசிகாமணிகளுக்கு அறிக்கையும்

வருடாப்த விண்ணப்பம்

இராமலிங்க அடிகளை தூஷிப்போரது பன்னிரு பொய்யகற்றல் அல்லது உண்மை தெரித்தல்

இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டன நியாய வச்சிரகுடாரம்

திருவருட்பா விளக்கம்

ஈழநாட்டார் பகட்டுரை மறுப்பு

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் ஸ்ரீமத் ராமலிங்க ஸ்வாமிகள் விஷயமாக ஈழநாட்டு நா.கதிரைவேல் பிள்ளை பற்றிக் கோர்ட்டில் நடந்த விவகாரமும் முக்குணவயத்தின் முறைமறந்தறைதல் என்னும் பத்திரிகையின் மேல் கண்டனமும்

ஈழப்பாணச் சேரியார் அங்கதப்பாட்டு

திருவருட்பா வசன விளக்கம்

இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா மகிகை விளக்கத் தோத்திர சோடசப் பாமாலை

தில்லை வாழந்தணர் சந்நதிக்கு யாழ்ப்பாணத்தார் தன் வஞ் சகப் பிரகடன விஞ்ஞாபன சதகம்

யாழ்ப்பாணத்தான்றன் பிரசங்க அங்கதப்பாட்டு

இராமலிங்க சுவாமிகள் பதிகப் பாமாலை

அழுக்காறுடையார் அவலத் தெரித்தல்

சிவநிந்தையோர்க்குத் தெளிவு புகட்டல்

நாவலரும் சுவாமிகளும்

இராமலிங்கர் பெற்ற இறைவடிவமும் ஐந்தொழில் ஆற்றலும்

மருட்பாக் குழுவினர் வெளியிட்ட நூல்கள், அறிக்கைகள் 39

நல்லறிவுச் சுடர் கொளுத்தல்

போலியருட்பா மறுப்பு

குதர்க்காரணிய நாசமகா பரசு கண்டனம்

திராவிடப் பிரகாசிகை

அருட்பாச் சிறப்பு

இராமலிங்கப் பிள்ளை படிற்றொழுக்கம்

இராமலிங்கப் பிள்ளை அங்கதப்பாட்டு

பாசுபதாஸ்திரப் பிரயோகப் பிரசண்ட மாருதக் கோடையிடி

இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு

இராமலிங்கப் பிள்ளை அஞ்ஞானப் பாக்கள்

மித்தியவாத நிரசனம்

பாவலர் சரித்திர தீபகம்

முக்குணவயத்தின் முறைமறந்தறைதல்

பொய்யுரை விளக்கம்

போலியருட்பா வழுத்திரட்டு

போலிவாதிகளுக்குப் புத்தி புகட்டல்

சூதர்க்கிகளின் பொய்க்கோள் விலக்கு

போலியருட்பாக் கண்டன மகா வித்வ கனசபை

மருட்பா விவாத மத்தியஷ பத்திரிகை

சிவநிந்தை குருநிந்தை திருவருட்பாநிந்தையினார்க்குச் செவியறிவுறுத்தல்

மருட்பா மறுப்பின் ஜெயபேரிகை

திருவருணெறித் தமிழ்வேதப் பிரபாவம்

போலியருட்பாக் கண்டனப் பிரசங்கம்

பசுகரண விபரீதார்த்த நிக்கிரகமும் போலியருட்பாக் கண்டனப் பரிகார மறுப்பும்

தமிழ்ப் பேரகராதி

மருட்பா மறுப்பு அரங்கேற்றம்

மருட்பா மறுப்பு வழக்கு முடிவு

திருவருட்பா ஜெயத்துவஜ ஸ்தாபனம்

மருட்பா மறுப்பு விஜயமகாசரபம்

ஸ்ரீபரமாசாரிய சுவாமிகள் கட்டியம்

அருட்பா வெற்றிக்கையுறை வாழ்த்து

திருமுறை மகோற்சவ மகர்விபவம்

காஞ்சித் திருமுறை மகோற்சவ நாமாவளி

பன்னிரு திருமுறை யன்புப் பரிசில்

நாவலர் கட்டுக்கதையும் மறுப்பும்

நாடும் நவீனரும்

மனமே சிந்தனை செய்

சைவர்களே உஷார்

வள்ளலார் மறைவு சித்தியா? மரணமா?

(பட்டியல் முழுமையானது அல்ல)

யோகமன்று ஞானமன்று யூகமன்று மோனமன்று
தேகமன்று நாமமன்று சித்தமன்று சத்தமன்று
போகமன்று சுத்தபரி பூரணத்திற் பூரணமா
ஆகநின்ற யேகமென்ற அத்தநிலை நத்தேமோ
ஆகிர்நபி நாயகமே அத்தநிலை நத்தேமோ!

(ஆகிர் – உலகம்)

– செய்குதம்பிப் பாவலர்
'நபிகள் நாயக மான்மிய மஞ்சரியில்'

செய்குதம்பிப் பாவலர்

சதாவதானி செய்குதம்பிப் பாவலரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எளியேன் எண்ண அலைகள் பகுதியிலே தந்துள்ளேன்.

வள்ளலாரின் பாடல்கள் அருட்பா – மருட்பா என்ற விவாதத்தில் பங்கேற்றவர்கள் உயர் சாதியினர் மட்டுமே. இந்த நிலையில் செய்குத் தம்பிப் பாவலர் இந்த விவாதக்களத்திலே எப்படி வந்தார்? அதன் வரலாற்றுப் பின்னணி தான் என்ன? இதுகுறித்து விரிவான தகவல்கள் இதோ;

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவர்களி லொருவராகிய தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, கலைக்கடல் அல்லாமா, டாக்டர், சதாவதானி கா.ப.செய்கு தம்பிப் பாவலர் அவர்களது 70வது ஆண்டு பிறந்த தின விழாவின்போது (1944இல்) நாஞ்சில் நாட்டு மக்கள் மனமுவந்து வாசித்தளித்த வாழ்த்து இதோ,

இயன்மொழி வாழ்த்து

தமிழ் உலகப் பெருஞ்சேயே!

நீவிர் நாஞ்சில் நாட்டின் நடுநகரென நவிலப்பெறும் கோட்டாற்றில் தூய்மைசால் இஸ்லாமிய மரபில் செழுங்குடிப் பிறந்து இளமை தொட்டே தமிழ்த் தாயின் செம்மல ரடிகளின் அமைந்து தமிழர் சிறக்கவும் தமிழ்ப் பயிர் தழைக்கவும் அரிய செந்தமிழ் பாக்கள் இயற்றும் வன்மை மிக்குற்றுப் பாவலரென நாமம் பெற்று இந்நாட்டிற்கு அணிகலனாய்த் திகழுமோர் அறிவுப் பண்டசாலையாய் அமைந்து விளங்கும் மேன்மையை, உள்ளுந் தோறும் எங்கள் உள்ளம் களி பேருவகை அடைகின்றது; நினைக்கும் தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது; மனம் மகிழ்கின்றது.

அறிவால் சிறந்த அருந்தவத்தோய்!

புலமையின் நறுமணம் நாடும் நகரமாம் மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் மேவிய புவலர் மக்களிடையே பல்லாண்டாகப் புகழ்பெறும் அங்கம் வகித்து அச்சங்கம் வாழ்விலும் வளத்திலும் வளர்ந்தோங்கச் செய்து வருவதை உன்னிய உள்ளம் யாண்டும் உவகையில் விஞ்சுகின்றது.

அரும்நூல் இயற்றும் ஆற்றல்சால் புலவ!

தமிழகம் தழைத்துய்யத் தாங்கள் இயற்றிய பல அந்தாதிகள், கோவைகள், இன்னிசைப் பாமாலைகள், மஞ்சரிகளாதிய தனிச் செய்யுட்களும் ஆழ்ந்த கருத்தினைத் தெரிக்கவல்ல வசன நூல்களும் முஸ்லிம் மதக் காப்பியமாகிய சீறாப் புராணம் போன்ற அரும்பெரும் நூல்களுக்களித்த அரிய உரைகளும் தமிழகத்துக் கீடுமிக்க பயனை அளிக்கத் தகுந்த பல்லாயிரக்கணக்கான

சொற்கூட்டங்களைத் தொகுத்து விரித்த பேரகராதியும் மற்றும் கவிச்சிற்பம், புலமைத் திறன், கலை நுட்பம் வாய்ந்த பன்னூல் எங்களுக்கோர் அறிவுக் களஞ்சியமாய் நிற்கும் பெற்றியை யாங்கள் என்றும் மறப்பேமல்லேம்.

கொள்ளக் குறையாக் கல்விப் பெருங்கடலே

கைம்மாறு கருதாமல், எவ்வகைப் பொருளினையும் எத்துணை நிலையினையும் மனக்கண் முன்னே தெளிவுறப் புலப்படுத்திச் சித்தரிக்கும் சிறப்பியல் வாய்ந்து, காலம், அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கற்பகத் தருவாய் விளங்கும் தங்களிடத்தே அண்மிய மாணவர்கள் இந் நாஞ்சில் நாட்டில் நூற்றிற்கு ஐம்பதின் மேல் புலவர்களாகவும் பண்டிதர்களாகவும் அவதானிகளாகவும் சிறந்திலங்கக் கண்ட நாங்கள் உங்களைப் புகழாதிருத்தல் இயலுமோ?

நுணுகிப் பரந்த மதிவீறுடையோய்!

சென்னை நகர் விக்டோரியா நினைவு மண்டபத்தில் 1907ம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் அன்று பேரறிஞர் குழுமிய பெரும் பேரவையத்து தமிழ் மொழி தங்கள் தனியரசினுக்கு அடங்கி நின்று குற்றவேல் புரியும் தன்மை இலங்கப் பெற்று, ஏறுபோல் பீடுடன் இருந்து கண்டார் வியந்து களிக்க நூறு அவதானம் (சதாவதானம்) செய்து காட்டி வெற்றி பெற்ற தங்கள் அரிய ஆற்றலை யாருக்குத் தான் மறக்க இயலும்?

அருள்வளம் அனைத்தும் வரையாது பெற்றோய்!

சென்னையில், வித்துவ ரத்தினமாகிய ஆறுமுக நாவலர் அவர்கள் காலமுதல் உயர்திரு.நா.கதிர்வேற் பிள்ளை அவர்கள் காலம் ஈறாக நடைபெற்ற அருள் பெரும் வள்ளல் இராமலிங்க அடிகளது திருவருட்பா மறுப்புப் போரில் **இறுதியாகத் தாங்கள் முனைந்து, முடிந்த நூல்கள் முகமாகத் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனக் காட்டி உயர்திரு கதிர்வேல் பிள்ளையோடு அவர்களது தொண்டர்களை எதிர்த்துப் போராடி வென்று திருவருட்பா திருவருட்பாவே என்று உலகம் உவப்ப நிலைநாட்டி அப்போருக்கோர் முற்றுப் புள்ளியிட்டுக் கதிர்வேல் பிள்ளையின்**

எதிர்வேல் பிள்ளையெனப் பட்டமும் சூட்ட வாய்ந்த கூர்த்த மதியால் உதித்து ஆர்வத்தை வியந்த நாங்கள் இம்மாபெரும் செயலுக்கேற்ற கைம்மாறு செய்யும் வகை தெரியாது. இன்னும் உழலுகின்றோம். தங்கள் அறிவே பேரறிவு! தங்கள் ஆற்றலே போராற்றல்!

செந்தமிழுக்கோர் செழுஞ்சுடரே!

தங்களிடத்துக் கற்பான்வரும் மாணவர்கள் தங்களது அமிழ்தினும் இனிதினிக்கும் விரிவுரையின் ஏற்றத்தால் அவைகள் அவர்களது உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியப் பெறும் நன்மையையும், பாங்கினும் பான்மையினும் சிறந்த தங்கள் சொற்பொழிவுகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சொற்றிறனையும் நினைக்க நினைக்க எங்கள் உள்ளத்தை அவைகள் கொள்ளை கொள்ளுகின்றன. எங்கள் வாழ்நாளில் அவை என்றும் மறந்தற்குரியனவல்ல. தாங்கள் தமிழுலகம் என்றும் தழைத்துய்யுமாறு நீடிய வாயுளும் கூடிய செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் எல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்

தங்கள் பால் அன்பும் கடமையும் பூண்ட

நாஞ்சில் நாட்டார்

நாகர்கோவில்

23-12-1119

நாஞ்சில் நாட்டார் செய்குதம்பிப் பாவலருக்கு அளித்த இயன்மொழி வாழ்த்தினை நுணுகி ஆராய்ந்தால் முதலில் அவர்கள் நடத்திய சதாவதானத்திற்கு வாழ்த்தும், அதன் பின் அருட்பா விவாதத்தில் அவர்கள் ஆற்றிய அற்புத உரைக்கு வாழ்த்தும் வந்துள்ளதை அறியலாம்.

சென்னையில் *1907* மார்ச் திங்கள் *10*ஆம் நாள் பாவலர் சதாவதானம் நடத்தியதை நாடறியும். அதற்கு முன் அவதானம் குறித்து சில செய்திகள் இதோ;

அவதானம்

அவதானம் என்ற சொல்லுக்கு உணர்வில் வாங்கிக் கொள்ளுதல் என்பது பொருள். எனவே அவதானக்கலை என்பது உணர்வுக்கலை எனப்பொருள்படும். ஐம்புலன்களுக்கும் அடுக்கடுக்காக வரும் சோதனைகளைத் தாம் நுண்மாண் நுழைபுலத்தால் முறைப்படி ஏற்று உள்ளத்துள் அவ்வரிசைப்படி நிறுத்தி, உணர்வுகளையும் ஆற்றல்களையும் தூண்டி சாதனைகளுக்கு அம்முறையே விடைகள் பகர்ந்து வருதல் என்பது அவதானக்கலை நிகழ்ச்சி என்பர் வித்துவான் சி.குமரேச பிள்ளை.

அவதானம் எட்டு, பத்து, பதினாறு, முப்பத்தி மூன்று, நூறு வகையான அவதானக்கலைகளிலும் தமது நுண் மாண் நுழைபுலனைச் செலுத்தி இக்கலை விற்பன்னர்கள் அவை பற்றி வினவும் வினாக்களுக்கு விடைபகரும் திறமையே அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், துவதீரீம் தசாவதானம், சதாவதானம் என்னும் பெயர்களால் அழைப்பது வழக்கம்.

இறைநாம உச்சரிப்பு

அவதானம் தொடக்க முதல் முடிவு வரை வினாக்களுக்கு விடையிறுக்கும் காலம் நீங்கலாக இறை நாமத்தை நவின்று கொண்டிருத்தல்

கைப்பணி

கையால் இலாட சங்கிலியைக் கழற்றவும் பூட்டவும் செய்து கொண்டிருத்தல்

தலைவரோடு உரையாடல்

அவதானம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே தலைவரோடு ஏதேனும் ஒரு பொருள் பற்றித் தொடர்பாக உரையாடிக் கொண்டிருத்தல்

கவி பாடல்

கேள்வியாளர் விரும்பும் யாப்பும் பொருளும் அமைய அவர் கொடுக்கும் ஆசுக்குக் கவி பாடுதல்

இலக்கியம்

தமிழ் இலக்கிய நூற்களிலிருந்து வினவப்படும் வினாக்களுக்கு விடையிறுத்தல்

இலக்கணம்

வினவப்படும் இலக்கண வினாவிற்கு விடைபகர்தல்

வெண்பாவை இருகாற் கேட்டுக் கூறுதல்:

அவையோர் கூறும் புதிய வெண்பாவை இருமுறை கேட்டுத் திரும்பச் சொல்லுதல்

கண்டப் பத்திரிகை

ஏதேனம் ஒரு பாடலில் அடங்கியுள்ள எழுத்துக்களை இலக்கமிட்டு வெட்டி ஒரு பாத்திரத்திலிட்டு குலுக்கி வைத்துக் கொண்டு அவதானி தன் முன் வரும்போது ஒரு துண்டை எடுத்து அஃது இத்தனாவது எழுத்து – இன்னது என்று கூறுதல் வேண்டும். இவ்வாறு அவதான நிகழ்ச்சியில் கொடுத்து வரும் எழுத்துக்களை உள்ளத்தில் வாங்கிப் பதித்துக் கொண்டு முடிவில் பாடலைக் கூறுதல்.

சுவைப் புலனறிவு:

அவதானி அவதானம் செய்து வருங்கால் பல நீர் நிலைகளிலுள்ள நீரைக் கொடுத்துச் சுவை பார்க்கச் செய்து அவை இன்னின்ன நீர் நிலைகளிலிருந்து எடுக்கப்பட்டன எனக் கூறிவிடுதல், பிறகு ஏதேனும் ஒரு நீர் நிலையிலுள்ள நீரைக் கொடுக்க அவதானி சுவைத்துப் பார்த்து இது இன்ன நீர் நிலையிலுள்ளது எனக் கூறுதல்

ஒலி மாறுபாடுணர்தல்

வேறுபட்ட நிறையுடைய பாத்திரங்களை ஒவ்வொன்றாகத் தட்டி ஒலி எழுப்பி அவற்றின் நிறைகளை அவதானிடம் கூறி விடுதல். பின் ஏதேனும் ஒன்றினை மறைவிடத்திலிருந்து

அடித்து ஒலியெழுப்ப அவ்வொலியின் மூலம் அதன் நிறையை அறிந்து கூறுதல்

ஒலி எண்ணம்:

அவதானம் நிகழுங்கால் பின்னால் ஒருவர் அழைப்பு மணியை இடையிடையே அடித்துக் கொண்டிருப்பார். அவர் வினவுங்கால் எத்தனை முறை அடிக்கப்பட்டது என அவதானி கூறுதல்.

நெல்லறிதல்:

அவதானம் நிகழுங்கால் ஒருவர் அவதானியின் முதுகில் நெல்லெறிந்து கொண்டிருப்பார். அவதான முடிவில் எத்தனை நெல் எறியப்பட்டன என அவதானி கூறுதல்.

கல்லெறிதல்:

நெல்லெறிந்தது போல் கல்லெறிய முடிவில் எண்ணிக்கை கூறுதல்

கண்டத் தொகை:

வினாவாளர் கூறும் தொகையை பதினாறு அறை கொண்ட சதுர வீட்டில், ஒரு அறையில் வந்த எண் மறு அறையில் வராத வண்ணம் எப்பக்கமாகக் கூட்டினாலும் கேள்வியாளர் விடுத்த தொகை வருமாறு, ஒவ்வொரு அறைக்காக எண் சொல்லி அமைத்தல்.

நூறு சொல்லுதல்:

அவையிலுள்ள ஒருவரும் அவதானியும் ஒன்று முதல் பத்திற்கு மேற்படாத எண்ணை மாறி மாறிக் கூட்டி வரும்போது அவதானி நூறு தான் சொல்லும்படியாக எண்களைக் கூறிவந்து முடிவில் நூறு சொல்லுதல்.

தொகை கூறல்:

பெரிய எண்களின் கூட்டுத்தொகை, பெருக்குத் தொகைகளை உடன் கூறல்.

நினைத்த எண் கூறல்

ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளக்கூறி பின் அதனோடு சில எண்களைக் கூட்டியும் குறைத்தும் வரச் சொல்லி விடையை வினவி முன் நினைத்த எண்ணைக் கூறல்.

கிழமை கூறல்:

ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்ட ஆண்டு, திங்கள், நாளை அவையோர் கூற அந்நாளுக்குரிய கிழமையை அவதானி கூறல்

உடுநாள் கூறல்:

முன்போல் ஆண்டு, திங்கள், நாள் கூற அந்நாளுக்குரிய உடு (நட்சத்திரம்) கூறல்

நாள் கூறல்:

ஆண்டு, திங்கள், கிழமை கூற அத்திங்களில் அக்கிழமை வருகின்ற நாளைக் கூறுதல்

திங்கள் கூறல்:

ஒருவர் பிறந்த ஆண்டும், நாளும், கிழமையும் கூற பிறந்த திங்கள் கூறல்.

வயது கூறல்:

ஒருவர் பிறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற வயது கூறுதல்

ஆண்டு கூறல்:

பிறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற பிறந்த ஆண்டின் பெயர் கூறுதலும்; இறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற இறந்த ஆண்டு கூறலும்.

சீட்டாடல்:

குறிப்பிட்ட ஒரு சீட்டாட்டத்திற்கு அதற்குரியவர் சீட்டுடன் ஒரு புறம் இருப்பர். அவதானியின் ஆளாக ஆடத்தெரியாத

ஒருவர் இருப்பார். சீட்டுக் கொடுக்கப்பட்டதும் அவதானி ஆளிடம் இருக்கும் சீட்டை ஒரு முறை பார்ப்பார். பின் ஆட்டம் தொடங்கப்படும் அவதானம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே தான் சீட்டு இறக்க வேண்டிய இடம் வந்ததும் தன் ஆளிடம் தன் சீட்டைப் பார்க்காமலேயே சீட்டைக் குறிப்பிட்டு இறக்கும்படியாகக் கூறுதல். ஆட்டம் பிழைபடாது நடத்தல் வேண்டும்.

பதினைந்து நாயும் புலியும் விளையாடல்:

மூன்று புலிகளை பதினைந்து நாய்கள் கூடி தடைப்படுத்துவதாக, காய்களைக் கொண்டு இருவர் விளையாடும் இந்த ஆட்டத்தில் அவதானியின் ஆளாக ஒருவர் இருப்பார். அவதானம் நிகழ்ந்து வரும் காலையிலேயே தமது ஆளிடம் நகர்த்த வேண்டிய காய்களைக் கூறிவருதல்.

இவ்வாறு தொகையால் வகுக்கப்பட்ட இவ்விருபத்தி ஐந்தில், இறைநாம உச்சரிப்பு, கைப்பணி, தலைவேரோடு உரையாடல், சீட்டாடல், பதினைந்து நாயும் புலியும் விளையாடல் நீங்கலாக ஏனையவை ஒவ்வொன்றிலும் பலவகைகள் சேர்க்கப்பட்டு அவதானக் கலைப் பொருள் நூறாகக் கொள்ளப்பட்டது.

கோவில்பட்டியில் வாழ்ந்த தசாவதானி பெ.இராமையா திருவாவடுதுறை ஆதின சமயப் பிரச்சாரகர் பி.ஆறுமுகம் பிள்ளை தசாவதானி இப்படி நினைவுக்கலை நிபுணர்கள் பலர் தமிழகத்தில் வாழ்ந்துள்ளனர். இந்த நிலையில் தான் வள்ளலார் பாடல்களை மருட்பா என்ற நா.கதிரைவேல் பிள்ளை சதாவதானம் செய்ய இருப்பதாக அறிவிக்கிறார். நா.கதிரைவேல் பிள்ளை சதாவதானம் செய்யபோவதாக ஏமாற்றிய வரலாறும், அதனை செய்குதம்பிப் பாவலர் நேரில் பார்த்த சரித்திரத்தையும் காண்போம்;

தமிழகம் மறந்த சரித்திரம்

சென்னை லட்சுமி விலாச நாடக சாலையில் **24.2.1907**இல் சதாவதானம் செய்யப்போவதாக நா.கதிரை வேல் பிள்ளை அறிவித்திருந்தார். கதிரைவேற் பிள்ளை *30.9.1903* பூலோக

நண்பன் இதழில் சதாவதானம் குறித்த கட்டுரை எழுதி இருந்தார்.

அது குறித்து, கதிரையார் ஏதோ சிற்சில அவதானங்களைச் செய்து சதாவதானப் பட்டப்பெயர் பெறுதற் தகுதி நான்கு வருடத்திற்கு முன்னரே, அதாவது (30–9–1903) பூலோக நண்பன் பத்திரிக்கையில் “அஷ்டாவதானம் எவை?” என்னும் தலைப்பின் கீழ் அவதானங்களை விளக்கவந்தவர் “எட்டுத் தொழில்களை அவதானிப்பவர் அஷ்டாவ தானியென்றும், பத்தில் வல்வலர் தசாவதானி என்றும், பதினாறில் வல்லவர் சோடசாவதானி யென்றும் அவற்றிற்கு மேற்பட்ட அவதானங்கள் செய்பவர் சதாவதானி யென்றுஞ் சொல்லப்படுவர்” என அஸ்திவாரம் போட்டுக்கொண்டு 1907ம் சில போலி அவதானங்களைச் செய்துவிட்டு, அவர் அவதானங்கள் செய்வதில் தவறிவிட்டார் எனப் பல பேர் கூறவும், தாம் சதாவதானஞ் செய்து வெற்றிபெற்றதாகச் சதாவதானியாரென நாணமின்றிப் பட்டப்பெயர் சூட்டிக்கொண்டார்.

திட்டமிட்டபடி 24.2.1907இல் சென்னையில் சதாவதானம் நடத்திட நா.கதிரைவேல் பிள்ளை முயற்சித்ததை தஞ்சை சண்முகம் பிள்ளை இவ்வாறு வர்ணிக்கிறார்.

அவதானமியற்று மேடைமீது பரிஷகராக வீற்றிருந்தோருட் பெரும்பாலார் அவதானியாருடைய நண்பர்காளகக் காணப்பட்டனர்.

முதலில் கதிரையாரெழுந்து நாம் சின்னாட்கு முன்னே வெளிநாட்டில் சோடசாவதானமும் அட்டா தசாவதானமும் சுலமாகச் செய்து முடித்துள்ளோம். இன்று செய்யப்புகுந்த சதாவதானத்திற்குப் பல காரணங்க ளுண்டெனினும் அவற்றுண் முதன்மையானது இதிற் கிடைக்கும் ஊதியத்தைத் தர்மகாரியத்தின் பொருட்டு வினியோகிப்பதே என்று கூறி, பின்னர் அவதானஞ் செய்யப் பழகல் மனவொடுக்கத்தைத் தருமென்றும் அதனால் உண்டாகும் நன்மைகள் இன்னின்ன வென்றும் பேசி முடித்தார். பின்னர் அவதான விஷயம் இன்னின்ன வென்று வழங்கலாயினர். அங்ஙனம் வகுத்தவற்றுள் முப்பத்திரண் டவதானங்களே தேறின. இவர் பத்திரிகையில் வெளியிட்ட நூறவதான மென்பதொழிந்து, அதி

லரைப்பாகமு மின்றி மூன்றி லொருபங்காக, அதாவது முப்பத்தி ரண்டவதானமாக வகுத்தார். இவற்றுள் இலாடசங்கிலி கழற்றல், தேவநாமம் உச்சரிப்பு ஆக இரண்டும், ஈற்றடி தந்து மற்றை மூன்றடியும் முடித்து தருவதில் இருவரும் குறித்த விஷயத்தைப் பாடலாகக் கூறுவதில் இருவரும் இலக்கணப் பாடமொருவரும் கண்டபத்திர மொருவரும் தருவதென்றும் சித்தாந்த முடிபு கூறலும் புராணக் கதை சொல்லலும் மற்றய வெல்லாம் கணித வகையாகவும் வகுத்துப் பின்னர் அவதானஞ் செய்யத் துவங்கினார். அப்போது, பால சரஸ்வதி ஸ்ரீமான் ஞானானந்த சுவாமிகள் சபைத்தலைவராக அமர்ந்திருந்தார்.

முதற்பரிஷகர், "குளத்தில் நெருப்பு கொதித்தது சுட்டது குற்றமன்றே", என்னுங் கட்டளைக் கலித்துறை ஈற்றடியை கொடுத்து, மற்றை மூன்றடியும் பாடி முடிக்க வேண்டுமென்றார். இச் சமிச்சையை அவதானியார் விரைவிற் பாடி முடித்ததற்குக் கழகம் மகிழ்வெய்த வேண்டுமெனினும், இப்பாடல் சங்கேதம் (எனவே இச் சதாவதானியார் இதற்கு முன்னமே பாடிப் பழகியிருக்க வேண்டும்) என்று அச்சபையில் வந்திருந்த பல புலவர்கள் எண்ணினார்கள்.

இரண்டாம் பரிஷகர்; குமரவேளையும் அவர் தம் வேலு மயிலையும் நிரோட்டக வெண்பாவிற் சிறப்பித்துப் பாட வேண்டு மென்றார். நிரோட்டகத்திற்குப் பொருத்தமில்லாத மகர – வகர – பகரங்களை அவதானியார் (பலர் பலதரம் எச்சரிக்கவும் உணராராய்) மும்முறை கூறி (இவ்வவதானியார் நிரோட்டக விலணக்க மெட்டுணையு மறியாத நிரக்ஷரகுக்ஷி யென்றெள்ளி நகையாட) அவமானமுற்றனர், பாவம்!

மூன்றாம் பரிஷகர், கொடுத்த கோவைத்துறைப் பாடலை ஒருவாறு முடித்து, அதிலமைந்த புலி, புல்லி என்னும் பதங்கட்குத் தயிர், மோர் என்று விபரீதார்த்தஞ் செய்து இவ்வரியப் பிரயோகம் ஐங்குறுநூற்றி லுளவேன்று புதுமை காட்டினார். ஐங்குறுநூற்றை ஆதியோடந்தமாக மாக மகோபாத்தியாராய சாமிநாதையர் அவர்களுடன் பன்முறை ஆராய்ந்த அந்தண ரொருவரெழுந்து "அவதானியார் எடுத்துக்காட்டிய பதப்பிரயோகம் ஐங்குறுநூற்றிற் கிடையாதென்று" மறுத்தார். வேதியர் கூறியது உண்மையாதலின் அதனை மறுத்துரைக்க

வேலாமல் அவதானியார் பயனற்ற சீற்றங் கொண்டாராய்த் தர்க்கத்தானும் இலக்கணத்தானும் இவர் கூற்றை மறுத்துச் சமிப்பேனென்று பொருத்தமற்ற வாய்மதம் பேசித் தறுக்கினார். இவர் தம் நண்பர் முகங்கள் பூரணகிரண சந்திரன் போன்றிருந்தன. இக்காட்சியைக் கண்ட ஏனைய புத்திமான்கள் பரிகசித்தனர். அந்தணரை அதிகம் பேசவிடாமல் உட்கார வைத்தனர். இதனிடையே இலக்கணப் பாடம், சித்தாந்தப் பிரசங்கம் என்று மிரு விஷயங்களையும் நீள நடத்தி வீண் காலம் போக்கினர்.

நான் பரிஷித்த இருபதொழுத்துக்களா லாய கண்டபத்திரத்தில் ஏழெழுத்துக்கள் வரையில் கேட்டு மற்றதைத் கேளாதொழிந்தார். கேட்டதையாவது சொல்லித் தொலைந்தாரில்லை. இதிலும் அவதானியார் அவமானமுற்றனர்.

கணித பரிஷை வரையிலும் பலதரம் அவதானியார் தவறினர். கணித பரிஷகராயிருந்தோர் ஆங்கிலங் கைவந்த லாயர்களாதலால் அவதானியாரவதானம் அவர்களிடஞ் செல்லாததாயிற்று. அவதானியார் திறத்தையும் தற்புகழ்ச்சியையும் கவனித்த அன்னோர் அவதானஞ் செய்தற் கெட்டுணையும் அருகரல்லாத இவர் இதிற் றலையிட்டுக்கொண்டது, இவர் திறமறியாத சில விவேக சூனியர்கள், இவர்பால் வைத்திருந்த மதிப்பை இழப்பதற்கன்றி வேறன்றென்று வயிறுநோக நகைத் திகழலாயினர்.

“கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று” என்னுங் கதைபோல நூறவதானம் செய்கிறேனென்று கூறிவந்த இந் நா.கதிரைவேல் பிள்ளை முப்பத்திரண்டவதான மாக்கியபோதே அவர் தோல்வித்தான மெய்தினரன்றோ! கடைசியாக நிகழ்த்திய அவதானம் பத்தாயிற்று. அப் பத்தவதானமாவது சிறப்ப முடிக்காமல் குளறி வழிந்தார். இவ் வழி அவதானத்தைப்போல இந்நாட்டினு மற்றெந்நாட்டினும் நடந்ததேயில்லை. இக்காலத்தும் முற்காலத்தும் அவதானஞ் செய்வேமென வெளிவந்த வித்வரத்னங்கள் தோல்வித்தான மடையாதது கண்டுஞ் கேட்டு மிருக்கின்றோம்.

இவ்வளவில் இரவு மணி எட்டாயிற்று. அவதானம் அரைகுறையாயிருக்கையில் அவதானியார் இவ்வவதானத்தின்

பொருட்டு இரண்டு நாள் உபவாச மிருந்ததாகவும் அதனால் தேக சிரமமும் களைப்பு முண்டாகிறதென்றும் அவதானத்தை நிறுத்திக் கொள்ளத் தந்திரவார்த்தை யாடினார். மேடை மீதிருந்த அவர் தம் நண்பர்கள் எல்லோரும் இவ்வளவு போதும் போது மென்றனர். நா.கதிரைவேல் பிள்ளையும் சள்ளை யொழிந்ததென்று சந்தோஷமாயுட்கார்ந்தார்.

இத்தகைய உப்பிலா அவதானத்தை ஒருவர் ஒப்பிலா அவதானமென்று கூறி மகிழ்ந்தார் கண்டீர்! அவர் யார்? இச் சாரமற்ற அவதான பரிஷகரிலொருவராகிய ம–ள–ள–ஸ்ரீ ஆலாலசுந்தம் பிள்ளை யென்பாரொருவர் எழுந்து நின்று நாமெல்லாம் கண்டு கேட்டானந்திக்கும்படி இன்று சதாவதானத்தை செய்து முடித்த நா.கதிரைவேல் பிள்ளை யவர்கட்குச் சதாவதானப் பெயர் தகும்! தகும்!! என்று கூறி யெல்லோரும் கரகோஷங்கள் செய்யுங்கள் என்றார். ஆ! என்ன கலிகாலப் புதுமை! நா.கதிரைவேல் பிள்ளை தம்முடைய நண்பரே எனினும் அப்பெருஞ் சபையில் மனசாட்சிக்கு விரோதமாக இவ்வாறு எழுந்து கூறுதல் கூடுமோ! அந்த அரங்கில் இருந்த அறிஞர் பலர் ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்களின் பயனற்ற சொல்லில் அருவருப்புற்றனர். இதோடு சபை கலைந்தது. இதன்படியே இவர் செய்த அவதானம் அவமானமாக முடிந்திருக்கவும், அன்றே நா.கதிரைவேல் பிள்ளை சென்னையிலின்று சதாவதனாஞ் செய்து ஐயம் பெற்றாரென மதுரைச் சங்கத்திற்கு எழுதி விடுத்தும் பற்பல பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தும் மகிழ்ந்தார்கள்.

பின்னும் இக்கதிரையார் தாம் செய்த அவதானத்தில் பரிஷகர்களாக ஏற்படுத்திக் கொண்டவர்களில், முதலாவது பரிஷகர் சோமசுந்தரம் பிள்ளை என்பவர். இப் போலீசுகேசில் *கதிரையாருக்காக 3வது சாட்சிக்காரர். 2வது பரிஷகர்* காஞ்சிபுரம் பா.சி.முருகேச முதலியார். இவர் மேற்படி கேசில் *வந்த 10வது சாட்சிக்காரர். 3வது பரிஷகர்: மயிலை அரங்கசாமி நாயக்கர். இவர் மேற்படி கேசில் வந்த 12வது சாட்சிக்காரர். 4வது பரிஷகர்: யாழ்ப்பாணத்து தெல்லியம்பதி இராஜரத்தினம் பிள்ளை. இவர் நாவலர் கக்ஷியைச் சேர்ந்த யாழ்ப்பாணத்துத் தாமோதரம் பிள்ளையின் தமையன் மருமகன். 5வது பரிஷகர்:* காஞ்சி ஆலாலஞ்சுந்தரம் பிள்ளை என்பவர். இவர் முன்னர்

இராமலிங்க சுவாமிகள் கட்சியிலிருந்து பொருளுதவிக்கு ஆசைப்பட்டு கதிரையார் கட்சியில் சேர்ந்தவர்.

இவரைப் போன்றே ஏனைய பரிஷகர்களு மெனக்கொள்க. இவர் அவதானமெல்லாம் போலீசு கேசில் தமக்குச் சாட்சி சொல்லும்படி ஆள்களைப் பிடித்து அவர்களுக்கு இன்னின்னவாறு சாட்சி சொல்லும்படி ஆள்களைப் பிடித்து அவர்களுக்கு இன்னின்னவாறு சாட்சி சொல்ல வேண்டுமென இரவெல்லாம் கற்றுக்கொடுத்து அரங்கி லாட்டிவித்துப் பின்னர் போலீசில் வந்து சாட்சி சொல்வித்தது போல் இருக்கின்றது. அதுவுமின்றி அச்சபைக்கு அத்தியாச்சிரம் பாலசரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் அக்கிராசனாதிபதியாக ஏற்படுத்திக் கொண்டார். 1902ம் வருடம் பிப்ரவரி மாதம் 16ம் தேதி சென்னை வேணுகோபால் அரங்கத்தில் வைணவ மத சண்டைக்காகக் கூடிய சபையிலும் இன்னும் இக்கதிரையார் கூட்டும் பிரசங்க சபைகளிலும் மேற்படி சுவாமிகளைச் சபைத்தலைவராக ஏற்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி சுவாமிகள் இவரிடத்துப் பட்சமுடையவராக இருந்திருக்க வேண்டும். அங்ஙனம் எவ்வாறு கொள்ளலாமெனில், அவதான முடிவில் பிராமணப் பரிஷகர் ஒருவர் எழுந்து அந்த அவதானம் பூர்த்தியாகவில்லையென்றும் தமது கவியை முடித்துத் தரவில்லை யென்றும் முடித்த கவிகளிலே அநேகக் குற்றம் கூறியும் பேசினார்.

கதிரையாருக்கு மிக்க நண்பராயும் பரிஷகராயு இருந்த கல்குளம் – குப்புசாமி முதலியார் B.A., என்பார் இவர் அவதானந் தவறிவிட்டாரெனக் கூறியிருக்கின்றார். இவ்வாறிருக்கவும் "நடத்திய விஷயத்தில் குற்றமிருப்பதாகக் காணப்பட்டாலும் பாலையும் நீரையும் கலந்துவிடத்தும் நீரையொழித்துப் பாலைப் பருகும் அம்சத்தைப் போலக் குற்றத்தைக் கருதாது குணத்தையே கருதல் விஷேச" மெனச் சபாநாயகர் கூறினார். இவர் கூற்றைச் 26.2.1907 சுதேசமித்திரனில் காண்க.

இதனால் பதினாறு அவதானத்தின் மேற்படச் செய்தால் அவரைச் சதாவதானியாரெனக் கூறலாமெனக் கதிரையார் பூலோக நண்பனில் கூறி முன்னரே எழுதிவைத்துக் கொண்டதைப் பிரமாணமாகக் கொண்டே சதாவதானஞ் செய்து முடித்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இதற்குப் பிரமாணம் என்னையோ? என்பர் தஞ்சை சண்முகம் பிள்ளை.

இவ்வாறு நா.கதிரைவேற் பிள்ளை சதாவதானம் செய்த ஏமாற்று மோசடியை தஞ்சை சண்முகம் பிள்ளை அம்பலப்படுத்துகிறார்.

ஏமாற்று அரங்கத்திற்குச் சென்ற ஏந்தல் செய்குதம்பிப் பாவலர்

*24.2.1907*இல் நா.கதிரைவேல் பிள்ளை போலியாக நடத்திய சதாவதானத்தினைக் காண வித்வான் திருமயிலை இராமலிங்க முதலியார், சிவகங்கை – செம்பூர் ஆசுகவி வித்வான் செ.வீ.ஆறுமுகஞ்சேர்வை, நாகர்கோவில் கோட்டாறு பிரபல வர்த்தகர் ஸ்ரீமான் அ.வா.நயினார் முகமது சாகிபு, சதாவதானி கா.ப.செய்குதம்பிப் பாவலர் ஆகியோர் சென்றனர். சதாவான அரங்கிற்குள் செல்ல அனுமதிச் சீட்டினை பணம் கொடுத்து கேட்டனர். அரங்க வாயிலில் டிக்கட் விற்பவர்கள் முஸ்லிம்கள் அரங்கில் பிரவேசிக்கக் கூடாது என்றனர். உடனே செய்குதம்பிப் பாவலர், ஐயா, நீவிர் பிரசுரித்த விளம்பரப் பத்திரத்தில் (நோட்டீசில்) முஸ்லிம்களுக்கு இவ்அவதானத்தில் இடங்கிடைக்காது என்று குறிக்கப்படவில்லையே எனவே நாம் இங்கு வந்தோம் என்றார். உடனே பிரவேசச் சீட்டு (நுழைவுச் சீட்டு) விற்குமிடத்தில் இருந்த இன்னொருவர் நாடக அரங்கிற்குள் சென்றார். அங்கு யாரிடமோ பேசிவிட்டு திரும்பி வந்தார். அரங்கினுக்குள் சென்று வந்தவர் செய்குதம்பிப் பாவலரைப் பார்த்து “நீங்கள் அவதான விஷயத்தில் யாதெனும் கேள்வி கேட்க உத்தேசமுடையவராக வந்துள்ளீர்களா?” என்றார். உடனே பாவலருடன் இருந்த ஒருவர் எமக்கு அத்தகைய உத்தேசமில்லை அவதான விஷயத்தைச் சிரவணிப்பான் (கேட்பதற்காக) வந்தோம் என்றார்.

உடனே எல்லோருக்கும் அனுமதிச் சீட்டு கொடுக்கப் பெற்று உள்ளே சென்றனர். அங்கு தான் மேற்சொன்ன போலி சதாவதானம் நா.கதிரைவேல் பிள்ளையால் நடத்தப்பட்டது. இதனைத் தெள்ளத் தெளிவாக தஞ்சை சண்முகம் பிள்ளை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

10.3.1907

சென்னை விக்டோரியா மண்டபத்தில் காஞ்சி மகா வித்துவான் இராமசாமி நாயுடு, தஞ்சாவூர் சதாவதானி

சுப்பிரமணிய ஐயர், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறை தலைவர் திருவேங்கடசாமி நாயுடு, புலவர்கள் நமச்சிவாய முதலியார், இந்து ஜி.சுப்பிரமணிய அய்யர், திரு.வி.க., டி.கே. சி. போன்றவர்கள் கூடிய அவையில் மெய்ஞ்ஞான நாதா – மெய்ஞ்ஞான நா – தா என்ற சொற்றொடரை நாவில் அற்புதமாக கூறியவாறு வந்து சதாவதானத்தை நடத்தியதை உலகம் அறியும். விரிவஞ்சி அது குறித்து எழுதப்படவில்லை. ஆனால் கதிரைவேற் பிள்ளையின் மருட்பா குரலுக்கு வள்ளலார் பாடல்கள் திருஅருட்பா என்று முழக்கமிட்டார் பாவலர். இதோ அது குறித்த செய்திகள்

செய்குதம்பிப் பாவலரும் மருட்பா விவாதமும்

கதிரைவேற் பிள்ளை சென்னையில் அருட்பா x மருட்பா பேராட்டத்தை நிகழ்த்தி வந்த காலகட்டத்தில் செய்குதம்பிப் பாவலர் என்பவர் சென்னையில் இட்டா பார்த்தசாரதி நாயுடுவின் அச்சகத்தில் தலைமைப் பார்வைப் பணியாளராகப் பணியாற்றி வந்தார். அதுபோது அருட்பாக் குழுவினருக்கும் மருட்பா குழுவினருக்கும் இடையே நிகழ்ந்து வந்த வாதப் பிரதிவாதங்களைக் கவனித்து வந்தார். அருட்பா மறுப்பாளர் கூற்றுப் பொருந்தாத வெறுங்கூற்று என்பதை உணர்ந்த பாவலர் அதனை மறுத்து சொற்பொழிவாற்ற விரும்பினார்; தமது விருப்பத்தைப் பார்த்தசாரதி நாயுடுவிடம் தெரிவித்தார். அவர், பாவலர் இஸ்லாமியர் என்ற காரணத்தால் அன்றையச் சூழலில் தயங்கினாரேனும் பாவலரின் புலமையிலும் சமரசப்பாங்கிலும் நம்பிக்கையுடைய வராதலால் ஒப்புக் கொண்டு வேண்டிய ஒத்துழைப்பை நல்கினார்.

குறிப்பிட்ட ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட்டம் நடைபெறுவதென விளம்பரப்படுத்தப்பட்டது.

திரு.நா.சி.கண்ணபிரான் முதலியார் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். அருட்பா வள்ளலாரின் திருவருட்பா ஆறாம் திருமுறையில் வரும் அருள்மாலை விளக்கம் 23வது பாடலைப்பாடி செய்கு தம்பிப் பாவலர் நிகழ்ச்சியைத் துவங்கினார்.

சாதி குலம் சமயம்எலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றித்
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆருயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே
ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்
தூயநடத் தரசேஎன் சொல்லும் அணிந் தருளே

பாடலுக்கான உரையையும் பாவலர் அப்போது சொல்லியிருப்பார்கள். ஆனால் அந்த உரை நமக்குக் கிடைக்காததால் அது குறித்து வேறு இருவர் எழுதிய உரையை இங்கு சுட்டிக்காட்டியுள்ளேன்.

சாதி என்றும் குலம் என்றும் சமயம் என்றும் பேசப்படும் வேறுபாடுகள் எல்லாவற்றையும் போக்கி மேன் நிலையில் என்னையிருத்தி ஒப்பற்ற அருள் ஞானமாகிய அமுதத்தைத் தந்தருளிய சிறந்த தலைமைப் பொருளாகியவனே! முதல், இடை, கடை எனப் பிரித்துக் காட்டாமல் அண்டங்களிலும் வெளி அண்டங்களிலும் அவற்றுள் நிறைந்திருக்கும் உயிர்களிலும், அகமும், புறமும், அகப்புறமும், புறப்புறமும் எல்லாவற்றிலும் நிறைந்து விளங்குகின்ற ஒளியாகியவனே! நூல் பலவும் ஓதி யுணர்ந்த பெரியோர்கள் எல்லாம் என்னை யடைந்து கேட்குமாறு என்னை ஒன்றும் ஓதாமலே யுணர்ந்து உரைக்கத் தக்க உணர்வாகிய நல்லுருவு பெறச் செய்த என்னுறவே! அம்பலத்தின் கண் ஒளி மயமாய் விளங்கி நின்று நடிக்கும் தூய நடராசப் பெருமானே! என்னுடைய சொன் மாலையையும் ஏற்று மகிழ்ந்தருவாயாக.

உலகியலில் மக்களிடையே நிலவும் சாதி வேற்றுமை, குல வேற்றுமை, சமய வேற்றுமை ஆகிய வேற்றுமை பலவற்றையும் நோக்காது போக்கி அவற்றுக் கெல்லாம் மேலாய் உயர்த்தி, அவையனைத்தையும் ஒன்றாய் சமமாய்க் கருதத் தக்க சமரச ஞானமாகிய திருவருள் உணர்வைத் தனக்கு நல்கினமை புலப்பட வடலூர் வள்ளல், "சாதி குலம் சமயமெலாம் தவிர்த்து எனை மேலேற்றித் தனித்த திருவமுது அளித்த தனித் தலைமைப் பொருளே" என்று சாற்றுகின்றார். அண்டங்களிலும், அண்டங்கட்டு வெளியே உள்ள அண்டங்களை,"பகிரண்டம்"

என்பர். அண்டங்கள் தோறும் எண்ணிறந்த உயிர்கள் வாழ்தலால், "ஆருயிர்கள்" என வுரைக்கின்றார். அகம் புறம் மற்றனைத்தும் என்பதில் மற்றனைத்து என்பது அகப்புறத்தும், புறப்புறத்தும் உள்ள பிரிவுகளை உணர்த்திற்று. அண்டங்களிலும் பகிரண்டங்களிலும் அவற்றில் உறையும் உயிர்களிலும் ஆதி என்றும், அந்தமென்றும், நடுவென்றும் உள்ள பகுதிகள் அனைத்திலும், அவற்றின் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும் எங்கும் நிறைந்து சிவத்தின் அருளொளி பரவுவதால், "ஆதி நடுக் கடை காட்டாது அண்ட பகிரண்டம் ஆருயிர்கள் அகம் புறம் மற்றனைத்தும் நிறை ஒளியே" என்று உரைக்கின்றார். கற்றிந்தவர் பலரும் ஐயம் தெளியுமாறு தம்மைப் பணிந்து கேட்கத் தான் வீற்றிருந்து உரைக்கும் வண்ணம் பன்னூல்களையும் ஓதாதே உணர்ந்துரைக்க வல்ல ஒள்ளிய ஞான நிலை தமக்கு எய்தியமை புலப்பட, "ஓதி யுணர்ந்தவர் எலாம் எனைக் கேட்க எனைத்தான் ஓதாமல் உணர்ந்து உணர்வாம் உருவுறச் செய்யுறவே" என இசைக்கின்றார். சோதி மயம் – ஞானவொளி மயம். என் சொல் – யான் தொடுத்திருக்கின்ற சொன் மாலை.

(திருவருட்பா மூலமும் உரையும், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, தொகுதி 9, வடலூர், சென்னை 2004, பக்கம் 407, 408)

இந்தப் பாடலுக்கு என்னை ஓதாமல் உணர்ந்து உணர்வுற வைத்தாய் என்று புலவர் அடியன் மணிவாசகன் தரும் எளிய உரை இதோ;

(எ–ரை) ஆரூயிர்நேய ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் கெடுக்கின்ற, அறப்பண்பு காட்டாத சாதிப்பிரிவு, குலப்பிரிவு, கடவுட்கொள்கையென்னும் சமயப்பிரிவு ஆகியவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு, என்னை அருட்பண்பில் மேலே உயரச் செய்து, தனித்தன்மை வாய்ந்த அருளமுதை எனக்களித்த தனித்தலைமைக் கடவுளே!

முதல் நடு இறுதி என்று பகுப்பு நிலை தெரியாமல் பேரண்டம் சிற்றண்டம் எனப் பல அண்டங்களிலும், ஆருயிர்களின் உள்ளும் புறமும், ஏனைய அனைத்து வெளிகளிலும் முழுமையாய் நிறைந்திருக்கும் பேரொளியான இறைவனே!

உலகிலே இறையியல் நூல்கள், உண்மையியல் நூல்கள், அளவையியல் நூல்கள், இலக்கிய இலக்கண நூல்கள், தொன்மை (புராணம்) நூல்கள் யாவையும் கற்றுணர்ந்த சான்றோரெல்லாம் என்னிடம் வந்து, தங்கள் தங்கள் ஐயுறவுகளையெல்லாம் சொல்லித் தெளிவுபெற்றுச் செல்லுமாறு, என்னை நூல்களை முன்னர்க் கற்காமலேயே அவற்றின் நுட்பப் பொருள்களை உள்ளாற்றலோடு உணரச் செய்து, உடம்பையே உணர்வொளியாக்கிய என் உறவான தெய்வமே!

பேரொளி வடிவாகவே திகழ்ந்து தனித்தன்மையுடைய ஆன்ம அறிவுப் பொதுமன்றிலே ஆடல்புரியும் தூய ஆடல்வல்ல அரசே!

அடியேனினும் சொல்மாலையே அணிந்து கொண்டு அருள்புரிய வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் செய்குதம்பிப் பாவலர் ஆற்றிய உரையினை செந்தமிழ் வளர்த்த செய்குதம்பிப் பாவலர் என்ற நூலில் வித்துவான் சி.குமரேச பிள்ளை 1986இல் பக்கம் 35 முதல் தந்துள்ளார்.

உங்கள் முன்னிலையில் அடியேன் இராமலிங்க சுவாமிகளின் அருள் திறனையும் அவர்கள் பாடியருளிய அருட்பாவின் சிறப்புகளையும் அதன் அருள் வாய்ப்பையும் அதற்கு மறுப்பாக ஒருவர் எழுதிய, ‘அருட்பா ஆபாச தர்ப்பணம்‘ எனும் நூலின் பொருந்தாமையையும் இயன்றவரை, விளக்கலாமென எண்ணுகிறேன்.

இராமலிங்கர் பாடல் அருள்பாவா மருட்பாவா என்பது உங்கள் ஐயம். அத்தொடரே அருட்பா + ஆம் + அருட்பா + ஆ என ஆச்சர்யத்துடன் அறுதியிட்டுக் காட்டுகிறது.

இராமலிங்க அடிகளது வரலாறு உங்களுக்குத் தெரிந்த அளவு எனக்குத் தெரியாது. ஆகவே அவர்களது வரலாறு பற்றி நான் இங்கே சொல்லவில்லை. ஆனால், அவரது ஒழுக்கத்தைப் பற்றி நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியதுண்டு. அதனை அவர் பாடல்களிலிருந்து தெரிந்து கொள்வதுதான் சரியான முறை. அங்ஙனம் தெரிந்து கொள்வேமானால் அவர் வாய்மை, கொல்லாமை, அடக்கம், பெருந்தன்மை, சான்றாண்மை

ஆகிய பெருங்குணங்களில் சாலச் சிறந்தவராக வாழ்ந்திருக்க வேண்டுமென்றும், சமயக்குரவர்களது பெருநிலையைப் பொன்னே போல் மனத்தே பேணியொழுகி வாழ்ந்து வந்தவர் என்றும் உறுதியாகக் கூறலாம் என்று கூறி, இராமலிங்க அடிகளது வாழ்க்கை முறை நேர்மையற்றது என்றவர் கூற்றை முதற்கண் மறுத்தார்.

அடுத்தபடியாக திருவருட்பா என்னும் நூலிற்கு விளக்கம் கொடுக்கத் தொடங்கினார். 'திருஅருட்பா' என்ற தொடர் மொழியானது திரு.அருள், பா எனும் மூன்று சொற்களைக் கொண்டது. இத்தொடர் இராமலிங்க சுவாமிகள் இறைவனது திருவருள் துணைகொண்டு பாடியருளிய பாடல்களான நூல் எனக்கருவியாகு பெயராக நூலை உணர்த்தி நின்றது.

இராமலிங்க அடிகளாரின் படல்களிலுள்ள ஆபாசங்களை விளக்கிக் காட்டும் கண்ணாடி எனப்பொருள்பட ஆக்கப்பட்டிருந்த 'இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு' என்னும் நூற்பெயரின் பிழையை பாவலர் அவர்கள் அடுத்து எடுத்துக் காட்டலானார்.

பிழையுடைய பெயரமைப்பு

சுவாமிகளின் பாடல்கள் ஆபாசம் நிறைந்தனவென்றும் அவற்றை விளக்கிக் காட்டும் கண்ணாடி இந்நூல் என்றும் இதனை எழுதியவர் கருதுவாரானால், இந்நூற்கு, இராமலிங்கம்பிள்ளை பாடலின் ஆபாச விளக்கத் தர்ப்பணம் என்று பெயர் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு அமைக்காத காரணத்தால் அவ்பெயரமைப்பே என் கொள்கைக்கு ஆதரவளிப்பதாக அமைந்துள்ளது. எவ்வாறெனில்; அத்தொடரில், 'அடிகளாரின் பாடல்கள் ஆகா என்ன அருமையானவை! அவை பாசத்தின் இயல்பை அதாவது மாயையின் இயல்பை விளக்கிக் காட்டும் கண்ணாடியாயள்ளன' எனப் பொருள்படும். அன்றியும் **இராமலிங்கம் பிள்ளைப் பாடல்கள் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்று பெயரிட்டிருக்கின்றார்கள் 'அல்லது' என்னும் இடைச்சொல், விளக்கப் பொருளில் அமைக்கப்படவில்லை என்பது விளக்கப் பொருளிலேயே அமைக்கப்பட்டதென்பதும் பெயரமைப்பை நோக்க விளங்கும். அருட்பா ஆபாச தர்ப்பணம் என்ற தொடருக்கு**

விளக்கச் சொல்லாக 'மருட்பா மறுப்பு' என்னும் தொடர் அமைந்ததாகப் புலப்படவில்லை. எனவே, பிழையுடைய பெயரமைப்பு எனப் புலப்படுகிறது. *அன்றியும் மருட்பா மறுப்பு என்றார்களே, மருட்பாவினை மறுப்பது அருட்பாவெனத் துணிவது என்பது தானே? எனவே, அவர்கள் அருட்பா என ஒப்புக் கொண்டதாகத்தானே பொருளாகிறது. அச்சொற்றொடர் அவ்வாறு அமைந்ததும் அடிகளாரின் அருள் திறத்தையே காட்டுகிறது. அன்றியும் தர்ப்பணம் என்றெழுதுவது தமிழ் இலக்கண வழக்கிற்கு மாறுபட்டது.*

நன்னூல்

{ *யரழ வொற்றின்முன் கசதபஙஞநம*
ஈ றொற்றாம் ரழத்தனிக்குறிலணையா

என்பது 119வது விதியாகும்.

ர,ழ, – ழகர மெய்கள் தனிக்குறில் அணையா. மொழிக்கு உறுப்பாகத் தனிக்குற்றெழுத்தின் பின்னே வந்து மயங்கவாம். உதாரணம் கூர்ப்பு..... (நன்னூற் காண்டிகையுரை ஐந்தாம் பதிப்பு 1906, வை.மு.சடகோப ராமாநுஜாசாரி, சே.கிருஷ்ணமாசாரி, சென்னை, பக்கம் 51)

எவ்விடத்தும் தனிக்குறின்முன்னர் ரகர ழகரங்கள் வந்து ஒற்றாய் நில்லா. (உ.வே.சா. பதிப்பு பவணந்தி முனிவரின் நன்னூல் மூலமும், மயிலை நாதருரையும், சென்னை 1918, பககம் 49-50)

இராமநுச கவிராயர், ஆண்டிப் புலவர், விசாகப் பெருமாள் ஐயர், சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூலுக்கு விருத்தியுரை தந்துள்ளனர். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் நெல்லை வெளியிட்ட சங்கர நமச்சிவாயப் புலவர் உரையிலும் இதனை வலியுறுத்துகிறார். பக்கம் 78}

'ரழதனிக்குறி லணையா' என்பது விதி. தனிக்குறிலை அடுத்து ரகர ழகர ஒற்றுக்கள் வாரா என விதியிருக்கத் தர்ப்பணம் என எழுதியுள்ளது இலக்கணப் பிழை. பெயரமைப்பிலேயே 'தருப்பணம்' என்றெழுதாமல் தர்ப்பணம் என்றெழுதி இலக்கணப் பிழை அமைத்த ஆசிரியர் எழுதிய நூல் முழுவதும் இலக்கணப் பிழையே மலிந்திருக்கும் என்பது தெளிவுதானே?

அத்தகைய நூலைத் தமிழ் மக்கள் படிப்பது தவறு; என்று கூறி அப்புத்தகப்படி ஒன்றைக் கையிலெடுத்து இரண்டாகக் கீறி எறிந்தார். கூட்டம் சில்லிட்டது.

அப்போது கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்து பாவலரை நோக்கி அருட்பா பாச இயல்பை விளக்கிக் கூறும் கண்ணாடி என்றீர்கள். அங்ஙனமாயின் அது பரத்தை விளக்கிக் காட்டும் நூலன்றோ? என்றார். அதற்குப் பாவலர், பாசத்தை விளக்கிக் காட்டுவதன் மூலம் பாசத்தின் நிலையாமையையும் பரத்தின் உண்மையினையும் பெற வைப்பதுவே ஞான நூற்களின் இயல்பு. அம்முறையில் வள்ளலாரும் பாச இயல்பை சில இடங்களில் விளக்கிக் காட்டுவதன் மூலம் உண்மையினை நிலைநாட்டுகிறார். இதனை தவறாகப் புரிந்து கொண்டு ஆபாசம் என நிலை நாட்ட முற்படுவது அறிவுடைமையன்று என்றார்.

கதிர்வேலுக்கு எதிர்வேல்

அந்நிலையில் அன்றையக் கூட்டம் முடிவுற்றது. மேலும் மக்கள் யாவரும் செய்குத் தம்பி பாவலர் அவர்களது அருட்ப சொற்பொழிவுகளை கேட்க விரும்பியதால் பல கூட்டங்கள் சென்னையில் நடைபெற்றன. அக்கூட்டங்களில் எல்லாம் வள்ளலார் கூற்றுக்கு எதிரிகள் கூறிவந்த எதிர்ப்பு உரைக்கு எல்லாம் செய்குதம்பி பாவலர் மறுப்புரை தந்தார். கதிர்வேலுக்கு எதிர்வேல் என செய்குதம்பிப் பாவலரை பாராட்டினார் அருட்பா குழுவினர்.

இறந்து ஆர் எழுவர்

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் வள்ளாலரின் அருட்பாவை ஆதரித்து இன்னொரு கூட்டத்தில் பேசுகிறார்.

அடிகளார், 'நாமாவளி' என்னும் தலைப்பில் எழுதியுள்ள பாடல்களுள் ஒன்றில், 'இறந்தார் எழுவர் என்று புறந்தாரை ஊது' எனப் பாடியுள்ளார். அருட்பா எதிர் தரப்பினர், இவ்வடிக்கு விளக்க உரையாக, 'பிள்ளையவர்கள் இறந்தார் எல்லாம் எழுவர்' என்று பாடியதால் பல விதவைப் பெண்கள் தம் கணவர் தமக்கு மீண்டும் கிடைப்பாரென இவர் பின் சென்று வறிதே மீண்டனர் எனக் காஞ்சியில் நடந்த கூட்ட

மறுப்புரையாவது, பிறந்தவர் யாவரும் இறப்பாரென்பது அனுபவ உண்மை. இதனையே வள்ளலார், இறந்து – ஆர் – எழுவர்? இறந்தவர் யார் தான் எழ முடியும்? எனக் கேட்கின்றார். மேலும், அடிகளார் இறந்தார் எழுவர் எனக்கூறியது சிறந்த தத்துவப் பொருளாகும். எழுவர் என்றது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரங்கள் நான்கும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள் மூன்றும் ஆகிய ஏழுமாம். இவ்வேழு அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கூறியது 'இழிப்பில் கூறிய திணை வழுவமைதி' யாகும். கரணம் நான்கும் மலம் மூன்றும் ஒடுங்கி ஆன்மபோதம் முற்படுதலையே 'இறந்தார் எழுவர்' எனக் குறிப்பிடுகின்றார்.

அன்றியும், இறையருளிலே திளைத்து இரண்டறக் கலந்தவர்களும் மரணமிலாப் பெருவாழ்வு சித்திக்கும் என்பது இந்திய ஞானிகள் கருத்து. வள்ளுவரும்,

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் என்றும்
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார் என்றும் கூறுகின்றார்.

இவர்களைப் பின்பற்றியே வள்ளலாரும் சாவாதிருக்க வழி கூறுகின்றார்.

திருமுறையில் 'ஞான சரியை' எனும் தலைப்பில் வள்ளலார் 28 பாடல்களைத் தந்துள்ளார். அதில் 25வது பாடல்

சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணி, மூப்பு, மரணம்
சேராமல் தவிர்ந்திடுங்கள் தெரிந்து வம்மின் இங்கே
பிறந்த பிறப்பு இதில்தானே நித்திய மெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே
என்று பாடுகிறார்.

உலகில் மிகச் சிறந்து விளங்கும் ஒளி நெறியாம் சன்மார்க்கம் ஒன்றுதான் பிணி, மூப்பு, இறப்புகளைச் சேராமல் தவிர்க்கும் என்ற உண்மையை அறிந்து கொண்டு இங்கே ஒளி நெறிக்கு வாருங்கள் என்று கூறினாரேயொழிய இறந்தவரை எழுப்பித் தருவேன் என்று வள்ளலார் கூறவில்லை என்றார் பாவலர்.

அவையில் எழுந்த ஆரவாமே மறுப்பாளர் கூற்றுப் பொருந்தாக் கூற்றென்பதை வலியுறுத்திற்று.

பாவலர் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தில் மருட்பா குழுவினரில் ஒருவர் இராமலிங்கர்,

நாதர் முடிமேல் இருக்கும் வெண்ணிலாவே - அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

என்று பாடுகின்றாரே! சமயக்குரவர்களும் பிற அடியார்களும் இறைவனடியில் சேர வேண்டுமென்று வேண்டியிருக்கிறார்களே அன்றி இறைவன் முடிமேல் இருக்க இடம் வேண்டுமென்று வேண்டியதில்லையே. இராமலிங்கர் இறைவன் முடிமேல் இருக்க இடம் வேண்டுமென்று கேட்பது அவரது ஆணவ முனைப்பையல்லவா காட்டுகிறது? என்று வினவினார்.

அதற்குப் பாவலர், நீங்கள் குறிப்பிட்டது அருட்பா ஆறாம் திருமுறையில் வெண்ணிலாவை முன்னிலைப்படுத்திப் பாடும் பாடலில் உள்ள இரண்டாவது கண்ணி. அக்கண்ணியில் அத்தொடர் நாதர் முடி மேல் என்றன்று. நாத முடி மேல் என்றுதான் அமைந்திருக்க வேண்டும்; நாதர் முடி என்பது நீங்கள் படித்த புத்தகத்திலுள்ள அச்சுப் பிழையாகவோ, நீங்கள் படித்த கோளாறாகவோ ஆயிருக்க வேண்டும். என்று கூறிவிட்டு அந்தப்பாடல் முழுவதையும் சொல்லியிருக்கக்கூடும் அந்தப் பாடல் இதோ; வள்ளலாரின் வெண்ணிலா பாடலையும், அதற்கு உரையையும் படிப்போர் நலனுக்காக இங்கு குறித்துள்ளேன்.

வெண்ணிலா

கண்ணிகள்

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே - ஒரு
தந்திரநீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே,

நாதமுடி மேலிருந்த வெண்ணிலாவே - அங்கே
நானும் வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

சச்சிதா னந்தக்கடலில் வெண்ணிலாவே – நானும்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே – நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே

தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே – நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலாவே

போதநடு வூடிருந்த வெண்ணிலாவே – மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே – அரு
ளாளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே

அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே – எங்கள்
அய்யர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே

வேதமுடி மேலிருந்து வெண்ணிலாவே – மல
வேதையுள வேதுசொல்லாய் வெண்ணிலாவே

குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே – அந்த
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலாவே – அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலாவே

வித்திலாம லேவிளைந்த வெண்ணிலாவே – நீதான்
விளைந்தவண்ண மேதுசொல்லாய் வெண்ணிலாவே

முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலாவே – அந்த
மூன்றுமொன்றாய் முடிந்ததென்ன வெண்ணிலாவே

நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலாவே – ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே

ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலாவே – என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலாவே

வாசிவாசி யென்றுரைத்தார் வெண்ணிலாவே – அந்த
வாசியென்னப் பேசுகண்டாய் வெண்ணிலாவே

ஐந்தலைப்பாம் பாட்டுகின்றர் வெண்ணிலாவே – அவர்
அம்பலத்தில் நின்றதென்ன வெண்ணிலாவே

ஓரெழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே – அது
ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலாவே

அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே – அது
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே

அந்தரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே – அவர்
ஆடும்வகை யெப்படியோ வெண்ணிலாவே

அணுவிலணு லாயிருந்தார் வெண்ணிலாவே – எங்கும்
ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே

அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே – ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே

அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே – என்னை
ஆட்டுகின்ற ரிம்பரத்தே வெண்ணிலாவே

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் (சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய ஆறாவது திருமுறை, சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு காஞ்சிபுரம் 1932, பக்கம் 441, 442)

வெண்ணிலாவை அழைப்பது போன்று தலைவியின் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. அப்பாடல் முழுவதற்குமான புலவர் அடியன் மணிவாசகனின் எளிய உரையை முதலில் தருகிறேன்.

வானுயரத்திலிருக்கும் வெண்ணிறமுள்ள நிலாவே! நீ, எனக்கொரு நன்மை செய்ய வேண்டும்; அதாவது, நான் என்னுயிரைப் பற்றியும் என்னைப் படைத்த கடவுளைப் பற்றியும் உலகப் பொருள்களைப் பற்றியும் தெரிந்துணர்ந்து இன்புற வேண்டும்.

இதற்கு நீ ஒரு சிறந்த நுட்ப அறிவை (ஆராவும் அறிவை) எனக்குச் சொல்லி உதவ வேண்டும்.

வெண்ணிலாவே! இறைவன் படைத்த ஓசை மண்டலமான நாத முகட்டின்மேல் நீ அமர்ந்திருக்கின்றாய். அங்கே என் உயிராகிய நானும் வந்து அமர்ந்து அந்தக்கடவுட் பேரொளியைக் கலந்து இன்புற வேண்டுகின்றேன்.

வெண்ணிலாவே! நீ கடவுளாகிய (இயற்கை உண்மை, இயற்கையறிவு, இயற்கையின்பம் என்னும்) "சச்சிதானந்தக்" கடலிலே விழுந்து தெரிகின்றாய்; உன்னைப் போல் நானும் அக்கடலில் ஆழமாக விழுந்து கலந்து இன்புற வேண்டும்; இது என் பிறவி ஆசை!

இறைவன் தலை முடிமேலிருக்கும் வெண்ணிலாவே! நீ இருக்கும் முழுமுதற் கடவுளான அருட்பேரொளி இடம், இருளும் ஒளியுமென வேறு காணமுடியாத ஒரே ஒளியாம் வெட்டவெளியாகும்; அங்கே நானும் (ஆன்ம உயிர்) இருக்கக் கருதி ஏங்கியே வாடுகின்றேன்.

வெண்ணிறமுள்ள நிலாவே! நீ சிவத்தை அடைந்ததாலே, கடவுளின் செந்திற ஒளிநிறையைப் பெற்றாய்; அதுபோல் நானும் செந்நிறச் சிவமாய் ஆகிட (கடவுள் நிலையடைந்து அம்மயமாதல் உண்மையைப்பெற) ஆசைப்பட்டேன்)

வெண்ணிலாவே! இறைவனாகிய அறிவுப் பேரொளியின் நடுவிலே நீ இருந்ததாலே தூய வெண்ணிறம் பெற்றாய்; நானும் அந்தத் தூய ஒளியைப் பெற, என் உயிரில்பற்றியுள்ள செருக்கென்னும் இருளற்று உண்மையொளியைப் பெற அவன் அருள் தர வேண்டுகின்றேன்.

வெண்ணிலாவே! கடவுளாகிய தலைவர் எல்லோருக்கும் (பண்படாதவருக்கு) தெரிய மாட்டார்; எனினும், இங்கே தெரியக் கூடிய சிலருக்கும் தெரியாமல் அந்த அருளாளரான கடவுள் எனக்காக அருள்தர வருவாரா? சொல்லுக, வெண்ணிலாவே!

வெண்ணிலாவே! நான் என் தலைவருக்கு மறைவாக (உள்ளூறுப்பாயிருக்கின்ற) உள்ளத்தால் பணி விடைகள் செய்ய விழைகின்றேன்; அப்பணியை ஏற்றுக்கொள்ள எங்கள் ஐயர் வருவாரோ? நீ அவரிடம் சொல்லுக!

அன்பனை இறைவன் அறிவான்; ஆதலால் அவனது பணிமறைவாக அமைவதே சிறப்பு.

வெண்ணிலாவே! நீ மறையின் முடித்த பொருளான மெய்யொளியில் (அருட்குருவைப் போல்) அமர்ந்திருக்கின்றாய். ஆதலால், எனது உயிரிலுள்ள இருட் செருக்கால் ஏற்படும் வேதனைகளை நீயே தீர்க்க வழிசொல்ல வேண்டும்.

வெண்ணிலாவே! மூலக் கனலிலுள்ள (அருள்சத்தியிருக்குமிடம்) குண்டலினிப்பாம்பின் ஆற்றலால் உண்டாகும் பாலமுதம், நடுநாடிவழியாகத் தலையிலுள்ள ஆன்மஉயிரான ஆயிரமிதழ்த் தாமரை மலருக்குச் செல்லவும் அங்கே அருளமுத ஒளி சுடரும்! அந்தப் பாலொளியிலே நீ நின்று இலங்கி ஒளிபரப்புவாய்.

அத்தகைய ஒளிபரப்பும் அமுதஒளிப் பாலையே என்னுயிரும் அடைய வேண்டுகின்றேன்.

வெண்ணிலாவே! தலைவரான கடவுளை முதலும் முடிவும் என்று சான்றோர் உரைத்தனரே! அந்த முதலே எப்படி முடிவாக அமையும்?

உலகப் படைப்புக்கெல்லாம் முன்னே, தானே தோன்றிய தலைவனாம் கடவுள், படைத்த பொருளுயிர்களையெல்லாம்

ஒடுக்கும் நிலையே முடிவு (அந்தம்) எனப்பட்டது என அறிய வேண்டும். தலைவனுக்கு முடிவு என்பது இல்லை.

வெண்ணிலாவே! இந்த உலக அண்டங்களும், பிண்டங்களான பொருள்களும் உயிர்களும் அடிப்படையான கருவித்து இல்லாமலே படைக்கப்பட்டன (விளைந்தன) என்று சொல்கின்றார்களே? அவை எப்படி விளைந்தன? அதை நீதான் எனக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

உலகம்யாவும் வித்து ஒன்றுமில்லாமல் படைக்கப்பட்டவையாகும். இதுதான் முழு முதற்கடவுளின் பேராற்றல். ஐந்தொழில்களையும் செய்ய அருளாற்றலைப் படைத்ததுபோல் உலகப் பொருள்களையும் உயிர்களையும் வித்தில்லாமலே படைக்க ‘மாயை’ என்னும் ஆற்றலை (சித்தியை) இறைவன் படைத்தான் என்னும் செய்தி உண்மையியலாகும்.

வெண்ணிலாவே! உயிர், உலகு, இறை என்னும் மூன்று பொருள்களும் ஒரே ஒரு முழு முதலாம் கடவுளில் அடங்கும் என்று ஒரு வகைக் கொள்கை யார் சொல்கின்றாரே? அந்த மூன்றும் ஒன்றாக முடிந்ததுதான் எவ்வாறு? நீதான் இதை எனக்கு விளக்க வேண்டும்.

இந்த மூன்று பொருளும் ஒன்றாய் ஆவது எப்படி என்றால், இறையால் படைக்கப்பட்ட மாயையில் உயிர்களும் உலகும் ஒடுங்க, மாயை அருளாற்றலாம் சத்தியில் ஒடுங்க, அருளாற்றல் இறையாம் கடவுளில் ஒடுங்கும் என்பதே முறையாகும்.

வெண்ணிலாவே! நான் என்னும் ஆன்ம உயிர் அது என்று சுட்டப்படும் கடவுளொளியாய் மாறி (இரண்டறக் கலந்த நிலையில் ‘தத்துவமசி’ ஆகி நிற்குமாறு, நீ எனக்கொரு மெய்ப்பொருள் சார்ந்த அறவுநெறியை (உள்ளொளி காணும் ஒருமை நெறியை)ச் சொல்லவேண்டும்.

வெண்ணிலாவே! நீ அறிவொளிமயமாய் உலகிற்கே அறிவமுதைத் தருகின்றாயே! இவ்வொளியுடைய நீ, என்னை, ‘நான் ஓர் உயிரொளியே; வெறும் உடலோ வேறு பொருளோ அன்று’ என்னும் இயற்கையுண்மையை உணருமாறு அறிவு கொளுத்து வாயாக!

வெண்ணிலாவே! உலகில் தவஞ்செய்வேரொல்லாம் 'வாசிவாசி' என்று அதன் அருமை தோன்றப் பெருமையாகச் சொன்னார்களே; அந்த 'வாசி' என்றாலென்ன? அதை எனக்கு விளக்கிச் சொல்ல மாட்டாயா? சொல்லுக! நான் ஆர்வத்துடன் கேட்கின்றேன்.

'வாசி' என்பது மூச்சுக்காற்று; உயிர்வளியினை உள்ளே இழுத்துக் கரிவளியை வெளியே விடுவதாகும்; இழுக்கும்போது மிகுதியாய் இழுத்து வெளிய விடும்போது குறைவாய் விடவேண்டும். இந்த அருமையான கணக்கைத் திருமூலர், "காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக் கூற்றை உதைக்கும் குறியது வாமே" என்றார். இப்படிக் காற்றைக் கணக்கறிந்து தவஞ்செய்பவர் செய்தால் எமனையும் வென்று இறவாத பெருவாழ்வு வாழமுடியும் என்பது அவரது கருத்து.

இந்த மூச்சு காற்று நிலையையே வள்ளற்பெருமான், "ஊது ஊது சங்கே!" என்று பாடினார். இதுவும் இங்கே உணரத்தக்கதாகும். மூக்கில் காற்றை இடப்பக்கம் இழுக்கும் பொழுது இடக்கலை (திங்கள் ஒளி) என்றும், வலப்பக்கம் இழுக்கும் போது வலக்கலை (கதிரவன் ஒளி) என்றும் பெயர் பெறும்.ஆக வாசிப் பயிற்சியால் உயிருக்குப் பேராற்றல் சேருமென்பது தவநூல் கருத்தாகும்.

வெண்ணிலாவே! தலைவரான கடவுள் மனித உயிரில் இருந்துகொண்டு,ஐந்துபொறிகளின்வழிபட்ட ஐந்துபுலனறவான ஐந்து பாம்புகளையும் அலைத்து ஆட்டுகின்றாரே! அவர் உள்ளமாகிய அம்பலத்தில் நின்று ஆடுவது ஏன்? படைத்தல் முதலிய ஐந்து தொழில்களையும் செய்வதற்காகவா?

வெண்ணிலாவே! ஓரெழுத்தாகிய ஓங்காரத்தில் 'சிவாய நம' (நமசிவாய) என்னும் ஐந்தெழுத்துக்களும் தோன்றின என்று (திருமூலர்) முதலானோர் சொன்னார்களே! அந்த ஓங்காரம் (ஓம்) ஊமையெழுத்து ஆவது எப்படி? சொல்! வெண்ணிலாவே!

ஓங்காரத்தை ஊமை எழுத்தென்று சொன்னவர் திருமூலர். ஓங்காரத்தை ஊமையென்றும் அதிலிருந்து பிறந்த ஆன்ம உயிரை ஆமையென்றும் உருவகம் செய்து கூறினார்.

ஆக, இச்சிறப்புக் கருதியே வள்ளற் பெருமான், 'ஊமையெழுத்து ஆவது என்ன?'என்று வினவினார்.

வெண்ணிலாவே! உயிர்த் தலைவரான கடவுள் ஆட வல்லாராக ஆடிக் கொண்டிருக்கின்றார். அவர் ஆடுகின்ற நோக்கமும் வண்ணமும் என்ன? எனக்கு விளக்குவாயாக.

உலகத்தையே பொன்னம் பலமாகக் கொண்டு, அதிலே எல்லாவுயிர்களும் பயன்பெறும் நோக்கில் அருளொளி எங்கணும் பரவ, படைத்தல் – காத்தல் – அழித்தல் – மறைத்தல் – அருளல் ஆகிய ஐந்து தொழில்களும் முறையே நடைபெறவே கடவுள் கூத்தனாகி ஆடலை நிகழ்த்துகின்றார். இதுவே ஆடற்கலையாகப் போற்றப்படுகின்றது.

வெண்ணிலாவே! தலைவரான கடவுள், ஆடுதற்கு ஒரு பற்றுக் கோடான ஆதரவு இடம் இல்லாமல், காணுதற்கரிய அருள் வெளியிலே உலகம் உய்யும் பொருட்டுக் – கூத்தை நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றார். அவர் இப்படி ஆதரவில்லாத வெளியிலே எப்படி ஆட முடிகின்றது? அவரது ஆடல் வகைதான் என்ன? சொல்லுக!

படைத்தல் முதலிய ஐந்து தொழில்களும் இயங்க ஆடல்புரிந்தாலும், ஆடலில் பல வகையும் கலையாகப் பேசப் படுகின்றன.

அவை சுந்தரக்கூத்து, அற்புதக்கூத்து, ஆனந்தக் கூத்து, பாண்டரங்கக் கூத்து, ஊழிக் கூத்து எனப்பலவாகும்.

வெண்ணிலாவே! என் தலைவரான கடவுள்; **கண்ணுக்குப் புலனாகாத நுட்பமுள்ள அணுவானவர்.** அவர் படைத்த ஐம்பூதங்களில் மண் முதலான ஒவ்வொரு பொருளுமே அணுக்கூட்டத்தால் ஆனவையாகும். அத்தன்மையுள்ள ஒவ்வோர் அணுவிலும் கலந்தே அணுவாகவே இருக்கின்றார்.

இத்துணை அணுவாய் இருப்பவர் எப்படி எங்கும் எப்பொருளிலும் கலந்திருக்கின்றார்? இது வியப்பாக இல்லையா? வெண்ணிலாவே!

மாயை மூன்றில், இயற்கை மாயையென்னும் அருளால் படைக்கப்படும் ஒவ்வொரு பொருளும் அணுவால் உருவானதால்,

அந்த அணுவின் இயக்கும் ஆற்றலாயிருக்கும் கடவுளான அணுவும் நுட்பமாகவே உள்ளது! இதை உளவாகவே அறிய முடியும்.

வெண்ணிலாவே! என் தலைவரான அருட்பெருஞ்சுடரான கடவுள், படைத்த பேரண்டங்களிலும் சிற்றண்டங்களிலும் இருந்து அருளாட்சி செய்து அறியாமல் காத்துவருகின்றார். அவரது ஆடல் வல்லமையை என்ன சொல்லி வியப்பேன்!

வெண்ணிலாவே! அழகிய அருள்வெளியில் ஆடுகின்ற தலைவர், இங்கே மண்ணுலகிலும் வந்து, உயிர்களைக் கடைத் தேறச் செய்யும் பொருட்டே என்னையும் (நல்விளை – தீவினை கொடுத்து) இன்ப– துன்ப நுகர்வுகளைத் தந்து ஆட்டிப்படைக்கின்றார். தலைவரின் அருளாட்சி தான் என்னே! செய்குதம்பிப் பாவலர் அந்தக் கூட்டத்தில் உரையாற்றுகிறார். இதோ, அவரது உரையின் சாரம்;

நாத முடிமேல் என்பது சைவ சித்தாந்தம் கூறும் முப்பத்தி ஆறு தத்துவங்களில் நாத தத்துவத்தின் மேல் நிலையைக் குறிக்கின்றது. நாத தத்துவம் முடிந்த மேல் நிலை பரவெளி எனப்படும். அதனைச் சிவானந்தப் பெருவெளி என்றும், சச்சிதானந்தக் கடல் என்றும் சிவபெருமான் திருவடி என்றும் கூறுவர். தாம் அப்பெருநிலையை அடைய வேண்டுமென்பதையே நாத முடிமேல் அங்கே நானும் வர வேண்டுகின்றேன் என்று பாடுகின்றார். அக்கண்ணியின் முன்பின் கண்ணிகள்

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே– ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே

சச்சிதானந் தக்கடலில் வெண்ணிலாவே – நானும்
தாழ்ந்து விழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே

என்பவை. இவைகளை நோக்கும்போது நாதமுடிவிலுள்ள பரஞான வெளியினையே அடிகள் குறிப்பிடுகின்றாரென்பது பெறப்படுகின்றதல்லவா? மேலும், மூன்றாம் கண்ணியில் தாழ்ந்து விழ வேண்டுகின்றேன் என வேண்டுவது அடிகளாரின் பணிவைக் காட்டுகின்றதன்றோ! என்றார் செய்குதம்பிப் பாவலர்.

ஆறாம் திருமுறையில் திருவடிப் பெருமையில் 15வது பாடலில் வள்ளலார் பாடுகிறார்

நாதமட்டும் சென்றனம்மேல் செல்லவழி அறியேம்
நவின்றபர விந்துமட்டும் நாடினம்மேல் அறியேம்
ஏதமிலாப் பரநாத எல்லைமட்டும் சென்றேம்
இனிச்செல்ல வழிகாணேம் இலங்குபெரு வெளிக்கே

தோழி! பெரியோர்களால் சொல்லப்படுகின்ற விந்து தத்துவம் அதற்கு மேலுள்ள நாத தத்துவம் அதன் மேலுள்ள பரநாத தத்துவம் ஆகியவை வரை சென்று கண்டோம்; அவற்றிற்கு மேலே உள்ள தத்துவங்களில் செல்ல மாட்டாமல் அவை விளங்குகின்ற பெருவெளிக்குச் செல்லத் திருவருள் துணை கொண்டு முயன்றனம்; முயன்றும் எம்மால் இயலவில்லை அம்மம்ம! என்று கூறுவதும் அதனை வலியுறுத்துகின்றது. எனவே, அடிகளால் முன்னோர் மரபையொட்டிப் பணிந்தே பாடுகின்றார். இறைவன் திருவடி நிழலையே அடைய விரும்புகிறாரேயன்றி ஆணவத்தால் தலை தடுமாறவில்லை என்றார். (வித்துவான் சி.குமரேச பிள்ளை, முதற்கூறிய நூல் பக்கம் 41)

செய்குதம்பிப் பாவலர் அருட்பா மருட்பா வாதத்தில் அவர் ஆற்றிய பணிசாலச் சிறந்த பணியாகும்.

செய்குதம்பிப் பாவலர் இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா பாடல்களுக்கு எதிர் உரையாளர் கூறிய கூற்றுகளுக்கு எல்லாம் எதிர்ப்புரை வழங்கிதோடு எதிரிகள் விடும் சொல்லம்புகளையே மடக்கி அவர்கள் பால் செலுத்தி அவர்களை விழச் செய்தார்; வெற்றி கண்டார்.

நிறைவாக

தமிழ்ப் பேரகராதி, கூர்ம மகாபுராண விருத்தியுரை, சிவராத்திரி புராண விருத்தியுரை, பட்டினத்துப் பிள்ளையார் புராண உரை, திருவருணைக் கலம்பக விருத்தியுரை, சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், ஏதாதசி புராணம், சைவபூஷண சந்திரிகை கதிர்காமக்கலம்பகம், கதிர்காமத்திருப்புகழ், கந்தபுராணசாரம், கந்தர்நவமணிமாலை, சுப்பிரமணிய கட்டகம், சுப்பிரமணிய பராக்கிரமம், புதுச்சந்நிதிக் கந்தர் பிள்ளைத்தமிழ், சிவயோக தீபிகை, சித்தாந்த சாதனம், குமாரதரிசனம், தகராலய ரகசிய விருத்தியுரை, வைணவ வாயாப்பு, துவிதமதகண்டன மறுப்பு, தமிழ்வேதநிந்தை மறுப்பு, இரு சமய விளக்க சூறாவளி இப்படி பல நூல்களை எழுதியவர் நா.கதிரைவேல் பிள்ளை.

இவர் 1871இல் பிறந்து 1907இல் உயிர்நீத்தார் வயது 36 என்றும் 1874இல் பிறந்து 1907இல் உயிர்நீத்தார் வயது 33 என்றும் இரு கருத்துக்கள் உள்ளது.

முல்லை அமுதம் 'இலக்கியப் பூக்கள்' எனும் இரண்டு பாகங்களைக் கொண்ட இலங்கை எழுத்தாளர்கள் பற்றிய நூலினை 916 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்கள். அந்த நூலில் சங்காலத்து ஈழத்துப்பூதன் தேவனார் முதல் துவங்குகிறார்கள்.

11.6.1838இல் பிறந்து 5.2.1898 இல் மறைந்த எம்.சி. சித்திலெவ்வை மரைக்காயர் பற்றி (ஈழத்தில் முதல் தமிழ் நாவல் ஆசன் பேயுடைய கதை தந்தவர்) எந்தக் குறிப்பும் இல்லை. இது ஒரு துளி தான். இலக்கியப் பூக்கள் நூலில் யானறிந்த

யாழ்ப்பாணத்து அறிஞர் **சதாவதானம்** நா.கதிரைவேற் பிள்ளை எனும் சு.சா.அரவிந்தன் கட்டுரை உள்ளது. பக்கம் (459–462) அது போலவே 'செம்மொழி சிறப்புகள்' எனும் ஆப்ராமீடியா நெட்வொர்க்கிங் வெளியிட்ட நூலில் (2010) பக்கம் 62ல் **சதாவதானி** நா.கதிரைவேற் பிள்ளை என்று தவறான தகவல் தரப்பட்டுள்ளது.

நா.கதிரைவேற் பிள்ளை சதாவதானம் செய்ததாக சொல்லி அதனைச் செய்திடவில்லை என்பதனை முன்னரே விரிவாகச் சொல்லியுள்ளேன். 18.4.2010 தமிழ் மணி (தினமணியில்) மணிவாசகபிரியா **அஷ்டவதானி நா.கதிரைவேற் பிள்ளை** என்று தான் கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் **அஷ்டவதானி நா.கதிரைவேற் பிள்ளை** என்று அழைக்கப்படுபவரை, சதாவதானம் செய்யாத அவரை, அதாவது நா.கதிரைவேற் பிள்ளை சதாவதானம் செய்தது போல வரலாற்றைத் திரித்து எழுதாதீர்கள். அவர் சதாவதானம் செய்தது இல்லை என்பது தெளிவு.

வள்ளலார் பாடல்களை மருட்பா என்று விமர்சித்து முழங்கிய நா.கதிரைவேல் பிள்ளை 1907 மார்ச் மாதத்தில் நீலகிரி குன்னூரில் பெண்ணோய் காரணமாக மூத்திரப் பிண்ட தாபன ரோகம் (Acute Nephritis) நோயாலும், சுவாசப்பை ரோகத்தாலும் (Double pneumonia) பீடிக்கப்பட்டு, 26.3.1907இல் நா.கதிரை வேல் பிள்ளை போலியாக சதாவதானம் என்ற பெயரால் சென்னை லட்சுமி விலாச நாடக சாலையில் நடத்தியது 24.2.1907. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் சென்னை விக்டோரியா அரங்கில் நிஜமான உண்மையான சத்தியமான சதாவதானம் நடத்தியது 10.3.1907. நா.கதிரைவேல் பிள்ளை மறைந்தது 26.3.1907. செய்குதம்பிப் பாவலர் மறைந்தது 13.2.1950 இவைகளை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நா.கதிரைவேற் பிள்ளைக்கு எதிரைவேல் பிள்ளை என்பது வரலாற்று உண்மையன்றோ!

இராமலிங்க அடிகளார் பிரிட்டிஷ் ஆட்சியின்போது வாழ்ந்தவர்கள் உள்ளத்துணிவு நிரம்பப் பெற்றவர்கள்.

எனவே தான் அன்றைய ஆட்சியாளர்களை எதிர்த்து ஆறாம் திருமுறையில் சன்மார்க்க உலகின் ஒருமை நிலை என்ற தலைப்பில் பாடுகிறார்கள்.

கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து.

இரக்கமில்லாதவருடைய ஆட்சி விரைந்து கெடுவதாக; அருள் நிறைந்த நன்னெறியாளர்கள் ஆள்வார்களாக; அருள் ஞானம் விரும்பும் நன்மக்கள் நினைத்த நலம் பலவும் பெறுவார்களாக; அருளறமே நிறைந்து எல்லோரும் மனமொத்து வாழ்வார்களாக.

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்

காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரப் பற்றுள்ள நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்ட செய்குதம்பிப் பாவலர் வள்ளலார் அணியில் அருட்பா என்று முழங்கினார்.

இராமலிங்க அடிகளாரின் அருட்பாவுக்கு மாபெரும் எதிர்ப்பு முளைவிட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் என்பாரின் மாணாக்கரும் தலைசிறந்த தமிழறிஞருமான கதிர்வேல் பிள்ளை என்பார் அருட்பாவை மருட்பா எனக் கூறி எதிர்த்த கூட்டத்தினரின் தளபதியாக நின்று சண்டமாருதம் செய்தார். "அருட்பா சைவ நூலேயாயினும் அது தமிழ் நூல்; தன்னேரிலா ஞானப் பூங்கா, எனவே அதன் பெருமை காக்கப் பட்டாக வேண்டும்; கண்டனங்களிலிருந்து அது மீட்கப்பட்டாக வேண்டும்." என்ற தமிழுணர்வு பிடர் பிடித்து உந்த முஸ்லிமான செய்குதம்பிப் பாவலர் அருட்பாக் களம் புகுந்தார். அடுக்கடுக்கான ஆதாரங்கள்; மிகமிகத் தெளிவான வாதங்கள் பாவலர் அவர்கள் வாயிலிருந்து கடல்மடை திறந்தாற் போன்று வெளிப் போந்தன. அருட்பா, அருட்பாவே என நிறுவப்பட்டது. யானை மீதமர்த்தி காஞ்சீபுரம் வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பெரிய கோயிலில் பூரண

கும்ப மரியாதையுடன் பாவலர் அவர்கள் வரவேற்கப்பட்டார். தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

அருட்பாக் கட்சியில் பாவலர் அவர்களோடு தொழுவூர் வேலாயுத முதலியார், கோ.வடிவேலுச் செட்டியார், மறைமலை அடிகள் ஆகியோரும் மருட்பா கட்சியில் நா.கதிர்வேற் பிள்ளை அவர்களோடு அவரது மாணாக்கரான திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் மற்றும் சிலரும் சொற்போரில் ஈடுபட்டனர். அருட்பா ஆதரவாளர்கள் பாவலர் அவர்களை கதிர்வேல் பிள்ளைக்கு எதிர்வேல் பிள்ளை எனக் கூறி மதித்தனர்.

அருட்பாப் போரில் பாவலர் அவர்கள் ஆற்றிய உரைகள் அன்றைய புலவர் பெருமக்களை அவர்பால் மரியாதை கொள்ளச் செய்தன. அவருடனேயே காலமும் அமர்ந்து சொற்சுவை புண்டு சகித்திருந்த புலவர்களின் எண்ணிக்கை நாளும் பெருகியது.

(உலகியல் வாழ்வில் சாதி, மதம் என்னும் குறுகிய இயல்பை ஒழித்த வாய்மைக் கடவுளே) என்று வள்ளலார் ஆறாம் திருமுறையில் பாடுகிறார்.

ஆதி அந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஓதிஎந்த வகையாலும் உணர்ந்துகொளற் கரிதாய்
உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே
ஊதியம்தந்து எனையாட்கொண்டு உள்ளிடத்தும் புறத்தும்
ஓவாமல் விளக்குகின்ற உடையவனே இந்தச்
சாதிஇந்த மதமெனும்வாய்ச் சழக்கையெலாம் தவிர்த்த
சத்தியனே! உண்கின்றேன் சத்தியத்தெள்ளமுதே.

காணும் உலகத்தில் காணமுடியாத அருமையில், முதலும் முடிவும் தெரியாத நிலையிலுள்ள அருமையான அழகிய பேரொளி வடிவமான கடவுளே!

உன்னை நான் அம்மையாகவும் என் அப்பனாகவும் தலைவனாகவும் அரசனாகவும் கண்டு போற்றி வணங்குகின்றேன்.

எத்தகைய வல்லவரும் எந்த நூல் அளவைகளாலும், ஓதிக் கற்ற அறிவாலும் உணர்ந்து கொள்ள இயலாத அருமையுடைய நிலையில், நீ எக்காலமும் ஒரே இயற்கை ஆற்றலாய் நிலைத்துள்ள மெய்ப்பொருளாய் இருக்கின்றாய். மேலும், எனக்கு வேண்டிய உயிருக்கு ஊதியமான அருளொளியைத் தந்து என்னை அடிமைகொண்டதோடு, என் உள்ளும் புறமும் எப்போதும் அருளுணர்வுதந்து விளங்குகின்றாய்.

என்னை உடையவனாகிய கடவுளே! இந்த உலகில் மக்களிடையே காணும் அறமற்ற போக்கில் பேசப்படும் குறுகிய சாதி எனப்படும் உணர்வையும் கீழ்மை தருபவை என்று ஒழித்துவிட்ட வாய்மை வடிவான தெய்வமே! நீ அடியனுக்களித்த வாய்மை யொளியென்னும் இன்ப அமுதினை எப்போதும் உண்டு அழியாமல் வாழ்கின்றேன் என்றுரைத்த வள்ளலாரின் புகழ் நாடெங்கும் பரவிட செய்குதம்பிப் பாவலரின் பங்களிப்பும் பெரிதும் உண்டு.

பண்டிட் மு.அப்துல் மஜீது

அருந்தமிழ் இலக்கிய இருங்கடல் என்னும் கட்டுரை தந்தவர் பண்டிட் மு.அப்துல் மஜீது. அதனை சதாவதானி செய்குதம்பிப் பாவலர் எனும் கே.பி. செய்குதம்பி பதிப்பித்த நூலில் பக்கம் 94–96 வரை காணலாம். அதில் பக்கம் 94–95 இல் வரும் செய்தி இதோ;

பாவலர் வேளா வேளைகளில் மதுரை மூதூர் வந்து போவார். சில வேளைகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் வந்து இங்குள்ள புலவர் பெருமக்களிடம் உரையாடி விட்டுப் போவார். மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் சேதுபதி வழித் தோன்றல் பொ.பாண்டித் துரைத் தேவருக்கும் பாவலருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

மதுரைத் தமிழ் சங்கத்திலே சோழவந்தான் நாவலர் அரசன் சண்முகனார், நாவலர் சைவ நூல் பரிசோதகர் சுப்பிரமணியர், இலக்கணப் பேராசிரியர் திரு.நாராயண அய்யங்கார், மதுரைத்

தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் பொ.பாண்டித்துரை ஆகியவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாரா வண்ணமாய் செய்குதம்பிப் பாவலரும் இங்கு வந்துவிட்டார்.

செய்குதம்பிப் பாவலருடைய கலைத் திறனும் அவதானம் புரியும் ஆற்றலும் அவர்களுக்கு நன்கு விளங்கி இருந்தும் அன்று பாவலரிடம் வாய்விட்டுப் பார்த்து பாவின்பம் துய்க்கலாமென்று எண்ணினார் போலும், நாவலர் அரசன் சண்முகனார்,

அவர் இங்குப் பாவலரைக் கண்டதும்

"வருக, வருக" என்று வரவேற்று மகிழ்ந்தவர் சற்று நேரம் சென்றதும்,

இராமலிங்கர் அருட்பாவிலே

"உங்களுக்கு இராமலிங்கர் அருட்பாவிலே எத்தனை பாடல் நினைவிலிருக்கும்?" என்று கேட்டார். அதற்கு பாவலர்

"ஓரளவு நினைவிலிருக்கும்" என்று பதிலிறுத்தார்.

பாவலரை சோதிக்க வேண்டுமென்றோ என்னவோ

"இராமலிங்கர் மகாதேவ மாலையில் 76-வது பாடலைச் சொல்வீர்களா?" என்று கேட்டார் சண்முகனார்.

பாவலர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழந்திருந்து விட்டு

உய்குவித்து மெய்யடியார் தம்மையெல்லாம்
உண்மை நிலை பெற அருளும் உடையாய்! இங்கே
மை குவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்துகின்றேன் அல்லால், உன்மலர்த்தாள் எண்ணிக்
கைகுவித்துக் கண்களில் நீர் பொழிந்து நானோ
கணமேனும் கருதி நினைக் கலந்தது உண்டோ?
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கிலாயோ?
திருவுளத்தை அறியேன் என் செய்குவேனே

உனது மலர் போன்ற திருவடியைக் கண்ணீரிலும் கருத்திலும் கருதிக் கைகூப்பி வணங்கி கண்ணீர் சிந்தி, நான் ஒரு கணப் பொழுதும் நினைந்து உன்னைக் கலந்து இனித்ததும் உண்டோ? இல்லையே! இனி, என்னை அப்படிக் கலக்குமாறு செய்து கொள்வாயோ? கொள்ளமாட்டாயோ? உன் திருவுள்ளத்தை நான் அறிய முடியாதே! என் செய்குவேன் இறைவா! என்றார்.

பாவலரின் மனவுணர்வைக் கண்டு சண்முகனார் ஆச்சரியத்தில் ஆழ்கிறபோது இலக்கணப் பேராசிரியர் திரு.நாராயண அய்யங்கார் அந்தப் பாடலிலே ‘கு’ எப்படி வந்தது என்று பாவலரிடம் கேட்டார்.

அதற்கு ‘கு’ சாரியை பெற்று வந்தது என்று பதிலிறுத்தார் பாவலர்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் ஒப்பற்ற பாவலர் என்ற கட்டுரையில் எழுதுகிறார்.

இராமலிங்க சுவாமிகள் புனைந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளைக் கொண்ட “திருவருட்பா” என்னும் கவிதைத் தொகுப்பான ஆறு திருமுறைகளையும் நன்கு பயின்று, நெஞ்சில் வைத்துப் போற்றினார் பாவலர் செய்கு தம்பி.

இராமலிங்க சுவாமிகளின் “எம்மதமும் சம்மதம்“ என்னும் கோஷம் பாவலர் பெருமானைக் கவர்ந்தது. சமய ஒருமைப்பாட்டை விரும்பாத வைதீக சைவப் புலர்கள் அருட்பாவுக்கு எதிர்ப்புக் காட்டி ஓர் இயக்கத்தையே தோற்றுவித்தனர்.

அவர்களுடைய எதிர்ப்புக்கு எதிர்ப்புகாட்ட சமய சமரச உணர்வுடைய புலவர் சிலர் திரண்டனர். அவர்களிலே இஸ்லாமியப் புலவரான செய்கு தம்பிப் பாவலர் முக்கியமானவர் ஆவார்.

அக்காலத்தில் பாவலர் சென்னை நகரத்தில் தங்கி வாழ்ந்தாராதரலால்,நகரத்தின் பல பகுதிகளில் திருவருட்பாவுக்கு ஆதரவாக நடந்த பிரச்சாரக் கூட்டங்களிலே பங்கு கொண்டு பேசினார்.

சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடைய மறைமலையடிகளாரும் இஸ்லாத்தில் தோய்ந்த பற்றுடைய செய்குதம்பிப் பாவலரும் "இரட்டையர்" என்று சொல்லத்தக்க வகையிலே தோளோடு தோள் சேர்ந்து இராமலிங்க சுவாமிகளின் அருமை பெருமைகளை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறினர் என்பர் ம.பொ.சி.

வள்ளலாரின் அருட்பாவை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும் பணியில் வேதாந்த கேசரி கோ.வடிவேலு செட்டியார், மறைமலையடிகள், அட்டாவதானம் பூவைகலியாண சுந்தர முதலியார், நாஞ்சில் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் ஆகியோர் முன்னிலையில் நின்றனர் என்றும் மா.பொ.சி. தனது வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு நூலில் செய்குதம்பிப் பாவலரைப் பாராட்டியுள்ளார். (சென்னை இன்ப நிலையம் 1963 இல் வெளியிட்ட 544 பக்கங்களைக் கொண்ட நூலில் 473வது பக்கத்தில் இதனைக் காணலாம்)

அந்த நூலில் பக்கம் 480ல் செய்கு தம்பிப் பாவலர் அருட்பாக் கட்சியில் சேர்ந்து வள்ளலாரின் புகழ் பாடினார்.

எண்ணற்ற மேடைகள் ஏறி நா.கதிரைவேல் பிள்ளையின் வைதீகவாதங்களை மறுத்துப்பேசினார். அதனால் கதிர்வேலுக்கு எதிர்வேலர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இஸ்லாமியர் ஒருவர் அருட்பாவின் பெருமை பேசியது வள்ளலாரின் சர்வ சமய சமரசக் கொள்கைக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும் என்று ம.பொ.சி. பாராட்டியுள்ளார்.

இஸ்லாமியராகிய பாவலர் சைவப் பேரறிஞர்களிடையே புகுந்து, அவர்களுள் ஒரு சாரார் இராமலிங்கர் பாடல்கள் மருட்பா எனக் கூறிய கூற்றை மறுத்து அதனை அருட்பா என நிலை நாட்டிய செயல் பாவலரின் தமிழ்ப் புலமைக்கும் சைவ சமய ஞானத்திற்கும் அளவு கோலாக இலங்குகின்றது என்று 6.6.1979இல் பாவலர் வாழ்ந்த இடலாக்குடி சந்தித் தெருவில் நடைபெற்ற அரசு விழாவில் அப்போதைய அமைச்சர் இராஜா முகம்மது பாராட்டுரை தந்தார். (சி.குமரேசன், குமரி மாவட்டப் புலவர்கள் தொகுதி 1, சுசீந்திரம், 1987 பக்கம் 44)

திருஅருட்பா ஆறு திருமுறைகள் ஆறு பகுதிகள், 399 பதிகங்கள், 5818 பாடல்கள் அருட்ஜோதி அகவல் ஒரு மலை (1596 அடிகள் ஒரே இரவில் எழுதியது) அதன் ஒவ்வொரு அடியும் அதன் படிகள் ஆகும். இறைவனை முன்னிறுத்தி

5818 பாடல்களைப் பாடிய ஒரே புலவர் ஒரே துறவி ஒரே ஞானி, வள்ளலார் என்பார் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் (வள்ளலாரும் அருட்பாவும் சென்னை, 1988 பக் 29) அத்தகைய சிறப்பிற்குரிய வள்ளலார் பாடல்களை இரு பிரிவாக பிரிந்து நின்று அருட்பா மருட்பா போர் நடத்தினர் அன்றைய தமிழகத்தில் பல ஊர்களிலும், பல மேடைகளிலும் செய்கு தம்பிப் பாவலர் அருட்பாவைப் புகழ்ந்து தக்க காரணங்கள் காட்டிச் சொற்பொழிவு செய்தனர். மக்கள் செய்குதம்பிப் பாவலரின் நினைவாற்றலையும், பேச்சாற்றலையும் புகழ்ந்து பாராட்டினர் என்பர் புலவர் சொ.முருகேச முதலியார் (குமரி நாட்டு புலவர்கள் சென்னை, 1975, பக்கம் 25)

நான் உரைக்கும் வார்த்தையன்று

"நான் உரைக்கும் வார்த்தை எல்லாம்
நாயகன் சொல் வார்த்தையன்றி
நான் உரைக்கும் வார்த்தையன்று"

என்று வள்ளலார் இறைவன் அருளால் திருவருட்பாவை எழுதியதாக அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறார் வள்ளலாரின் திருஅருட்பா குறித்து,

அருட்பா – மருட்பா சொற்போர் முற்றிவரும் முறையைக் கண்டும் இதழ்கள் சில இகழ் பொருட்களைத் தாங்கி வரும் முறையினைக் கண்டு பாவலர் மனம் வெதும்பினார். எம்மதத்தினரும் பாடி இன்பம் துய்க்கத் தகுந்த பக்திச் சுவை ததும்பும் இன்னிசைப் பாமாலை இவ்வாறு இகழப்படுவதா என்று உள்ளங் கொதித்தார்.

தாமும் சொற்போரில் தாவிக் குதித்தார். அங்கங்கே கூட்டங்கள் கூட்டினார். சொற்பொழிவாற்றினார். மருட்பாக்காரர் கூட்டம் நடத்தின இடத்திலேயே மறுநாள் அதற்கு மறுப்புரைப் போர் கூட்டமும் நடக்கும், அசைக்க முடியாத மறுப்புகள், ஆணித்தரமான பேச்சுக்கள் கண்டவரெல்லாம் பெரு வியப்புக்

கொண்டனர். செய்குதம்பிப் பாவலர் ஓர் இஸ்லாமியர். இந்து மதத்துறையில் இறங்கி நீச்சும் நிலையுங் கண்டு நின்று, அதற்கு ஊறு செய்யும் கோடாரிக் காம்புகளை கொட்ட மடக்கி வெட்டி வீழ்த்தும் திறம் என்னே! என்னே! என்று பேசினார். மகிழ்ந்து போற்றினர். அறிஞர்கள் கூடி அன்று கொடுத்த அடைமொழி தான் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்பர் வித்வான் செ.சதாசிவம்.

காஞ்சிபுரத்தில் இராமலிங்க சுவாமிகள் பாடலாபாச தருப்பணம் மருட்பா மறுப்பு என்ற புத்தகம் வெளியிடும் விழா நடந்தது. அடுத்த நாள் அதே இடத்தில் அதே மேடையில் மேடையிட்டுச் செய்குதம்பிப் பாவலர் பேசினார். பேச்சின் விவரம் முன்னரே தரப்பட்டுள்ளது. இதற்காகத் தான் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டம் தரப்பட்டது. அன்று சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் பேசியவற்றை இராமலிங்கப் பிள்ளைப் பாடல் ஆபாச தர்ப்பண கண்ட நியாய வச்சிர குடாரம் எனும் நூலாக ம.தி.பானுகவி அவர்களால் வெளியிடப்பட்டது என்பர் முனைவர் பா. இறையரசன் *(செம்மொழிச் செம்மல்கள், முதற்பாகம், சென்னை, 2009, பக் 17)*

காஞ்சிபுரத்தில் செய்கு தம்பிப் பாவலரை யானை மீது அமர்த்தி நகர்வலம் வரப்பெற்று காஞ்சி கோவிலில் பூரண கும்ப மரியாதையும் செய்யப் பெற்றார். *(செய்கு தம்பிப் பாவலர் நினைவு மலர், 1961, பக்கம் 19)*

அருட்பா கட்சியில் வெற்றிபெற்ற செய்கு தம்பிப் பாவலர் எங்கு சென்றாலும் மக்கள் குதூகுலத்துடன் வரவேற்று மரியாதை செய்தார்கள். எதிர்ப்படும் அன்பர்கள் செய்யும் வணக்கங்களுக்குப் பிரதி மரியாதை செய்ய செய்கு தம்பிப் பாவலரவர்கள் இரு கரங்களையும் தூக்கிக் குவித்துக் கொண்டே போக வேண்டியிருந்தது என்பர் நாரண துரைக்கண்ணன் *(பிரசண்ட விகடன் ஆசிரியர் சென்னை, முற்கூறிய மலர் பக்கம் 71)*

திருவருட்பா முதல் திருமுறையில் இறைவன் ஒருவனே என்று வள்ளலார் பாடுவார் இதோ அந்தப் பாடல்,

பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே! எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே! அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே! பூந்தடமே! ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே! எல்லாம்
செய்யவல்ல கடவுளே! தேவ தேவே.

(அன்பர்க்கு நிழலாகவும் நீராகவும் வாழ்வாகவும் இறைவன் இருக்கின்றான்)

தெய்வங்களுக்கெல்லாம் தலைமையான தெய்வமே! உலகில் எல்லாச் செயல்களையும் இயக்கங்களையும் செய்ய வல்லவன் நீ ஒருவனாகிய கடவுளே! கொள்கையால் பொங்கம் பல்வேறுபட்ட சமயமென்னும் ஆறுகளையெல்லாம் புகுந்து கலந்து அடிபட்டு ஒன்றாகி நிறைந்திடவே, பொங்கி அலையோங்கும் கங்குகரை காணமுடியாத கடலாய் இருப்பவன் நீயே! எவ்விடத்தும் எப்பொருளிலும் கண்ணாகவும் கண்காணியாகவும் இருந்து காக்கும் வாழ்வாய்த் தெரிபவனும் நீயே; இரக்கங்கொண்ட அன்பர்கள் நிலைத்திருக்க குளிர் நிழலைப் பரப்பி, மயக்கத்தையும் களைப்பையும் தணிக்கின்ற தழைக்க மரமாகவும் நீயே இருக்கின்றாய்; கண்ணிற்கு இன்பம் தரும் தாமரை பூத்த பொய்கையாகவும் பொலிகின்றாய்; ஒளியறிவென்னும் சிவந்த அல்லி மலர வருகின்ற நிறை நிலாவென்னும் அருளமுதமாகவும் திகழ்கின்றாய்.

இராமலிங்கரின் சமயப் பற்றில் மனம் லயித்தவர் பாவலர். எனவே தான்

இராமலிங்க அடிகளின் திருவருட்பா பாடல்களுக்கு அப்பெயர் பொருந்தாது என்றும், இராமலிங்க அடிகளின் பாடல்கள் மருட்பாக்கள் என்றும் சிலர் கூறி வம்பிழுத்துத் திரிந்தனர். செய்கு தம்பிப் பாவலர் தாம் வேறொரு சமயத்தவர் என்பதையும் மறந்து அந்த சொற்போரில் இறங்கி இராமலிங்க

அடிகளின் பாடல்களை அருட்பா என்றால் எவ்வாற்றானும் பொருந்துமென்று பல சொற்பொழிவுகள் செய்தார். இதனால் அருட்பாக் கட்சியினருக்கு நன்மைகள் பல உண்டாயின என்பர் சு.அ.இராமசாமிப் புலவர். (தமிழ்ப் புலவர் வரிசை, ஏழாம் புத்தகம், சென்னை, 1955, பக்கம் 122)

இரு நூற்றாண்டுகளும் 50 தமிழறிஞர்களும் என்ற நூலில் இரா.தமிழ்ப் பிரியன் சதாவதானியார் செய்குதம்பிப் பாவலர் என்ற தலைப்பில் பக்கம் 62இல் கூறுவார்.

செய்கு தம்பிப் பாவலருக்கு செம்பாகம் பங்குண்டு

செந்தமிழ்ப் புலவர் செய்கு தம்பி ஓர் இஸ்லாமியராக இருந்தாலும் சமரச சன்மார்க்கம் கொண்டவராக விளங்கினார். இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் அருட்பாவே மருட்பா அன்று என நிலைநாட்டியதில் செய்கு தம்பிப் பாவலருக்கு செம்பாகம் பங்குண்டு. எத்துணைப் புலமை பெற்றிருந்தால் இப்புலமைப் போரில் பாவலர் வென்றிருப்பார் என்பதைத் தமிழறிஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பார்.

செயல்முறைச் சிந்தனையாளர்

செய்கு தம்பிப் பாவலர் பெயர் திருவருள் பிரகாச வள்ளலார் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையது. இத்தொடர்பை நன்குணர அவர் சமய மதம் கடந்த தமிழ் உணர்வினர் என்பதே போதும். ‘தமிழ் ஒளியைச் சமயத்தில் சாய்க்காமை வேண்டும்‘ என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். இதற்கு இலக்கியமாக சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் விளங்கி நேர்ந்ததை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. அருள்பா மருள்பா போராட்டத்தில் முன்னணி வீரராக பாவலர் விளங்கி நின்று வென்றவர் என்பது திருவருள் பிரகாச வள்ளல் பெருமான் அன்பர்கள் அனைவரும் உணர்ந்து இன்புறுகின்றனர். பாவலர் திறமைக்கும் இது சிறந்த ஊன்று கோலாகியது. ‘அருள் அலாது அணுவும் அசைந்திடாது’ என்பர் வள்ளலார். Even atom does not move with out grace) செய்குதம்பிப் பாவலர் செயல்முறைச் சிந்தனையாளர் என்பதை அவர் வரலாறு மட்டுமா, அவர் பெயரும் பிரகடனம் செய்கிறது. ஒருவர் சிறந்த தமிழ்ப் புலவர் என்றால் அவர் செயல் வீரராகவும் விளங்குவார் என்பதற்கு

நம் பாவலர் செயல் திறமையும் குறிப்பிடத்தக்கதாகும். என்று போற்றுவார் அருட்திரு டாக்டர் நா.மகாலிங்கம்.

மறைமலையடிகளைப் போலவே அருட்பா மருட்பாப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செலுத்தியவர் செய்கு தம்பிப் பாவலர். சென்னையில் இட்டா பார்த்தசாரதியின் அச்சகத்தில் தலைமைப் பார்வை பணியாளராக பணியாற்றி வந்த பாவலர், நாயுடுவின் ஒத்துழைப்போடே அருட்பா மறுப்பாளர்களை வென்றார். மருட்பாக் கூட்டத்தார் எழுப்பியிருந்த பல கேள்விகளுக்கு இலக்கண இலக்கிய ஆக்கப் பூர்வமாக விடையளித்தார். ஒரு இஸ்லாமியராக இருந்தபோதும் சமரசப் பாங்கோடு அருட்பாவினது உண்மையை அவர் நிலைநாட்டியது போற்றுதலுக்குரியது என்பர் ஆய்வாளர் ப.சரவணன். (மயிர் பிளக்கும் வாதங்கள் – அருட்பா – மருட்பா போரை முன் வைத்து, அறியப்படாத தமிழ் உலகம், சென்னை, 2011, பக்கம் 208)

தந்தை பெரியார்

1930 களிலேயே குடியரசு இதழில் விளம்பரம் செய்து அருட்பிரகாச வள்ளலார் பாடல்களை அச்சிட்டு 2 அணா விலையில் வெளியிட்டு மகிழ்ந்தவர் தந்தை பெரியார். 4.10.1947 குடியரசு இதழில் வள்ளலார் பாடல்களை போற்றிப் புகழ்ந்தவர் தந்தை பெரியார். ஓவியப் பாவலர் கெழுதகை நண்பர் மு.வலவன் அருட்பாவும் அரசியல் இயக்கங்களும் எனும் 224 பக்கங்களைக் கொண்ட அற்புதமான நூலை 1992 இல் தந்துள்ளார். அடியேனுக்கு அதனை அன்பளிப்பு செய்தார். அதிலுள்ள செய்திகளை விவரிக்கின் பெருகும். பெரியாரும் இராமலிங்கரும் என்று பகுத்தளிவு வெளியீடாக இரண்டனா விலையில் வள்ளலார் பாடல்களை வெளியிட்டு மகிழ்ந்தவர் தந்தை பெரியார்.

அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா 6.2.1942 திராவிட நாடு இதழில் வரட்டுமே வள்ளலார் என்று அற்புதமான கட்டுரை தீட்டியுள்ளார்.

புத்தர் சொன்னார், சித்தர் கூறினார், மாகவீரரும், முகம்மது நபியும் (ஸல்), காந்தி அடிகளும், இராமலிங்க அடிகளும்

சொன்னார்கள் என்று தான் சொல்கிறோமே தவிர அவற்றை செய்து காட்டுகிறோமா என்று அறிஞர் அண்ணா கேள்வி எழுப்பினார். (அறிஞர் அண்ணாவின் அறிவுரைகள் பக்கம் 43)

சட்டாவதானம் செய்வதர்கள் இருவர் அட்டாவதானம் செய்தவர்கள் 56 பேர் அவர்களில் ஒருவர் நா.கதிரைவேல் பிள்ளை. தசாவதானம் செய்தவர்கள் ஏழு பேர். சோடசாவானம் செய்தவர்கள் நால்வர். சதாவதானம் செய்தவர்கள் இராமநாதச் செட்டியார், தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர், சரவணப் பெருமாள் கவிராயர், சுப்பிரமணிய ஐயர், செய்குதம்பிப் பாவலர், பாலசுப்பிரமணிய ஐயர், மீனாட்சி சுந்தர ஐயர், முத்துச்சாமி அய்யங்கார், வாலசுப்பிரமணி ஐயர் என ஒன்பது. **தமிழகத்தில் சரித்திரத்தில் சதாவதானம் செய்து சரித்திரப் புகழ் பெற்று நிலைத்து நிற்பவர் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர். அதுபோல திருவருட்பிரகாச வள்ளலாரின் பாடல்கள் அருட்பாவே என்று வாதிட்டு வென்று நிலைநாட்டிய பெரும் புகழுக்குச் சொந்தக்காரர் செய்கு தம்பிப் பாவலர்.** அவர் குறித்து வரலாற்றின் பக்கங்களில் மறந்துபோகாமலிருக்க மறக்கப்பட்ட சரித்திரச் செய்திகளை மறுபடியும் நினைவூட்ட எளியேன் தந்துள்ள இச்சிறு நூல் செய்கு தம்பிப் பாவலரின் புகழுக்கு துளியேனும் புகழ்சேர்க்குமென்றால் அதுவே அடியேனுக்குப் போதுமானது.

பாவலரும் வள்ளலாரும் என்ற கட்டுரையில் அரசு. ஆறுமுகம் சொல்கிறார்;

இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை ஆதரித்து செய்கு தம்பிப் பாவலர் பேச வேண்டுமென்ற நியதி இல்லை. ஏனெனில் இருவரும் வெவ்வேறு சமயத்தவர் என்று பிறர் கூறினாலும் அதில் வியப்பில்லை எனினும் காலம் அழிந்தாலும் தான் அழியாது என்று காட்டி வரும் தமிழ்ப் பண்பு நீங்காத பாவலருக்கு அஞ்சலி செலுத்துவோம். அவர் உள்ளம் நமது உள்ளம் என்று கொண்டாடுவோம்.

‘நீங்காது அவர் புகழ் வளர்க’

என்று பலர் பாடுவோம்.

பாவலர் எந்தத் தமிழ் உணர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ அந்தத் தமிழ் உணர்ச்சியை வளர்த்து வருவோம்!

வாழ்க வளர்க வள்ளலார் புகழ்
வாழ்க வளர்க செய்கு தம்பிப் பாவலர் புகழ்!

வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை பாரமதி யோடுவெளி
தானுமில்லை யேகமென்ற தத்துவத்தை நத்தேமோ
தருமநபி நாயகமே தத்துவத்தை நத்தேமோ!

விண்ணுமில்லை மண்ணுமில்லை மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை மேடுமில்லை மூடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை சார்ந்தகர ணாதிகளின்
கண்ணுமில்லை யேகமென்ற கத்தநிலை நத்தேமோ
கருணைநபி நாயகமே! கத்தநிலை நத்தேமோ!

– செய்குதம்பிப் பாவலர்
'நபிகள் நாயக மான்மிய மஞ்சரியில்'

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ வகையறிவேன் இந்த
ஏழைபடும் பாடுனக்கும் திருவுளச்சம்மதமோ?
இதுதகுமோ இது முறையோ இது தருமந்தானோ
மாழை மணிப்பொது நடஞ்செய் வள்ளல்யான் உனக்கு
மகலைனே நீ எனக்கு வாய்ந்த தந்தை அலையோ
கோழையுலகு உயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள் நின் அருளொளியைக் கொடுத்தருளிப்பொழுதே

வள்ளலார் திருவருட்பா
ஆறாம் திருமுறை பிரியேன் என்றல்
பாடல் *4*

வரலாற்றியல் அறிஞர் செ.திவான்

எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (தொகுதி – 1) (சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10,000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் (உணர்வு வரா இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல ..... (சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5. நபி பெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர் முகம்மது (ஒலி) ஞானப் பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9. குடை
10. சிந்தனைக்கு
11. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12. வ.உ.சி.யும் பெரியாரும்
13. வ.உ.சி.யும் தொல்காப்பியரும்
14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி.யின் அரசயில் பெருஞ்சொல்
16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப் போரில் விஸ்கர்மாக்கள்
18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20. உண்மையின் சவுக்கடி

21. கூடங்குளம் அணுஉலையை மூடு
22. குடைப்புரட்சி
23. வாகை சூடி வரும் வைகோ
24. கலைஞரை வென்ற வைகோ
25. வைகோவின் பொன்மொழிகள்
26. சேது சமுத்திரத் திட்ட வரலாற்று நாயகன் வைகோ
27. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
28. வ.உ.சி.யின் நூற்கோவை
29. வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
30. ஆன்மீகச் சிந்தனை
31. வேதங்கள் விலக்கிடும் விக்கிரக வழிபாடு
32. செய்துத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
33. கட்டப்பொம்மனின் கடைசி நாட்கள்
34. வி.ஓ.சி. கண்ட பாரதி
35. இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
36. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
37. இறைவனின் திருநாமங்கள்
38. இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
39. அண்ணாவின் மறுபக்கம்
40. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
41. பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி
42. விடுதலையின் நிறம் பச்சை
43. ஆரியப் பாதையில் பசுவதை
44. கட்டப்பொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
45. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
46. சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயகமான்மியமஞ்சரி

47. வ.உ.சி.யின் உயில்

48. ஆலிப்புலவர்

49. தியாக நெருப்பில் வைகோ

50. வ.உ.சி.யும் திருக்குறளும்

51. அணைய வேண்டிய அயோத் 'தீ'

52. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

53. வியத்தகு சாதனையாளர் வைகோ

54. மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்

55. வைகோ... வெற்றிப்பாதை... வீரச்சங்கொலி

56. செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மெய்தீன்

57. விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி –2)

58. திராவிட இயக்கம் – வரலாற்றுக் குறிப்புகள்

59. வேலூர்ப் புரட்சியில் (1806) வீரமிகு முஸ்லிமகள் (தொகுதி –3)

60. இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள் (தொகுதி –4) 1072 பக்கங்கள்

61. சங்கொலி

62. பம்பரம்

63. சுயமரியாதை சூரர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி

64. இந்து – முஸ்லிம் ஒற்றுமை

65. புரட்சிக் கனலில் பொசுங்கும் துரோகம்

66. மாலிக்காபூர்

67. சிந்னைச் சிற்பி வி.பி.சிற்றரசு

68. அறிஞர் அண்ணாவின் அமுதமொழிகள்

69. கழகத்தின் காவலர் கே.வி.கே.சாமி

70. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞானபோத உரை

71. வ.உ.சி.யின் சுயசரிதை

72. அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி
73. கே.வி.கே. சாமி கட்டுரைகள்
74. நாடோடி மன்னன்
75. விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்
76. கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?
77. பாரதி செல்லம்மாள் உயில்
78. தேவநேயப் பாவாணரின் கிறிஸ்த்தவக் கீர்த்தனம்
79. தேவநேயப் பாவாணரின் துவாரகை மன்னன்
80. இந்திய சுதந்திரப் போரில் விஸ்வகர்மாக்கள்
81. மகாகவி பாரதியின் இஸ்லாத்தின் மகிமை
81. வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராசர்
82. பரிசு பெறாத பாரதி பாடல்
84. உமறுப்புலவர் விருதும், உள்ளத்து உணர்வும்
85. அறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராசர், தமிழர் தலைவர் வைகோ
86. வல்லிக்கண்ணன் கடிதங்கள்
87. இந்திய சுதந்திரப் போரில் வக்கம் அப்துல் காதர்
88. சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறை வாசம்
89. கம்பனில் அனுமனும் சிவனும்
90. வரலாற்றுப் பாதையில் பசுவதை
91. வரலாற்றுன் வெளிச்சத்தில் போர்த்துக்கீசியர்கள் குஞ்ஞாலிகள்
92. வ.உ.சி. வாலேஸ்வரன்
93. வ.உ.சி.யும் சைவ சமயமும்
94. வீர வ.உ.சி.யும் ஆஷ் கொலையும்
95. இராமலிங்க வள்ளலாரும் செய்குத்தம்பிப் பாவலரும்
96. தி.க.சி. என்றொரு மானுடன்

கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி
ம.தி.மு.க பொதுச்செயலாளர்
வைகோ
அவர்களின்
அன்புத்தாயார்
வை.மாரியம்மாள்
அவர்கள்
மறைவிற்கு..
இதய அஞ்சலி!
காலத்தால் குலையாத கூரறிவு நீ!
காற்றுக்கு கலங்காத மாமலை நீ!
பாலொத்த நட்புமனம் வெண்மையும் நீ!
பனியொத்த மலர்ச்சிரிப்பு மென்மையும் நீ
செ.திவான்